# பூவிதழும் புனிதமும்



உ.நிசார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவிதழும் புனிதமும்

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

புத்தகத்தின் பெயர் : பூவிதழும் புனிதமும்

நூலாசிரியர் : உ.நிசார் அனுமதிப்பத்திர இலக்கம் : EPAB / 02 /10578

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2016.05.03
கல்வி அமைச்சு, "இசுருபாய," பத்தரமுல்ல.
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி :2022.05.02

700745
University of Peradeniya
12 DEC 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

**கவிதை**

01. கனவுப் பூக்கள் - 2005
02. ஓயாத அலைகள் - 2007
03. திராட்சை ரசம் - 2009
04. ஒரே பூமியில் நானும் நீயும் - 2015

**சிறுகதை**

01. உயிர்வலி - 2009
02. பச்சை மனிதன் - 2013

**சிறுவர் பாடல்கள்**

01. நட்சத்திரப் பூக்கள் - 2006
02. வெண்ணிலா - 2007
03. மலரும் மொட்டுக்கள் - 2007
04. சிறகு விரி - 2008
05. பாவிருந்து - 2009
06. இளைய நிலா - 2009
07. நல்ல தங்காள் - 2010
08. கோமாதா - 2014

**சிறுவர் கதைகள்**

01. முத்துக்கணையாழி பாகம் 1- 2010
02. யானையும் பானையும் - 2011
03. முத்துக்கணையாழி பாகம் 2- 2011
04. காடும் கதை சொல்லும் - 2013
05. பாணியில் மிதந்த தோணி - 2015

12 DEC 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டது
NL/BRL/ 1189

# பூவிதழும் புனிதமும்

சிறுகதைத் தொகுதி

உ. நிசார்

University of Peradeniya
12 DEC 2019
LIBRARY

பானு வெளியீட்டகம்

700745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் உள்ளடக்கம் ஆனது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

பூவிதழும் புனிதமும்
© எச். எல். எம். நிசார்
புனைப் பெயர் - உ. நிசார்
- உடுநுவரை நிசார்
முதல் பதிப்பு - 2016
ISBN 978-955-0503-10-0

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

நிசார். உ.
பூவிதழும் புனிதமும் / உ.நிசார். - மாவனல்லை:
பானு வெளியீட்டகம், 2016. -
ப. 112 : செமீ. 21
ISBN 978-955-0503-10-0
i. 894.8113 டிவி 23 ii. தலைப்பு
1. தமிழ் சிறுகதைகள்

University of Peradeniya
12 DEC 2019
LIBRARY

அட்டைப் படம் : எம்.எம். நதீம்

வெளியீடு : பானு வெளியீட்டகம்
70/3, புதிய கண்டி றோட்,
மாவனல்லை.

அச்சுப்பதிவு : எம்.ஜே.எம். அச்சகம்
119, பிரதான வீதி,
மாவனல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அன்பு மகன்
ரிஸ்வி அஹமடுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சில இலக்கியவாதிகளின் நூல்களுக்கு முன்னுரை அல்லது அணிந்துரை எழுதுவது என்பது, என்னைப் பொறுத்தவரை ஒரு மகிழ்ச்சியான அனுபவம். அத்தகையவர்களில் ஒருவரே எழுத்தாளர், கவிஞர் உ. நிசார். இயல்பாகவே இனிய சுபாவமும், நற்பண்புகளும் கொண்டவர். அவர் எனது வேலைப்பளுக்களின் காரணமாக இந்த அணிந்துரை எழுதுவதில் காலதாமதம் ஏற்பட்ட போதிலும்கூட, அதனைப் பொறுமையாகச் சகித்துக் கொண்டார். அத்தகைய பண்பாளர் உ. நிசார்.

1979இல் தினகரன் வாரமஞ்சரியில் அவர் எழுதிய உலக சாதனை என்ற கவிதை மூலம் இலக்கிய உலகுக்கு நிசார் அறிமுகமானார். சிங்கள மொழியிலேயே அவர் கல்வி பெற்றிருந்த போதிலும், தமது சுயமுயற்சி காரணமாகத் தமிழ்ப் படைப்பாளியாகத் தம்மை அவர் மாற்றிக் கொண்டார். 1979இல் அட்டாளைச் சேனை ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியில் அவர் ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள ஆரம்பித்ததில் இருந்து அவரது தமிழ்ப் படைப்பாக்கம் எழுச்சி பெறத் தொடங்கியிருக்கிறது. இடையில் ஒரு பத்தாண்டு காலம் இலக்கிய உலகில் அவர் அஞ்ஞாதவாசம் புரிந்த போதிலும், 2004இல் இருந்து மீள் எழுச்சி பெற்று, மீண்டும் இலக்கிய உலகில் புகுந்துள்ளார். அதன்பின்னர் அவர் இலக்கிய உலகில் புரிந்த சாதனைகள் அபரிமிதமானவை. சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம் எனப் பல்பரிமாணம் கொண்ட இலக்கியவாதியாக உ. நிசார் தம்மை உயர்த்திக் கொண்டுள்ளார். தாம் கற்பித்த பாடசாலைகளின் தேவைகளுக்காக நாடகங்களையும் எழுதியுள்ளார். சிங்களத்திலும் அவர் கவிதைகள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமது படைப்புகளுக்காக அவர் பல்வேறு பரிசுகளையும், கலாபூஷணம் போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

அவரின் படைப்பாற்றலின் ஒரு பகுதி சிறுகதைப் படைப்புகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதுவரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்வலி, பச்சைமனிதன் ஆகிய அவரது சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவை அவரின் சிறுகதைப் படைப்பாளுமையைச் சிறப்பாக இனங்காட்டுகின்றன. இப்போது வெளிவரும் அவரது பூவிதழும் புதினமும் என்ற இச்சிறுகதைத் தொகுதி சிறு கதைத்துறையில் நிசாரின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுகிறது எனலாம். இத்தொகுதியில் இரவிலொரு பகல், பூவிதழும் புனிதமும், அன்பளிப்பு, வன்முறைகள், நெருப்பு, விடிவு, பெற்றது குற்றம், ரௌத்திரம் பழகு, சுவர்க்கமும் நரகமும், ஆகிய ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நிசாரின் ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு அனுபவத்தைத் தருகின்றது. இலக்கியவாதி கலைத்துவம் வாய்ந்த ஒரு சமுதாய வைத்தியன் என்பதை நிசாரின் படைப்புகள் உணர்த்துகின்றன.

முஸ்லிம் சமுதாயப் பின்னணியில் நிசாரின் அனைத்துக் கதைகளும் படைக்கப்பட்டுள்ளன. சமுதாய நிகழ்வுகளைக் கூர்ந்து அவதானித்து, அவற்றைக் கலைத்துவத்தோடு படைப்புகளாகக் கொணரும் ஆற்றல் நிசாருக்கு இயல்பாகக் கைவரப் பெற்றிருக்கிறது என்பதை, அவரின் சிறுகதைகள் இனங்காட்டுகின்றன. முஸ்லிம் சமுதாய மாந்தரின் இயல்பான உணர்வுகளையும், போக்குகளையும் அவரின் படைப்புகள் அற்புதமாக எடுத்துக்காட்டுகின்றன. ஒரு சமுதாயவியல் அறிஞன் சமுதாயத்தை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்கும் வேலையை, ஓர் எழுத்தாளன் கனகச்சிதமாகக் கலைத்துவத்துடன் செய்துவிடுகிறான். அத்தகைய ஓர் அனுபவத்தை நிசாரின் சிறுகதைப் படைப்புகளிலும் தரிசிக்க முடிகிறது.

நிசாரின் சிறுகதைகளில் முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்குகள் அதியற்புதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பிரதேசத்து முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்குகளை ஆய்வுசெய்ய விரும்பும் எந்தவொரு மொழியியழ் அறிஞரும் தாராளமாக அவர் படைத்த பாத்திரங்களின் பேச்சுமொழியைத் துணையாகக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. புனைகதைகளில் பேச்சுமொழி சரிவரப் பயன்படுத்தப்படும் போதுதான் பாத்திரவார்ப்புச் சிறப்புப் பெறுகிறது. இல்லையேல், குறிப்பிட்ட பாத்திரவார்ப்பு தோல்வியிலேயே முடிந்துவிடும் அபாயம் இருக்கிறது. நல்லவேளையாக நிசாரின் படைப்புகளில் இக்குறை காணப்படவில்லை. அவர் இயல்பாகவே பாத்திரங்களின் பேச்சு மொழிமீது கொள்ளும் அக்கறையே இதற்கான காரணமாகும்.

இத்தொகுதியில் உள்ள எல்லாச் சிறுகதைகளுமே குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. அவற்றுள், என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவர்ந்தவையாக இரவிலொரு பகல், வன்முறைகள், விடிவு, பெற்றது குற்றம், ரௌத்திரம் பழகு, சுவர்க்கமும் நரகமும், ஆகியவை விளங்குகின்றன. எந்தவித மேல்பூச்சும் இல்லாமல், தனி மனிதர்களதும், சமுதாயத்தினதும் இயல்பான அசைவியக்கத்தை நிசாரின் சிறுகதைகள் காட்டுகின்றன. சிறுகதைத் துறையில் அவர் தமக்கென ஒரு நிலையைத் தக்கவைத்து வருகிறார். நிசார் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் கால் பதித்துத் தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். அது பாராட்டத்தக்கது. எனினும், என்னைப் பொறுத்தவரையில், சிறுகதைத் துறையில் நிசார் ஆழமாகவும், அகலமாகவும் கால் பரப்பி வருகின்றார் என்றே தோன்றுகிறது. எதிர்காலத்தில் இலங்கைச் சிறுகதைகள் பற்றி நோக்கும் எவரும் நிசாரைத் தவிர்த்து, அதனை நிறைவு செய்ய முடியாத நிலையை அவர் ஏற்படுத்தி வருகின்றார். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் மனச்சாட்சியின் குரலாக அவர் விளங்குகிறார்.

இலக்கியவாதி சமுதாயத்தின் குரலாக விளங்க வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக நிசாரின் சிறுகதைப் படைப்புகள் விளங்குகின்றன. அதனை நிரூபிக்கும் முறையில் இத்தொகுதியும் விளங்குவது பாராட்டத்தக்கது. எதிர்காலத்திலும் அவரது சிறுகதைத் தொகுதிகள் வெளிவர வேண்டும். நிசாரின் எழுத்து முயற்சிகளுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர் துரை மனோகரன்,
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பூவிதழும் புனிதமும் எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதியாக வெளிவருகிறது. இதனுள் ஒன்பது சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் 2011-2014 காலப் பகுதியில் எழுதப்பட்டவையாகும். இக்கதைகளுள் ஒரு சிலவற்றுள் வரும் சம்பவங்கள் பல தசாப்பத்தங்களுக்கு முன்பு நடந்தவையாகவே சித்தரிக்கப்படுகின்றன. அதனால் அக்காலகட்டத்துக்கு உரிய பேச்சு வழக்கை அக்கதைகளில் இம்பெறச் செய்துள்ளேன்.

நவநாகரிகங்கள் வந்து எமது கிராமங்களை ஆக்கிரமித்துக் கொள்ள, மொழி வழக்குகளும் மாற்றம் அடைந்திருப்பதை ஏனைய கதைகளில் பதிவு செய்து வைத்துள்ளேன்.

மின்சார மாபியாவை எதிர் கொள்ள ஒரு விஞ்ஞானி 2050இல் மேற்கொள்ளும் ஓர் ஆய்வை வைத்தே இரவிலொரு பகல் சிறுகதை எழுதப்பட்டுள்ளது.

நான் பிறந்து வளர்ந்த மண்ணில் என்னுடன் ஒட்டி உறவாடியவர்களுடன் நான் கண்டவைகளும் கேட்டவைகளும் எனது அனுபவங்களும் இக்கதைகளில் வரும் கதை மாந்தர்களை உருவாக்க எனக்கு உறுதுணையாயின. அதன் மூலம் எமது சமூகத்தில் உள்ள ஒரு சிலரின் அறியாமை, ஆதிக்கம், பொறாமை, சூது, பொய், கலவு, சூழ்ச்சி, இரக்கம், தயவு, கருணை, விட்டுக்கொடுத்தல் போன்ற பல்வேறு பண்புகளை படம்பிடித்துக் காட்டியுள்ளேன். அத்துடன் அடக்கி வைக்கப்பட்டிருந்த பெண்களின் எழுச்சியையும் ஒரு சில கதைகளில் முன் வைத்துள்ளேன். மத நம்பிக்கைகளில் ஏற்பட்டு வரும் தழம்பல்களால் சமூகத்தில் ஏற்படும் விபரீதங்களையும் சுட்டிக்காட்டி உள்ளேன்.

இங்கு வரும் சில சிறுகதைகளுக்கு அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசுகளும் சான்றிதழ்களும் கிடைத்துள்ளன. ஏனையவற்றுள் ஒரு சில, பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடகால முயற்சியொன்று இவ்வாறு நூலுருப் பெறுவதற்கு பலர் பல வழிகளில் எனக்கு உதவி செய்துள்ளனர். அவர்களுள், இங்கு வரும் சிறுகதைகளைப் படித்து, ரசித்து, மனமுவந்து அணிந்துரையொன்றை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கும் இந்நூலுக்கு அனுசரணை வழங்கிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்கும் கணினி வடிவமைப்புச் செய்து தந்த சியாட், ரினாஸ், பைஸல் ஆகியோருக்கும் அவற்றைச் செவ்வை பார்த்துத் தந்த கலாபூசணம் எம்.எம். மன்சூர், ஆசிரியர் செல்லதுரை ஆகியோருக்கும் அட்டைப் படத்தை வரைந்து தந்த ஆசிரியர் எம்.எம். நதீம் அவர்களுக்கும் எனது வாசகர்களுக்கும் எனது மனைவி மக்கள், மருமக்கள். சகோதர. சகோதரிகள், குடும்பத்தவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் இச்சிறுகதைகளை அவ்வப்போது வெளியிட்ட பத்திரிகை, சஞ்சிகைகளின் ஆசிரியர்களுக்கும் இந்நூலை அழகாக அச்சுப் பதிவு செய்து தந்த மாவனல்லை M.J.M. பதிப்பகத்தாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வண்ணம்

அன்புடன்
உ. நிசார்.
25.01.2016

70/3, புதிய கண்டி ரோட்,
மாவனல்லை.
தொ.பே.இல. 077 8216281



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | vii -ix |
| முன்னுரை | xi-xii |
| உள்ளடக்கம் | xiii |

1. இரவிலொரு பகல்..................................01-12
2. பூவிதழும் புனிதமும்..............................13-24
3. அன்பளிப்பு..........................................25-33
4. வன்முறைகள்........................................34-42
5. நெருப்பு ...............................................43-56
6. விடிவு...................................................57-66
7. பெற்றது குற்றம்....................................67-77
8. ரௌத்திரம் பழகு...................................78-87
9. சுவர்க்கமும் நரகமும்.............................88-96




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. இரவிலொரு பகல்

பேராசிரியர் யூஸுப் ஐமான் ஓர் ஆய்வுக்குத் தேவையான தாவரமொன்றை அவதானிக்க கொழும்பில் இருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவருடன் அவரது உதவியாளர் கலாநிதி அம்ரி மரிக்காரும் இருந்தார். அன்று ஒரு விடுமுறை தினமாக இருந்ததனால் பாதையில் குறைந்த அளவு வாகனங்களே ஓடிக் கொண்டிருந்தன. அதனால் பேராசிரியரின் கார்ச்சாரதி இஸ்மத் சற்று வேகமாகவே காரை ஓட்டிச் சென்றான். அதைப்பற்றி பேராசிரியருக்கு எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஓர் ஆய்வு சம்பந்தமான விடயமே அவரின் சிந்தனையில் சதா சுழன்று கொண்டிருந்தது. பேராசிரியரைத் தொடர்ந்து அவதானித்துக் கொண்டு வந்த கலாநிதி அம்ரி மரிக்கார் ஏற்ற தருணம் ஒன்று வரும்வரை காத்திருந்து பேராசிரியரின் மௌனத்தைப் பற்றி வினவி நின்றார்.

"புரொபசர் சேர், நீங்கள் எதுவுமே கதைக்காமல் வருகிறீர்கள். நான் நினைக்கிறேன்,நீங்கள் ஒரு விடயத்தை ஆழமாகச் சிந்திக்கிறீர்கள் என்று?"

"அம்ரி மரிக்கார், நீங்கள் நினைத்தது சரி. மின்வளத்துறை அமைச்சர் என்னிடம் ஒப்படைத்த ஆய்வு சம்பந்தமாக ஒரு அறிக்கை கேட்டிருக்கிறார். அவ்விடயமாக நான் இதுவரை செய்த ஆய்வுகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதனால் நாளுக்கு நாள் அவரின் அழுத்தங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. நாம் இப்போது செல்வதுகூட எமது ஆய்வுகளுக்குத் தேவையான ஒரு தாவரத்தின் பண்புகளை அவதானிப்பதுக்குத்தான்."

"புரொபசர் சேர், நீங்கள் அதைப்பற்றி எனக்கு எதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியத்தரவில்லையே ?"

"அம்ரி மரிக்கார், ஒரு சில விஞ்ஞானிகளும் அதிகாரிகளும் நான் போய் வரும் இடங்களை சதா அவதானித்த வண்ணம் இருக்கிறார்கள். அதனால்தான் நான் இந்த நடைமுறையைப் பின்பற்றுகிறேன். உங்களில் எனக்குச் சந்தேகம் இல்லை. எனது நடைமுறையைப் பற்றி நீங்கள் ஏதும் தவறாக நினைக்க வேண்டாம்."

"புரொபசர் சேர், நாம் அவதானிக்கச் செல்லும் அந்தத் தாவரம் பேராதனைத் தாவரவியல் பூங்காவில் இருக்குமென்றே நினைக்கிறேன்."

"பேராதனையில் அமைந்திருப்பது ஒரு செயற்கைத் தாவரவியல் பூங்கா. அதனால் அங்கே எமக்குத் தேவையான அந்தத் தாவரம் அநேகமாக இருக்காது. கண்டி தலதா மாளிகைக்குப் பக்கத்தில் இருக்கும் உடவத்த காட்டில் அந்தத் தாவரம் இருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. எமது ஆய்வுகளுக்கு அத்தாவரத்தினாலாவது ஏதும் நன்மைகள் கிடைக்குமா என்பதைக் கூட அதை நன்கு அவதானித்து அதன் பண்புகளை ஆராய்ந்ததன் பின்புதான் முடிவு செய்ய வேண்டி வரும்."

"புரொபசர் சேர், நாம் கற்றுணர்ந்தவற்றுக்கு இணங்க, 20ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே எமது நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு நிலவி வந்திருக்கின்றது. மனிதனின் தான்தோன்றித்தனமான சில நடவடிக்கைகளாலும் அவன் இயற்கைக்குச் செய்த தீங்குகளினாலும் நீர் மின்சார உற்பத்தி அருகிப் போக, அவைதான் மின்சார மாபியா வளர்வதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம் என நான் நினைக்கிறேன்."

"அம்ரி மரிக்கார், நாம் இப்போது 2050 ஐ அண்மித்து விட்டோம். 20ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து இது வரை மின்சார மாபியா வளர்வதற்கு நீர் மின்சார உற்பத்தி அருகிப் போனதை விட மேலும் பல காரணங்கள் இருந்திருக்கின்றன. அவை எல்லாவற்றையும் விட கடந்த 50 வருட காலப் பகுதியில் உருவான சகல அரசுகளும் அதன் தலைவர்களும் அமைச்சர்களும் அதிகாரிகளும் இந்த மாபியாவை வளர்க்க உதவி செய்திருக்கிறார்கள் என்பதுதான் முக்கியமானதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாகக் கருதப்பட வேண்டியுள்ளது.''

''புரொபசர் சேர் நீர், நிலக்கரி, டீசல் என பல்வேறு மூலப் பொருட்களால் நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டு வந்தாலும் ஒவ்வொரு கால கட்டங்களில் அப் பொருட்களின் பற்றாக்குறை மின் உற்பத்தியை வெகுவாகப் பாதித்து விட்டது அல்லவா.?''

''ஆம், அதைவிட சனத்தொகை வளர்ச்சி, கைத்தொழில்களின் அதிகரிப்பு, இலக்ட்ரோனிக் கருவிகளின் பாவனை, புவி வெப்பமடைதல், ஆடம்பர விழாக்கள், மூட நம்பிக்கைகள், பக்திப் பரவசம் என்பவற்றால் மின்பாவனை அதிகரித்து கொண்டு வந்துள்ளது என்பதுதான் உண்மை. அதிகரித்து வந்த மின்பாவனையை ஈடு செய்ய, மனிதன் அணுசக்தியை பயன்படுத்தப் போய் பல அனர்த்தங்களையும் சந்தித்து இருக்கிறான்.''

''புரொபசர் சேர், எமது ஆய்வின் மூலம் உருவாகப் போகும் ஒளித்தாவரத்தின் மூலமும் இயற்கை அனர்த்தங்கள் உருவாகும் சாத்தியங்கள் இருக்கின்றனவா?''

''ஏனில்லாமல் ? வரலாறு பூராக மனிதன் இயற்கைக்கு சவால் விட்ட போது அதன் மூலம் ஏராளமான பக்க விளைவுகளும் அனர்த்தங்களும் உருவாகி இருக்கின்றன. எமது ஒளித்தாவரத்தாலும் அவ்வாறான பக்கவிளைவுகள் உருவாகும் சாத்தியங்கள் உள்ளன. நாம் அவ்வாறான பக்க விளைவுகளைக் குறைத்து ஒளித்தாவரத்தை உலகுக்கு அறிமுகம் செய்து வைக்க நீண்ட காலம் எடுத்தாலும் அதன் மூலம் குமிழ்களுக்கான மின் பாவனையை வெகுவாகக் குறைத்து ஏனைய தேவைகளுக்கு மின்சாரத்தை தாராளமாகப் பயன்படுத்த முடியுமானதாக இருக்கும்.''

''புரொபசர் சேர், சென்ற நூற்றாண்டில் இருந்து இதுவரை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சீனாவிலும் வாழ்ந்த பல விஞ்ஞானிகள் ஒளி உமிழும் ஒரு வகைத் தாவரங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டு இருந்தாலும் அவர்களுக்குப் பூரண வெற்றி கிட்டவில்லை. எனினும் நீங்கள் மிகவும் திறமைசாலி. அதுமட்டுமல்ல, மரபணுவியலில் பாண்டித்தியம் பெற்றவர். வெற்றி கிட்டும் வரை ஆய்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேடுத்துச் செல்பவர். அதனால் எமது நாடு உங்களில் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறது."

அப்போது சாரதி இஸ்மத் குரல் கொடுத்தான்.

"சேர், உங்களுடைய மாமனார் வீட்டுக்கு அருகே நாங்கள் வந்து விட்டோம்".

"நாம் கொழும்பில் இருந்து அவ்வளவு தூரம் வந்து விட்டோமா? சரி, மாமனார் வீட்டுக்குப் பக்கத்தில் காரை நிறுத்து. நான் சிறிது ஓய்வு எடுத்து விட்டுத்தான் கண்டி நோக்கிச் செல்ல வேண்டும்."

அதன் பிரகாரம் மாஓயாவின் மீதிருந்த பாலத்தைத் தாண்டி சற்றுத் தூரம் சென்ற கார் பேராசிரியரின் மாமனார் வீட்டுக்கு முன்னால் நிறுத்தப்பட்டது.

பேராசிரியரும் அவரது உதவியாளர் அம்ரி மரிக்காரும் காரில் இருந்து இறங்கிக் கொண்டனர். வீட்டின் கேட் மூடப்பட்டிருந்ததனால் கலாநிதி அம்ரி மரிக்கார் அழைப்பு மணியை அழுத்த, சற்று நேரத்தில் பேராசிரியரின் மாமனார் அங்கே சமுகம் கொடுத்தார்.

"மாமா, அஸ்ஸலாமு அலைக்கும்."

"வஅலைக்குமுஸ்ஸலாம். வந்திருக்கிறது எங்கட புறொபசர் மகனல்லவா? வாங்க, வாங்க?"

மாமனார் மிக்க மகிழ்ச்சியுடன் பேராசிரியரை வரவேற்றார்.

தனது தேவைகளுக்காகக் கண்டி நோக்கிச் செல்லும் ஒவ்வொரு முறையும் பேராசியர் அவர்கள் அங்கே தாமதித்து ஓய்வு எடுத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

"மாமா, முன்பு இருந்ததை விட இந்த பகுதியிலும் வெப்பம் அதிகரித்து இருக்கிறது போல."

"மனிதர்கள் தங்களது அற்ப தேவைகளுக்காக வேண்டி மரம் மட்டை, செடி கொடி, வயல் வெளி எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள். அதனால் இந்தப் பிரதேசத்திலும் கால நிலை மாறிவிட்டது. சில காலங்களில் இந்த மாஓயா கூட வற்றிப் போகிறது."

"மாமா, நாங்கள் இயற்கைக்கு தீங்கு செய்தால் இயற்கை எமக்கும் தீங்கு செய்யும் என்பதுக்கு இது ஒரு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்."

"மகன், சற்று பொறுங்கள், செவ்விளநீர் இருக்குகிறது. அது தாகத்துக்கு இதமாக இருக்கும்."

அவ்வாறு சொன்ன மாமனார் அங்கிருந்து அகன்று செல்ல, பேராசிரியர் பக்கத்தில் இருந்த தனது பாட்டனாரின் நூலகத்துக்குள் நுழைந்து கொண்டார். அங்கே கணிதம்,விஞ்ஞானம்,அறிவியல், சமுகவியல், சரித்திரம், இலக்கியம், ஜோதிடம், கைரேகை சாத்திரம் என பல்வேறுபட்ட நூல்கள் இருந்தன. அவற்றுள் ஒரு சில நூல்களை எடுத்து மேலெழுந்த ரீதியாக நோட்டமிட்ட அவரின் கவனம் ஒரு நூலில் இருந்த சில பக்கங்களில் நிலைத்து நின்று விட்டது. 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆப்ரஹாம் கோவூர் எனும் பகுத்தறிவுவாதியால் எழுதப்பட்டு, சிங்களத்தில் மொழி பெயர்கப்பட்டிருந்த நூலொன்றே அது. அந்நூலில் இருந்த ஓர் அத்தியாயம் அவரை மிகவும் கவர்ந்தது. 'ஓலுமடுவில் பற்றி எரியும் வனம்' எனும் தலைப்பில் எழுதப்படிருந்த அவ்வத்தியாயத்தை மேலெழுந்த ரீதியாக வாசித்த அவருக்கு அங்கு வரும் தாவரம் கிடைக்குமாயின் அதைத் தனது ஆய்வுகளுக்கு உட்படுத்தி வெற்றி பெற முடியுமாகும் என ஓர் எண்ணம் ஏற்பட்டது. அதன் பண்புகளுக்கு அமைய தாம் இப்போது அவதானிக்கச் செல்லும் தாவரம் கூட அதை ஒத்த ஒரு தாவரமாக இருக்கலாம் எனவும் அவருக்கு எண்ணத் தோன்றியது.

அப்போது அவரது மாமனார் செவ்விளநீருடன் அங்கே சமுகமளித்தார்.

"மகன், செவ்விளநீரைக் குடித்து விட்டு புத்தகத்தை வாசியுங்கள்".

செவ்விளநீரைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் அவர்கள், அதை அங்கிருந்த கதிரையொன்றில் அமர்ந்து அருந்தி முடித்தார்.

"மாமா, இந்தப் புத்தகத்தில் உள்ள ஒரு விடயம் எனது ஆய்வுகளுக்காகத் தேவைப்படுகிறது. அதை நான் எடுத்துச் சென்று, படித்து விட்டு, மீண்டும் வரும் போது எடுத்து வருவேன். அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன், உங்களுக்கில்லாத புத்தகமா? நீங்கள் இளம் வயதிலேயே விஞ்ஞானத்துறையில் ஒரு பேராசிரியராக உருவாகி விட்டீர்கள். அது எங்களுடைய குடும்பத்துக்கு பெருமை தருகிறது. பாட்டனார் இருந்திருந்தாரென்றால் அவரும் சந்தோஷப் பட்டிருப்பார். சிறுவயது முதல் உங்களுக்கு இருந்த அறிவையும் ஆற்றலையும் வைத்து நீங்கள் என்றோ ஒரு நாள் விஞ்ஞானத்துறையில் ஒரு பேராசிரியராக வருவீர்கள் என அவர் அடிக்கடி சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது."

"மாமா, பாட்டனாரின் இந்த நூலகத்தை நீங்கள் நன்கு பராமரிக்கிறீர்கள்.அதைப் பற்றி நான் மிகவும் மகிழ்சி அடைகிறேன். இப்போது எனது ஆய்வொன்று சம்மந்தமாகத் தகவலொன்றைப் பெறுவதற்கு அவசரமாக ஒரு பயணம் போக வேண்டி இருக்கிறது. அதனால் எனக்கு உத்தரவு தாருங்கள்".

பேராசிரியர் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டு காரில் வந்து அமர்ந்து கொண்டார்.கார் கண்டியை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது. அவர் கலாநிதி கோவுரின் நூலில் குறிப்பிட்ட அத்தியாயத்தை பலமுறை வாசித்தார்.

"சேர், உங்களது பாட்டனாரின் நூலகத்தில் இருந்து எடுத்து வந்த புத்தகத்தின் ஒரு சில பக்கங்களை நீங்கள் பலமுறை வாசிப்பதை நான் அவதானித்துக் கொண்டுதான் வருகிறேன்."

"அம்ரி மரிக்கார், நீங்கள் நினைத்தது சரி. 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த ஒரு பகுத்தறிவுவாதியான கலாநிதி ஆப்ரஹாம் கோவூர் எழுதிய ஒரு புத்தகத்தின் சிங்கள மொழிபெயர்ப்புத்தான் இந்த புத்தகம், 'தெய்வங்களும் பூதங்களும்' என்பது தான் இந்த புத்தகத்தின் பெயர். அவர் ஒரு ஆசிரியராகத் தொழில் புரிந்தாலும் இந்தியாவில் கேரளாவை பிறப்பிடமாகக் கொண்டவர்.மனிதர்களின் மூட நம்பிக்கையை அகற்ற பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அவருக்கேற்பட்ட அனுபவங்களை இப்புத்தகத்தில் விபரிக்குகிறார்."

"புரொபசர் சேர், தங்களது ஆய்வுகளுக்கு உதவக் கூடிய ஏதாவது தடயங்கள் அந்தப் புத்தகத்தில் இருக்கிறதா?"

"ஆம், அம்ரி மரிக்கார். முல்லைத் தீவு, மான் குளத்தில் வாழ்ந்த ஒரு சிலரின் மூட நம்பிக்கையொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றுவதற்காகக் கலாநிதி ஆப்ரஹாம் கோவூர், 1930இல் ஒரு காட்டுப் பிரதேசத்துக்குள் அமைந்த ஒழுமடு எனும் இடத்துக்குச் சென்றிருக்கிறார். அங்கே ஒரு இடம் பற்றி எரிவது போல் இருந்ததாம். அங்கிருந்தவர்கள் அது சில பூதங்களின் செயல் என நம்பி, அச்சம் கொண்டு அப்பிரதேசத்தில் வேட்டையாடுவதைத் தவிர்த்து வந்திருக்கிறார்கள். அச்செயற்பாட்டுக்குப் பூதங்கள் காரணம் அல்ல, ஒரு பூஞ்சணம்தான் காரணம் என நிறுவி, அங்கிருந்த மக்களின் மூட நம்பிக்கையை அவர் அகற்றி இருக்கிறார்."

"புரொபசர் சேர், நாங்கள் இப்போது அவதானிக்கப் போகும் தாவரம் கலாநிதி ஆப்ரஹாம் கோவூர் சொன்ன தாவரமாகவே இருக்குமா ?"

"அம்ரி மரிக்கார், எனக்கு கிடைத்த தகவல்களின் படி, கலாநிதி ஆப்ரஹாம் கோவூர் சொல்லும் தாவரமும் நாம் அவதானிக்கப் போகும் தாவரமும் ஒன்றாகவே இருக்குமென நான் அனுமானிக்கிறேன். சரி,போய்ப் பார்த்து விடுவோம். எமது ஆய்வுக்கு அதனால் ஏதும் நன்மை விளையும் என்றால் அதன் மாதிரிகளை பெற்றுக் கொண்டு வருவோம்."

"சேர், நாம் உடவத்தை காட்டுக்கு அருகே வந்து விட்டோம்."

கார்ச் சாரதி இஸ்மத் குரல் கொடுக்க, பேராசிரியரும் அவரின் உதவியாளரும் வாகனத்தில் இருந்து இறங்கிக் கொண்டனர். அருகே பேராசிரியருக்குத் தகவல் கொடுத்த மாணவன் நின்று கொண்டிருந்தான்.

"சேர், வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது. அதனால் காட்டுக்குள் இருள் நன்றாகப் படர்ந்திருக்கும்."

"ஆனந்,நன்கு இருள் சூழ்ந்த இடத்தில் வைத்து நாம் அந்தத் தாவரத்தை அவதானிப்பதுதான் நன்றாக இருக்கும்."

"சேர், இருளில் நடந்து செல்வது சிரமம் என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன்."

"சரி, அதைப்பற்றிக் கவலை வேண்டாம். இந்த இயற்கை வனத்துக்குள் வாகனத்தில் செல்லாது நாம் நடந்து சென்றால்தான் அது இயற்கையைப் பாதுகாப்பதாக அமையும்."

"சேர் அப்படியென்றால் நாம் பயணத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிப்போம்."

அவர்கள் பயணத்தை ஆரம்பித்தனர். படிப்படியாக வனத்துக்குள் இருள் அதிகரித்துக் கொண்டே சென்றது.

"அம்ரி மரிக்கார் தலதா மாளிகையின் புனிதத்துவம்தான் இந்த வனத்துக்கு பாதுகாப்பு அளித்த வண்ணம் நிற்கிறது. இல்லாவிட்டால் மாநகரசபை பிரதேசம் ஒன்றுக்குள் இருக்கும் இவ்வியற்கை வனம் இன்று ஜன நடமாட்டம் நிறைந்த ஒரு குடியிருப்புப் பிரதேசமாக மாறியிருக்கும். அதனால் புனித தலதா சின்னத்தின் மீது சிங்கள பௌத்தர்கள் வைத்திருக்கும் பக்தியை நாம் பாராட்டத்தான் வேண்டும்."

நீரூற்றுக்களைத் தாண்டிக் கொண்டு, சிறு பற்றைகளை கோதிக் கொண்டு,பூச்சிகள் எழுப்பும் பல்வேறு சத்தங்களைப் பொறுத்துக் கொண்டு அங்கே நடந்து செல்வது சிரமமாக இருந்தாலும் அவற்றை அவர்கள் அப்போது பெரிதுபடுத்த வில்லை.

பதினைந்து நிமிட பயணத்தின் பின் அவர்கள் அவ்விடத்தை அடைந்து விட்டார்கள். கலாநிதி ஆப்ரஹாம் கோவூர் தனது நூலில் விபரித்த அதே காட்சியைக் கண்டு, பேராசிரியர் யூசுப் ஐமான் அதிர்ந்து போய் விட்டார். அப்போது கலாநிதி அம்ரி மரிக்கார் குரல் கொடுத்தார்.

"சேர், உங்களது முகத்தோற்றம் நீங்கள் பிரமித்துப் போய் விட்டீர்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது."

"ஆம், அம்ரி மரிக்கார். அன்று ஆப்ரஹாம் கோவூரும் இவ்வாறு பிரமித்துப் போய் இருப்பார் என்றே நான் நினைக்கிறேன்."

"அவரின் பிரமிப்பை அவர் எழுதிய நூலில் விபரித்து இருப்பார் என்றே நினைக்கிறேன். அதை நீங்கள் வாசித்துக் காட்டினால் எமக்கும் சுவைக்கக் கூடியதாக இருக்கும்."

"அம்ரி மரிக்கார், கோவூர் தனது வியப்பை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் 'அன்று இரவு இருளும் அமைதியும் சூழந்து, காணப்பட்ட வனத்துக்குள் ஒரு மைல் தூரம் பயணம் செய்த நாம் சிறிய மைதானம் ஒன்றுக்குள் நுழைந்தோம். அங்கிருந்து நூறு யார்களுக்கு அப்பால் பிரகாசமாய் இருந்த மரங்களைப் பார்க்குமாறு சின்னையா எமக்குச் சொன்னான். அவன் ஏற்கனவே சொன்னவை உண்மையாகவே இருந்தன. அவன் காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையில் ஏறத்தாழ முப்பது மரங்கள் நின்றன. உயர்ந்து வளர்ந்திருந்த அந்த மரங்களின் தண்டுப் பகுதிகள் நெருப்புத் தணலாக மினுங்கிய வண்ணம் இருந்தன. தொலைநோக்கி ஒன்றின் மூலமாக பார்வையிட்ட எனக்கு எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு காட்சியாகவே அது அமைந்து இருந்தது. அந்த மரங்களுக்கு இடையே இருந்த இரண்டு மரங்கள் எவ்வளவு பிரகாசமானதாக இருந்ததெனின் இலைகள் உதிர்ந்து போன அவற்றின் கிளைகள்கூட நன்கு புலப்படக் கூடியவையாக தென்பட்டன. அம்ரி மரிக்கார், என்னைப் போல நீங்களும் பிரமித்து நிற்பதை உங்கள் முகத்தோற்றம் காட்டுகிறது."

"புரொபசர் சேர், அந்த மரங்களில் காணப்பட்ட பிரகாசத்துக்கு காரணம் என்ன என்பதை, கலாநிதி கோவூர் எவ்வாறு விபரிக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன்."

"அவர், அந்த மரங்களில் ஏற்பட்ட பிரகாசத்துக்கு ஒரு வகை பங்கஸ்களே காரணம் என்கிறார், அவை உயிருள்ள மரங்களை விட, இறந்த மரங்களிலேயே அதிகளவில் காணப்படும் என்றும் குறிப்பிடுகிறார். பகல் நேரங்களை விட, இரவு நேரங்களிலேயே அவை அதிக பிரகாசத்தைத் தரும் என்பதையும் சொல்லி வைத்திருக்கிறார்."

"புரொபசர் சேர், நாம் இப்போது அவதானித்துக் கொண்டு நிற்கும் மரங்களில் உள்ள பிரகாசத்துக்கும் ஒரு வகையான பங்கஸ்களேதான் காரணம் என்று நான் நினைக்கிறேன."

அதன் பிறகு பேராசிரியர் அந்தப் பங்கஸ்களை மேலெழுந்த ரீதியாக அவதானித்தார்.

"அம்ரி மரிக்கார், உங்கள் கூற்று சரி. கலாநிதி கோவூர் குறிப்பிடும் பங்கஸ்களை ஒத்த ஒரு வகைப் பங்கஸ்கள்தான் இவையும்."

"புரொபசர் சேர், இவை எமது ஆய்வுகளுக்கு உதவுமென்றே நினைக்கிறேன். அதனால் இவற்றில் இருந்து சில பகுதிகளைப் பெற்றுக் கொள்வோமா?"

"வேண்டாம், இது ஒரு பொது இடம். முன் அனுமதியின்றி இங்கிருந்து எதையும் பெற்றுக் கொள்ளக்கூடாது. முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியொன்றுடன் பிறிதொரு தினத்தில் இங்கே வந்து நாம் அவற்றைப் பெற்றுக் கொள்வோம்."

அதன் பிறகு பேராசிரியர் கொழும்பு நோக்கி வந்தார். பிறிதொரு தினத்தில் மீண்டும் அங்கு சென்ற அவர் முறையாகப் பெற்றுக் கொண்ட அனுமதியுடன் அப்பங்கஸ்களில் இருந்து ஒரு தொகுதியைப் பெற்று தமது ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

காலம் வேகமாகச் சுழன்றது. மின்குமிழ் ஒன்றுக்குப் பதிலாக தாவரமொன்றின் உதவியோடு மாற்று ஒளியொன்றைக் கண்டு பிடிக்கும் அவரது ஆய்வுகளுக்கு எதிராக, மின்சார மாபியா தொழிற்பட ஆரம்பித்து இருந்தது. பேராசிரியரின் ஆய்வுகளுக்குச் செலவிடப்பட்ட பணத்தைப் போல பல மடங்குப் பணம் அவ்வாய்வைக் குலைப்பதற்காகச் செலவிடப்பட்டது. அது சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் அரசியல் தலையீடுகள் செய்யப்பட்டன. அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அதுமட்டுமல்ல ஒளித்தாவரத்தினால் இயற்கையின் சமநிலை பாதிப்படையலாம் என தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவும் ஆரம்பித்து விட்டனர். பேராசிரியருடன் கருத்து முரண்பாடு கொண்ட ஒரு சில விஞ்ஞானிகளும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அத்துடன் மின் குமிழ் உற்பத்தித் தொழிற்சாலைகளில் தொழில் புரியும் ஊழியர்கள் ஒளித்தாவர ஆய்வு வெற்றி பெறுமாயின் தாம், தமது தொழில்களை இழக்க வேண்டி வரும் என ஆர்ப்பாட்டங்கள் செய்ய ஆரம்பித்து விட்டனர். இவற்றால் அச்சமுற்ற மின்வளத்துறை அமைச்சு, ஒளித்தாவரக் கண்டு பிடிப்புக்கான ஆய்வை நிறுத்தி விடும் படி பேராசிரியரைக் கேட்டுக் கொண்டது. அதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்க ஒரு நாள் முகமூடிக் கும்பல் ஒன்றினால் அவரின் ஆய்வு கூடம் சுற்றி வளைக்கப்பட்டது.

"புரொபசர் சேர், உங்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ, நாங்கள் அவ்வளவு பணத்தையும் தருவதற்கு தயாராக வந்திருக்கிறோம். அதைப் பெற்றுக் கொண்டு, ஒளித்தாவரத்தை நீங்களே அழித்து விட்டு, அது சம்பந்தமான ஆய்வை நிறத்தி விடுங்கள். நீங்கள் அதற்கு தயங்குவதாயின் நாமே அதைச் செய்வதற்குத் தயாராக வந்திருக்கிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை அழித்து விட என்னால் முடியாது."

"நீங்கள் சொல்வதை ஏற்க நாங்கள் தயாரில்லை. அதை நீங்கள் வெளிநாடொன்றுக்கு விற்கப்போவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது."

"அத்தகவல் பொய்யாக இருக்கலாம். தயவு செய்து நீங்கள் எல்லோரும் இங்கிருந்து போய் விடுங்கள்."

"எமது மேலிடத்து உத்தரவுக்கு அமைய ஒளித் தாவரத்தை நீங்கள் எம்மிடம் ஒப்படைக்கும் வரை நாம் இங்கிருந்து போகமாட்டோம்."

"ஒளித்தாவரம் இன்னும் பரிசோதனை நிலையிலேயே உள்ளது. அது தீயசக்தியொன்றின் கைகளுக்குக் கைமாறினால் அதன் மூலம் இயற்கைச் சமநிலை அற்றுப் போகக்கூடிய சாத்தியங்கள் உள்ளன."

"புரொபசர் சேர்,நீங்கள் சொல்பவற்றை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. தயவு செய்து நீங்கள் இங்கிருந்து போய் விடுங்கள். அவ்வாறு நீங்கள் போக மறுத்தால் நாம் உங்களை இங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றிவிட்டு ஒளித்தாவரத்தைக் கைப்பற்றுவோம்."

பேராசிரியர் அங்கிருந்து வெளியேறவில்லை. அதனால் அவர் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு ஆய்வு கூடத்தில் பணியாற்றிய ஓர் ஊழியன் வந்து ஒளித்தாவரம் வைக்கப்பட்டிருந்த இரகசிய அறையைச் சுட்டிக் காட்டினான். உடனே ஒளித்தாவரத்தை அங்கிருந்து கைப்பற்றியவர்கள் ஆய்வுக்கூடத்துக்கு வெளியே அதை கொண்டு வந்து வைத்துவிட்டு அழிப்பதற்குத் தயாரானார்கள். சூரிய ஒளி, பரிசோதனை நிலையில் இருந்த ஒளித்தவாரத்தின் மேல் பட்டதுதான் தாமதம், அதன் கலங்கள் பிரிவடைய ஆரம்பித்து விட்டன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாவரமாக வளர்ந்து எங்கும் பெருக ஆரம்பித்து விட்டன. அதற்கு ஓர் எல்லை இருக்கவில்லை. ஆய்வுகூடத்தைச் சுற்றியிருந்த மரம், செடி, கொடிகளில் பற்றிப் படர்ந்து அவற்றின் சாற்றை உறிய ஆரம்பித்து விட்டன.

அதுமட்டுமல்ல, அதன் பெருக்கம் ஆய்வுகூட எல்லையைத் தாண்டி நகரை நோக்கி, நகரின் எல்லையைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டி நாட்டுக்குள்ளும் மிக வேகமாக பரவ ஆரம்பித்து விட்டது. அவை மரத்தளபாடங்களையும் விட்டு வைக்கவில்லை. அன்று மாலை படிப்படியாக இருள் சூழ ஆரம்பித்ததும் சூழல் எங்கும் ஒளிமயமாகிவிட்டது.

நன்றி - ஞானம் 2016 பெப்ரவரி

குறிப்பு: இச்சிறுகதை ஆக்கமும் அழிவும் எனும் தலைப்பிலேயே ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. பூவிதழும் புனிதமும்

கவிஞர் ரானா சஹாப்தீன் கோலாலம்பூரின் சனநெருக்கடி மிக்க ஒரு பகுதியில் நின்றவாறு, அங்கிருந்த அழகை ரசித்த வண்ணம் இருந்தார். இரட்டைக் கோபுரமும் அதைச் சூழ்ந்த வானளாவிய கட்டிடங்களும் வீதியின் இருபுற பசுமையான காட்சிகளும் மக்களின் சுறுசுறுப்பான நடமாட்டமும் அவரின் மனதைக் கவர்ந்திருந்தன. அப்போது அவரின் பார்வை, பாதையின் மறுபக்கமாக நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணின் மீது பட்டு நிலைத்து நின்றுவிட்டது.

“ஆ... அது அமீனாவா? அவள் இங்க எதுக்கு வந்தாள்? அது செல நேரம் அமீனாட சாயல ஒத்த ஒரு பொண்ணாக இருக்குமோ?”

அவரின் உள்ளத்தில் சந்தேகமொன்றை எழுப்பிய அந்தப் பெண் ஐந்தாறு பேர் அடங்கிய குழு ஒன்றுடனேயே காணப்பட்டாள். அவளின் கையைப் பற்றியவாறு ஒரு சிறுமியும் நின்று கொண்டிருந்தாள். கவிஞர் ரானா சஹாப்தீன் அவளை மீண்டும் ஒருமுறை நன்கு உற்றுப்பார்த்தார். அது அமீனாதான் என்பது அவருக்கு உறுதியாகாத நிலையிலும் அவளின் கவனத்தை தனது பக்கமாகத் திசை திருப்புவதற்கு அவர் சில சைகைகளைச் செய்து பார்த்தார். வாகனங்களின் இரைச்சலாலும் மக்கள் நடமாட்டத்தாலும் அவளின் அவதானத்தைப் பெற்றுக்கொள்ள அவர் தவறி விட்டார். பாதையில் தொடர்ச்சியாக வாகனங்கள் வந்து கொண்டிருந்ததனால் உடனடியாகப் பாதையின் மறுபுறத்தை அடைவதும் அவருக்குச் சிரமமாக இருந்தது. அப்போது கண்மூடிக் கண் திறப்பதற்குள் அவளும் அவளுடன் இருந்தவர்களும் அவரின் பார்வையில் இருந்து மறைந்து விட்டனர். அவர் அவளை மீண்டும் கண்டு பிடிக்க பல முயற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தும் அவை எதுவும் கைகூடவில்லை. அதனால் மனம் தளர்ச்சியடைந்த அவர், அங்கு வீதியோரமாக இருந்த ஒரு வாங்கில் அமர்ந்து கொண்டார். அப்போது பல வருடங்களுக்கு முன்பு நடந்த கசப்பான சம்பவங்கள் அவரது மனத்திரையில் மின்ன ஆரம்பித்தன. எனினும் அவற்றை மீறிக் கொண்டு, அன்று நடைபெற இருந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் கவிதை அரங்கு திடீரென அவருக்கு ஞாபகம் வந்து விட்டது. உடனே அவர் வீதியில் போகும் ஒரு டாக்சியை நிறுத்தி, மீண்டும் மலாயா பல்கலைக்கழகத்துக்கு வந்து சேர்ந்தார். அதன் பிறகு கவிதை அரங்கு நடைபெறும் மண்டபத்தைக் கண்டுபிடித்து அதற்குள் நுழைந்து கொண்டார். கவிதை அரங்கு அதுவரை ஆரம்பித்திருக்கவில்லை. அந்த வகையில் அது அவருக்கு ஆறுதலாக இருந்தது.

கவிதை அரங்குக்காக மண்டபத்துக்குள் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சர்வதேசப் புகழ் பெற்ற பல கவிஞர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். மண்டபமும் பார்வையாளர்களால் நிறைந்திருந்தது. இரட்டைக் கோபுரத்துக்கு அருகே அவரின் பார்வையில் இருந்து விடுபட்டுச் சென்ற பெண், அவர்களுக்கு மத்தியிலாவது இருக்கிறாளா என அவர் அடிக்கடி நோட்டமிட்டுக் கொண்டு இருந்தார். அவரின் முயற்சி வீண் போக வில்லை. அப்போதுதான் அவள் மண்டபத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தாள். அமீனாவின் முகச்சாயல் அந்தப் பெண்ணுக்கு இருந்தாலும் உடல் தோற்றம் அவ்வாறு இருக்கவில்லை. அதனால் அவள் ஆசனம் ஒன்றில் அமரும் வரை அமைதியாக இருந்த அவர் தனது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்தார். அதற்கு வசதியாக அவள் வந்து உட்கார்ந்த ஆசனத்துக்குப் பின்னால் இருந்த ஆசனம் காலியாகவே இருந்தது. அவர் உடனே எழுந்து சென்று அதில் அமர்ந்து கொண்டார். அதன் பிறகு அங்கு சற்று அமைதியாக உட்கார்ந்திருந்த அவர் தனது சந்தேகத்தை அவளிடம் கேட்டுவிட்டார்.

"மிஸ், நீங்க அமீனாவா? நான் பிழ எண்டா என்ன மன்னிச்சுக் கொள்ளுங்கோ."

அவருக்கு முன்னால் உட்கார்ந்திருந்த பெண் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"ரானா சேர், ஒங்களால என்ன அடயாளம் கண்டு கொள்ள ஏழாமப் போயிட்டுதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப நான் சரியா? நீ அமீனாவா?"

"நான் அமீனாதான். அதுல ஒங்களுக்குச் சந்தேகமா?"

"இல்ல, இல்ல, நீ எப்பிடி இங்க வந்தாய்?"

"நீங்க நெனச்சீங்களா நீங்க மட்டும்தான் கவிஞர் எண்டு? நானும் இப்ப கவித எழுதுறேன். ஏண்ட எத்தனையோ கவிதகள் பத்திரிககளிலும் சஞ்சிககளிலும் வெளிவந்திருக்கு. போன வருஷம் நான் ஏண்ட கவிதத் தொகுப்பொண்டயும் வெளியிட்டு வச்சேன்."

"அப்ப நீயும் ஒரு கவிதாயினிதான். தெரிஞ்சி கொண்டது சந்தோஷமா இருக்கு."

"ரானா சேர், என்னோட வந்திருக்கிற செலபேர் எங்கள நோட்டமிடுறாங்க. அதனால நாங்க வெளியில போய் கதச்சுவோமா?"

அதன்படி பிறருக்கு ஒரு சந்தேகம் ஏற்படாதவாறு ரானா முதலில் வெளியே சென்றார். சற்று நேரம் தாமதித்து அமீனா தனது மகளுடன் வெளியே சென்றாள்.

பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு முறை ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தினால் அவர்களுக்குள் அதிர்ச்சி தாங்கவில்லை. அதனால் என்ன பேசவேண்டும், பேசப்போகும் விடயத்தை எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்ற குழப்பம் இருவருக்குள்ளும் இருக்கவே செய்தது.

"அமீனா, அங்கே ஒரு கன்டீன் இருக்கு. நாங்க அங்கே போய், ஏதாவது சாப்பிட்டு விட்டு, பக்கத்துல இருக்குற பெஞ்ச் ஒண்டுல உக்காந்து கதச்சுவோமா?"

அதன்படி ரானா அங்கிருந்த சிற்றுண்டிச்சாலைக்குள் சென்று, சிறுமிக்கு ஒரு ஐஸ்கிரீமும் அவர்கள் இருவருக்கும் இரண்டு குளிர்பானங்களையும் பெற்றுக் கொண்டார். அதன் பிறகு வெளியே போடப்பட்டிருந்த வாங்கொன்றில் இருவரும் உட்கார்ந்து கொண்டனர். சிறுமிக்கு ஓடியாடி விளையாட அங்கே நிறைய இடங்கள் இருந்தன. அங்குமிங்கும் பறந்து செல்லும் வண்ணாத்திப் பூச்சிகளும், தடாகம் ஒன்றில் நீந்தி விளையாடிய மீன்களும் சிறுமியின் உள்ளத்தைக் கவர, அவள் அமீனாவுக்கு அவ்வளவாகத் தொல்லை கொடுக்கவில்லை.

ரானாவும் அமீனாவும் வாங்கில் உட்கார்ந்து குளிர்பானத்தை அருந்திவிட்டு, சிறுமி ஓடியாடி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, தமது உள்ளங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைந்திருந்தவற்றைச் சொல்லிக் கொள்வதற்கு அப்போதுகூட அவர்களுக்குச் சொற்கள் வரவில்லை.

கணவனொருவனுக்கு வாழ்க்கைப் பட்டு, குழந்தையொன்றுக்குத் தாயாகி இருக்கும் நிலையில், ரானாவுடன் தனிமையாக இருந்து கதைப்பது தனது கலாசாரப் பண்பாடுகளுக்கும், மார்க்கச் சட்ட திட்டங்களுக்கும் முரணானது என்பதை அமீனா நன்கு உணர்ந்து வைத்திருந்தாள். அதே நிலையில்தான் ரானாவும் இருந்தார். ஆனால், அந்தக் குற்ற உணர்வுகளை மீறிக் கொண்டு, ஒருவருக்கொருவருடன் கேட்டறிந்து தெளிவு பெறுவதற்கு, சில சந்தேகங்களும் பல வினாக்களும் அவர்களின் உள்ளங்களை அப்போது உதைத்துக் கொண்டிருந்தன. அதனால் சிறிது நேரம் மௌனமாக இருந்த அவர்களுள் ரானாவே முதலில் குரல் கொடுத்தார்.

"அமீனா இந்த ஏழெட்டு வருஷத்துல அடயாளம் காண முடியாதளவுக்கு நீ உரு மாறிப் போயிருக்கிறாய். ஒன்னக் கண்ட ஒடனே அது நீதானா எண்டு சந்தேகம் ஒண்டுகூட எனக்கு வந்திட்டுது. அது சரி, இப்ப நான் ஒண்ட வாழ்க்கயில ஏற்பட்ட மாற்றங்கள அறிஞ்சி கொள்ள ஆசப்படுறேன்."

"ரானா சேர், அதுக்கு மொதல்ல ஒங்களிட்ட இருந்து அறிஞ்சி கொள்ள எனக்குச் செல விஷயங்கள் இருக்கு. அதுக்கு நீங்க சொல்லும் பதில வச்சித்தான் நான் தொடர்ந்து ஒங்களோட பேசுறதா, இல்லயா எண்டத்த முடிவு செய்வேன்."

"அப்ப போலவே இப்பவும் நீ புடிவாதக்காரியாகவே இருக்குறாய். சரி, சரி அறிஞ்சிகொள்ள இருக்கும் விஷயங்களக் கேளு. எனக்குத் தெரிஞ்ச விஷயங்கள என்னால சொல்லமுடியும்."

"ரானா சேர், நான் வசதி வாய்புள்ள குடும்பமொண்டுல பொறந்தவள். அந்த விஷயத்த நீங்க அண்டு நல்லாத் தெரிஞ்சி வச்சிருந்தீங்க. நான் ஏண்ட சொகுசான வாழ்க்கய விட்டுப் போட்டு சாதாரண குடும்பமொண்டுல பொறந்த ஒங்களோட குடும்பம் நடத்த வர இருந்தேன். அப்பிடியிருக்க எனக்கிட்டயும் சொல்லிக் கொள்ளாம எங்கட ஊர் ஸ்கூலிலிருந்து ட்ரான்சர்ல போயிட்டீங்க. ஒங்களோட அன்பாதரவாகப் பழகிய என்ன, நீங்க ஏமாத்திட்டீங்க. அது மட்டுமல்ல, அண்டிலிருந்து இண்டு வர நீங்க என்னோட எந்தத் தொடர்பும் வச்சிக் கொள்ள இல்ல. நீங்க அப்பிடி நடந்து கொள்ளக் காரணம்தான் என்ன? அத நான் மொதலாவது தெரிஞ்சி கொள்ள வேணும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமீனா, நான் ஒன்ன ஏமாத்தினேனா? இல்ல அமீனா, இல்ல. ஒரு பொல்லாத இரவு நடந்த சம்பவமொண்டத் தெரியாமத்தான் நீ இது பேசுறாய் போல."

"அப்பிடி எனக்குத் தெரியாம என்ன நடந்திச்சிது?"

"அந்தப் பொல்லாத இரவுல நான் இஷாத் தொழுதிட்டு திரும்பி வரக்குள்ள ஒரு வேன் வந்து எனக்குப் பக்கத்துல நிண்டிருச்சிது. டிரைவர் சீட்டுல ஷிப்லிதான் இருந்தான்."

"நீங்க எந்தச் ஷிப்லியச் சொல்லுறீங்க?"

"என்னோட அங்க இங்க சுத்திக் கொண்டு திரிஞ்சானே. டவுனுல பொடவக் கடயொண்டும் வச்சிருந்தான்."

"ஆ... அந்தச் ஷிப்லியா? சரி, சரி சொல்லுங்கோ."

"என்னோட அவன் நல்லாப் பழகினவன் எண்டத்தால நான் முன்பின் ஒண்டும் யோசிக்க இல்ல. வேன்ல ஏறி உக்காந்திட்டேன். வேன் பள்ளிவாசல் ரோட்டுல நேரே வந்திச்சிது. அப்ப யாரோ ஒருத்தர் வேனுக்குக் கையக் காட்ட ஷிப்லி வேன நிப்பாட்டிட்டான். ஒடனே நாலு பேர் வேன்ல ஏறிக் கொண்டாங்க. அந்த நாலு பேர்ல ஒருத்தரா ஓண்ட நானாவும் இருந்தாரு. அவங்க வேனுல ஏறின ஒடனே ஒருத்தன் ஏண்ட வாயில பிளாஸ்டரொண்ட ஒட்டிட்டான். இன்னுமொருத்தன் கறுப்புப் பட்டியொண்டால கண்ண மூடிக் கட்டிட்டான். வேறொருத்தன் கை ரெண்டையும் பின்னுக்கு இழுத்துக் கட்டிட்டான். வேன் ஓடிக்கொண்டே இருந்திச்சிது. கொஞ்ச நேரத்துக்குப் பெறகு வேன் எங்கயோ ஒரெடத்துல வந்து நிண்டிருச்சிது. அதுக்குப் பெறகு அவங்க என்ன வேன்ல இருந்து வெளியால எடுத்து, கொஞ்சத்தூரம் கூட்டிச்செண்டு, கதிர ஒண்டுல உக்கார வச்சாங்க. கண் ரெண்டயும் தெறந்தும் விட்டாங்க. அது ஒரு பயங்கரமா பாழடஞ்ச கட்டடம் எண்டது அப்பதான் வெளங்கிச்சிது. அந்த நேரத்திலயும் ஒன்ன அடஞ்சே தீருவேன் எண்ட உறுதீல அவங்களோட போராட ரெடியாத்தான் நான் இருந்தேன்."

"ரானா சேர், அந்தப் போராட்டம் ஒங்களுக்கு ஜயம் தர இல்லயா?"

"இல்ல, அமீனா இல்ல. ஓண்ட நானாதான் மொதல்ல எனக்கிட்ட வந்தாரு. அவர் ஏண்ட நாடியப் புடிச்சித் தூக்கி அவர்ட பார்வய ஏண்ட பார்வயில படிய விட்டாரு. குடி போதயில அவர்ட கண் ரெண்டும் நல்லா செவந்திருந்திச்சிது. 'அறுக்கிறவனுக்கும் செரச்சிறவனுக்கும் பொறந்த இந்த மாமா தொரக்கி ஏண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சிதான் தேவப்பட்டிருச்சிதோ?' எண்டு ஒரு கேள்வி கேட்டுப் போட்டு அவர் ஏண்ட மொகத்துல தாறுமாறா அறஞ்சாரு. கை ரெண்டும் பின்னால கட்டப் பட்டிருந்தத்தால என்னால அந்த அறகள தாங்கிக் கொள்ள முடியாம இருந்திச்சிது. அதனால எனக்கு தல சுத்த ஆரம்பிச்சிட்டுது. ஒதடுகள் வெடிச்சி ரத்தம் கசியிரத்த உணரக் கூடியதாக இருந்திச்சிது. அப்ப எனக்கு மயக்கம் வந்திட்டுது. மயக்கம் தெளியக்குள்ள ஓண்ட நானாவும் ஷிப்லியும் அங்க இருக்கெல்ல. அவங்களோட வந்த மத்த மூனு பேரும் எனக்குக் காவல் காத்தாங்க."

"ரானா சேர், இதெல்லாத்தயும் கேக்கக்குள்ள ஏண்ட ஒடம்பெல்லாம் புல்லரிச்சிப் போகுது. எனக்காக நீங்க அடிபட்டிருக்குரீங்க, அவமானப்பட்டிருக்குரீங்க. நடந்த விஷயங்களப் பத்தி என்னால இப்ப கவலப்பட மட்டும்தான் முடியும். அதுக்கங்கால எதுவுமே செய்ய முடியாத பாவியாகிட்டேன் நான்."

"அமீனா, கதிரயில கட்டப்பட்டிருந்த நெலயிலேயே எனக்குத் தூக்கம் வந்திட்டுது. அடுத்த நாள் காலயில எழுந்து பாத்த நேரம் சொகுசான ரூம் ஓண்டுல நான் தங்க வச்சப்பட்டிருந்தேன். எனக்கு வெளித் தொடர்பு எதுவும் இருக்கெல்ல. நேரத்துக்கு உணவு தந்தாங்க. தப்பிப் போவதற்கு நெனச்சாலும் அதுக்குச் சாத்தியங்கள் இருக்கெல்ல. என்னக் கடத்திக் கொண்டு வந்து பதினைந்து இருபது நாள் கடந்த பிறகு ஒரு நாள் ஓண்ட நானா திரும்ப வந்தாரு. அவரோட இன்னுமொருத்தர் வந்திருந்தாரு. அவரொரு மாகாணசபை மந்திரி எண்டு தன்ன அடயாளப் படுத்திக் கொண்டாரு."

"ரானா சேர், அவர் வந்து ஒங்களுக்கு இந்த ஊர விட்டு போகச் சொல்லி இருப்பாரு எண்டு நான் நெனச்சிறேன்."

"அமீனா, நீ சரி. அவர், 'தம்பி நீ நூறு கிலோமீற்றருக்கு அங்கால ஒரு ஊரில இருந்து இந்த ஸ்கூலுக்கு வாத்தித் தொழிலுக்கு வந்தாய். நீ வந்தோமா, வாத்தித் தொழிலச் செஞ்சோமா எண்டு இருக்காம ஒனக்கிட்டப் படிச்ச புள்ளயொண்ட காதலிச்சிருக்கிறாய். நாங்க ஓண்ட ஊரில போய் ஒன்னப் பத்தி, விசாரிச்சிப் பாத்தோம். ஒரு சகனுல சாப்பிடும் போது கூட ஓண்ட கூட்டம் குடும்பத்தார ஒதுக்கி வச்சிப் போட்டு சாப்பிடச் சொல்லித்தான் எங்கட முன்னோர்கள் எங்களுக்குச் சொல்லி இருக்கிறாங்க. அதனால நீ அமீனாவக் காதலிச்சது பிழ. அமீனாட உம்மா, வாப்பா எல்லாம் இந்த ஊரில கௌரவமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பமொண்டச் சேந்தவங்க. அதனால அமீனாவோட சம்பந்தம் வச்சிக் கொள்ள ஒனக்கு எந்தத் தகுதியும் இல்ல. மொடவன், கொம்புத் தேனுக்கு ஆசப்பட்ட கதயா இருக்கு ஒண்ட கத. நான் ஒனக்கு நலவாச் சொல்லுறேன். நீ அமீனாவோட வச்சிருக்கிற தொடர்ப விட்டுப் போடு', எண்டு சொல்லிவிட்டு அவர் ஒரு கடிதத்தத் தந்து அத எனக்கு வாசிச்சிப் பாக்கச் சொன்னாரு. நான் அத எடுத்து வாசிச்சேன். அது ஏண்ட இடமாத்தக் கடிதமாக இருந்திச்சிது. நான் பொறந்த ஊருக்குச் செல கிலோமீற்றர் தூரத்துல இருந்த ஸ்கூல் ஒண்டுக்கு அந்தக் கடிதத்தின் மூலமாக என்ன இடமாத்தம் செஞ்சிருந்தாங்க."

"ரானா சேர் ஒங்கட குடும்ப நிலய நான் தெரிஞ்சிதான் வச்சிருந்தேன். இஸ்லாம் எங்களுக்கு முஸ்லிம்கள் எல்லாரும் சமம் எண்டுதான் போதிக்குது. அப்பிடியிருக்க இந்தப் பாகுபாடெல்லாம் எதுக்கு எண்டது எனக்கு வெளங்க இல்ல. சரி அதுக்குப் பெறகு என்ன நடந்திச்சுது."

"அவர் திரும்ப என்னோட கதச்சாரு. 'தம்பி, இந்த இடமாத்தத்த ரத்துச் செய்ய முடியாதபடி நான் அதுக்கேத்த நடவடிக்கயெல்லாம் எடுத்திருக்கிறேன். அத மீறி நீ ஒண்ட இடமாத்தத்த ரத்துச் செய்ய ஏதாவது முயற்சி எடுத்து இதே பாடசாலைக்குத் திரும்பி வந்தா, நீ உயிரோட ஒண்ட ஊருக்குப் போய் சேரமாட்டாய். ஒனக்கிட்டச் சொல்ல இன்னுமொரு விஷயமுமீக்கு. அதுதான் நீ இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ள இங்க இருந்து போயிட வேணும். அதுக்கு நீ சிரமப்படத் தேவ இல்ல. நாங்க ஒன்ன ஒண்ட ஊருக்கே கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வருவோம்,' எண்டு சொல்ல ஒண்ட நானா போட்டோ அல்பம் ஒண்ட எனக்கிட்டத் தந்தாரு. அத நான் எடுத்துப் புரட்டிப் பாத்தேன். அதுக்குள்ள ஒண்ட வெடிங் போட்டோ எல்லாம் இருந்திச்சிது. எனக்கு ஏண்ட கண்கள நம்ப முடியெல்ல. இன்னொருத்தண்ட அரவணைப்புல நீ இருப்பதப் பாக்க ஏண்ட நெஞ்செல்லாம் பத்தி எரிஞ்சி கொண்டு போவது போல இருச்திச்சிது. அப்ப அங்கிருந்தவங்க என்ன ஏளனத்தோட பாத்தாங்க. அப்பிடி இருந்தும் கடைசியா ஒன்னோட கதச்சிறத்துக்கு ஒரு அஞ்சி நிமிசம் டைம் எடுத்துத் தரும்படி நான் அவங்களிட்டக் கேட்டேன். அப்ப ஒண்ட நானா சொல்லிட்டாரு, ஒண்ட புருஷனோட நீ சிங்கப்பூருக்குப் போயிட்டாய் எண்டு. அதன் பெறகு அவங்க என்னப் பலவந்தமாக ஒரு வாகனத்தில ஏத்தி ஏண்ட ஊருக்குப் பக்கத்து டவுன்ல எறக்கிவிட்டாங்க. நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் கட்டிட்டாய் எண்டு தெரிஞ்சதும் ஓண்ட வாழ்க்கையில குறுக்கிடாம நான் அமைதியாகிட்டேன். அது மட்டுமல்ல, நான் கலியாணம் கட்டாமல் இருக்கவும் முடிவு செஞ்சிட்டேன்."

"ரானா சேர், நீங்க என்ன ஏமாத்திப் போட்டு தப்பிப் போயிட்டீங்க எண்டுதான் இவ்வளவு காலமும் நான் நம்பிக்கொண்டிருந்தேன். நடந்ததெல்லாம் என்ன எண்டு இப்பதான் எனக்கு வெளங்குது. பாவம் நீங்க, அதுக்கு பிரதி உபகாரமாக என்ன செய்யலாம் எண்டத்தப் பத்தி எனக்கு ஒண்டும் வெளங்க இல்ல. நானாவிடம் இதுகளப் பத்தி இப்ப எதுவும் கேட்கவும் முடியாது. கேட்டாலும் எதுவும் நடக்கவும் மாட்டாது. நானா இப்ப என்னோட அவ்வளவா ஒரு முகப்பத்தும் இல்ல."

"எனக்கு நடந்த விஷயமெல்லாத்தையும் சொல்லிட்டேன். அமீனா, ஒனக்கு நடந்த விஷயங்கள தெரிஞ்சி கொள்ளவும் நான் இப்ப ஆசப்படுறேன். நீ விருப்பம் எண்டாச் சொல்லு."

"ரெண்டு மூனு நாளா நீங்க ஸ்கூலுக்கு வராததனால நான் ஒங்களப்பத்தி விசாரிச்சிப் பாத்தேன். அப்ப எனக்குக் கேள்விப்பட்டிருச்சிது, நீங்க ட்ரான்சர்ல போயிட்டீங்க எண்டு. எனக்கு அப்ப பொல்லாத கோபமொண்டு வந்திச்சிது. ட்ரான்சர் சம்பந்தமா ஒரு வாத்த எனக்கிட்டச் சொல்லாம நீங்க போனது, என்னக் கை விடத்தான் எண்டு நான் நெனச்சேன். ஒங்கட போனுக்கு எத்தனயோ கோல் எடுத்தும் பதில் இல்லாததனால ஒரு சராசரி ஆம்புள செய்யிறது போல நீங்களும் என்ன ஏமாத்திட்டீங்க எண்டு நெனச்சி, நான் ஏண்ட மனச சமாதானப் படுத்திக் கொண்டேன். அப்ப ஊட்டுள எல்லாரும் ஏண்ட கலியாணத்த அவசரப்படுத்த, ஒரு நாள் என்னப் பொண் பாக்க வந்தாங்க. வாப்பா, நானா, கூட்டம் குடும்பத்தார் எல்லோரும் மாப்புள பாக்கப் போனாங்க. மாப்புள்ளக்கிம் மாப்புள்ள ஊட்டாருக்கும் பொண் புடிக்க, பொண் ஊட்டாருக்கு மாப்புள்ள புடிக்க கலியாணம் தீந்து போயிட்டுது. எங்கட குடும்பத்துல மொதலாவது கலியாணம் எண்டத்தால அதச் செறப்பாச் செஞ்சாங்க. அப்ப எனக்குப் பத்தொன்பது வயதுதான் எண்டாலும் ஹம்சா நாப்பது வயசையும் தாண்டியவர் எண்ட விஷயத்த கலியாணம் நடந்து ஒரு மாசம் கழிச்சித்தான் நான் தெரிஞ்சி கொண்டேன். மாப்புளேட பணத்துக்கும் வசதிவாய்ப்புக்-களுக்கும்தான் எங்கட குடும்பத்தவங்க அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பப்பட்டிருக்குறாங்க போல. அது மட்டுமல்ல ஒங்களோட இருந்த தொடர்பும் ஒரு காரணம்தான். கலியாணம் முடிஞ்சி மூனு மாசத்திலேயே அவர் என்ன அழச்சிக்கொண்டு தனிக் குடித்தனம் போயிட்டாரு. அவர் எனக்கு வாங்கி இருந்த வீடு ஒரு மாளிக போல இருந்திச்சிது. கைக்குக் காலுக்கெல்லாம் வீட்டுள வேலக்காரர்கள் இருந்தாங்க. அவர் பெரிய பிஸ்னஸ்காரன் எண்டத்தால பார்டிகளுக்குப் போனா நல்ல குடிபோதயிலதான் வருவாரு. மத்த நாட்களில குடிக்கமாட்டாரு. ஆரம்பத்தில அவர் என்னோட நல்ல அன்பாதரவாகத்தான் இருந்தாரு. கொஞ்ச நாள் போனதும் ஒங்களுக்கும் எனக்கும் எடயில இருந்த தொடர்பு அவருக்கு எப்படியோ தெரிய வந்திட்டுது போல. அதுக்குப் பெறகு அவர் அது சம்பந்தமா எனக்கிட்ட துறுவித் துறுவி ஆராய துணிஞ்சிட்டாரு. அதுக்குக் காரணம் அந்தத் தொடர்பு தொடர்ந்து இருக்கக் கூடும் எண்ட சந்தேகம் அவருக்கு வந்திட்டுது போல. நான் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அதை ஏத்துக் கொள்ளும் நிலையில அவர் இருக்கெல்ல. அதனால அந்தக் காரணத்த வச்சி அவர் படிப்படியா என்னத் துன்புறுத்த ஆரம்பிச்சிட்டாரு. இந்தச் சமயத்தில நான் தாயாகப் போகும் விஷயம் அவருக்கு தெரிய வந்திட்டுது. அதுக்குப் பெறகு அவர் என்னோட மிச்சம் அன்பாதரவா நடந்துகொண்டாரு. அது மகள் கெடச்சும் வரக்கிம் மட்டும்தான். மகள் கெடச்சதும் அவர் பழய நெலக்கி மாறிட்டாரு. என்னப் பத்தி இருந்த சந்தேகம் அவருக்குக் கூடிட்டுது."

அப்போது அவளுக்கு அழுகை வந்து விட்டது. அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது.

"அமீனா நீ பாவம். சந்தேகம் பொல்லாத வியாதி."

"ரானா சேர், அவர் நேரகாலம் இல்லாம குடிப் பழக்கத்துக்கு ஆளாகிட்டாரு. ஒரு நாள் அவர் போதயில கார் ஓட்டிக்கொண்டு போன நேரம் அக்ஷிடெண்ட் ஒண்டு நடந்து, அந்த எடத்திலேயே காலமாகிட்டாரு. என்னப் பத்தி அவருக்கிருந்த கவலயாலதான் குடிப் பழக்கத்துக்கு ஆளாகி, அவர் தண்ட உயிர விட்டதாக அவர்ட குடும்பத்தார் கதச்சாங்க. எனக்கு அவர்ட மையத்தக்கூடப் பாக்க அவங்க விட இல்ல. என்னமோ அவர்ட வாப்பா எனக்கு இரக்கப்பட்டு அதுக்கு எடம் எடுத்துத் தந்தாரு. எனக்கு அவர்ட வீட்டுல இத்தா இருக்கக்கூட அவங்க விட இல்ல. ஒடனே உம்மா என்ன எங்கட வீட்டுக்குக் கூட்டி வந்தா. அங்கதான் நான் இத்தா இருந்தேன். அவர் பிஸ்னஸ் விஷயங்களுக்காக அதிகமா கடன் பட்டிருந்தாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்காக அவர் அவர்ட சொத்துகள பேங்குகளுக்கு ஈடு வச்சிருந்தாராம். அவர் மவ்தாப் போனதும் பிஸ்னஸ்களப் பொறுப்பெடுக்க யாரும் இல்லாததால அந்ததச் சொத்துக்கள் அறுதியாப் போயிட்டுதாம். செல சொத்துப் பத்துக்கள அவர்ட குடும்பத்தார் அபகரிச்சிக் கொண்டாங்கலாம். நான் அவரோட வாழ்ந்து ஒரு புள்ளக்கித் தாயானாலும் அவர் மூலமா எனக்கு எதுவுமே கெடச்ச இல்ல. எனக்கு வந்த பிரச்சினய தாங்கிக் கொள்ள முடியாம எங்கட வாப்பாவும் இருந்தாப்புல ஒரு நாள் எங்கள விட்டுப் பிரிஞ்சி போயிட்டாரு. நானாவும் இப்ப என்னோட அவ்வளவா முகப்பத் இல்ல. நான் உம்மாவோட எங்கட வீட்டுலதான் இருக்கிறேன். பொழுது போக்கொன்றுக்காகவும் ஏதோ ஒரு வருமானத்துக்காகவும் ஊர் புள்ளகளுக்கு ஒரு மொண்டசோரி நடத்துறேன். ஏண்ட இந்த மகள்தான் இப்ப எனக்கு இருக்கிற ஒரே ஒரு நம்பிக்கை."

"அமீனா நான் ஒன்னக் காதலிச்சத்தால என்ன விட நீதான் மிச்சமாப் பாதிச்சப் பட்டிருக்கிறாய்."

"ரானா சேர், எங்கட நாட்டுல பிற சமூகங்களச் சேந்தவங்க காதலிச்சிறாங்க. கை விடுறாங்க. திரும்ப வேறொருத்தரக் காதலிச்சிறாங்க. கலியாணம் கட்டுறாங்க. பழசெல்லாத்தையும் மறந்து சந்தோஷமா வாழுறாங்க. ஆனா எங்கட சமூகத்துக்கு காதல் ஒத்து வர இல்ல. காதல் கைகூடாமப் போன ஒருத்தி வேறொருத்தனக் கலியாணம் கட்டிக்கொண்டா அவள்ட குடும்ப வாழ்க்க பாழாப் போகும் சந்தாப்பங்கள் ஏராளம். எனக்கு நடந்த சம்பவம் அதுக்கு நல்லதொரு உதாரணம்."

"அமீனா, நடந்ததெல்லாம் நடந்திட்டுது. நாங்க இப்போ என்ன செய்யலாம்?"

அவள் அக்கேள்விக்கு மௌனமாகவே இருந்தாள். அவளின் மகள் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடுவதை ரானா பார்த்து ரசிப்பதுபோல அமீனாவுக்குத் தென்பட்டாலும் அவரின் உள்ளம் ஒரு இனம் புரியாத போராட்டமொன்றை நடாத்தியதை அவள் விளங்கிக் கொள்ள வில்லை.

'நான் அமீனாட குடும்ப வாழ்க்கைக்கு எடஞ்சலாக இருந்திருக்கிறேன். என்னாலதான் அவளக் கட்டின புருஷனும் அவளச் சந்தேகத்தோட பாத்திருக்கிறான். அந்தச் சந்தேகம் அவனைப் போதைக்கு அடிமையாக்க, அவனும் நேர காலத்தோட மவ்தாப் போயிட்டான். அதனால அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவயாகிட்டாள். அதுமட்டுமல்ல அனாதப் புள்ளயொண்டுக்கும் தாயாகிட்டாள். அவளின் நல்ல நேரம் நான் கலியாணம் கட்டாமல் இருந்தது. அவள் விருப்பம் எண்டா அவளுக்கு நல்லதொரு வாழ்க்கய இப்போ என்னால அமைத்துக் கொடுக்க முடியும். அவளுக்கும் வயசு இப்போ இருபத்தேழுதான் ஆகுது. எனக்கு முப்பத்திநாலு. வயசு எங்களுக்குப் பிரச்சினயாக மாட்டாது. அவளுக்கு இப்போ சுயமாக முடிவு எடுக்கவும் முடியும்.' அவரின் உள்ளத்தில் கற்பனைகள் வளர்ந்து கொண்டிருந்தன.

"ரானா சேர், எங்கயோ பாத்துக்கொண்டு, என்ன இது யோசிக்கிறீங்க?"

"அமீனா, நான் இது ஒன்னப் பத்தித்தான் யோசிச்சிக் கொண்டிருந்தேன். என்னால நீ எத்தனயோ துன்பம் துயரங்களுக்கு ஆளாகியிருக்கிறாய். அதனால நான் ஒனக்கு கட்டாயமா ஒதவி செய்தே ஆகவேணும். நான் நேரடியாகவே விஷயத்துக்கு வாரேன். நீ விருப்பம் எண்டா ஒன்னக் கலியாணம் கட்டி சந்தோஷமா குடும்பம் நடந்த நான் தயார். ஒனக்கும் ஒண்ட மகளுக்கும் சந்தோஷமான வாழ்க்கயொண்ட என்னால தர முடியும். அப்ப போல அல்ல, இப்ப ஒனக்கு சுயமான முடிவொண்டும் எடுக்கலாம்."

"ரானா சேர், நான் ஹம்சாவோட வாழ்ந்த குடும்ப வாழ்க எனக்கு கசப்பாகவே இருந்திச்சுது. குடும்ப வாழ்க்கையில நான் எதிர்பாத்த காதல், அன்பு,ஆதரவு, இரக்கம், தயவு, புரிந்துணர்வு எல்லாம் பொய்யாகிப் போயிட்டுது. எதிர் பாராத கோபம், தாபம், பாவம், பலி, போட்டி, பொறாம இதெல்லாம்தான் மெய்யாகிப் போயிட்டுது. நான் ஆரம்பத்துல ஒங்கள காதலிச்சேன், அன்பு வச்சேன். பாசமா இருந்தேன். எனக்காக நீங்க அனுபவிச்ச கஷ்ட, நஷ்டங்களையும் துன்பம் துயரங்களையும் கேட்டதிலிருந்து அந்தக் காதல், அன்பு, பாசம் எல்லாம் இன்னும் ஆழமா மனசுல பதிஞ்சிட்டுது. அந்தக் காதலில, அன்பில, பாசத்தில பூவிதழ் ஒண்டுல உள்ள புனிதத்த நான் இப்ப உணர்றேன். ரானா சேர், நாங்க ரெண்டு பேரும் கலியாணம் கட்டி கணவன் மனைவியா வாழப் போனா அந்தப் பூவிதழ் உதிர்ந்து அதுட புனிதம் மாசடைந்து போகலாம். அதனால ஒங்கட விருப்பத்த என்னால ஏத்துக் கொள்ள ஏழாது. என்ன வற்புறுத்த வேணாம். நான் தொடர்ந்து ஒங்கட காதலியாகவே இருந்து விட்டுப் போறேன். ரானா சேர், என்ன மன்னிச்சிக் கொள்ளுங்கோ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீனா எழுந்து நின்றாள். அதைத் தொடர்ந்து சிறுமியும் ஓடி வந்து தாயின் கையைப் பற்றிக் கொள்ள, அவள் ரானாவிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

**நன்றி: யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்**
**இலங்கை வாழ் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய செவ்வரத்தை சிறுகதைத் தொகுப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
12 DEC 2019
LIBRARY

## 03. அன்பளிப்பு

தவ்பீக் ஹாஜியாரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டது. குடும்ப, சமூக, அரசியல் என இன்னோரன்னச் செல்வாக்குகளுடன் அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஓர் அத்தாட்சியாக, பெருந்திரளான மக்கள் மையவாடியில் கூடியிருந்தனர். அவர்களுள் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும், அனுதாபிகளும் அவருக்குத் தமது இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக வேண்டி மூன்று பிடி மண்ணை அள்ளி கபுரின் மேல் போட்ட வண்ணம் இருந்தனர். அப்போது ஜனாஸாக் கருமங்களை முன்னின்று நடத்தி வைத்த அகமது லெப்பை ஆலிம்ஷா அவர்கள் தல்கீன் ஓதுவதை ஆரம்பித்து வைத்தார்.

பக்கத்தில் ஓடிய நீரோடையின் இரைச்சலையும் மீறிக் கொண்டு அகமது லெப்பை ஆலிம்ஷா அவர்களின் குரல் கணீரென ஒலிக்க, மையவாடி எங்கும் ஆழ்ந்த அமைதி நிலவியது. நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாவை விழித்தே இவ்வசனங்கள் ஓதப்பட்டாலும் அவை தம்மையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாகவே அங்கு திரண்டிருந்த அதிகமானோர் எடுத்துக் கொண்டனர். அது அவ்வாறாயினும் தல்கீன் ஓதுவது இஸ்லாத்துக்கு முரணான ஒரு விடயம் என வாதிடுபவர்களும் அங்கு இருக்கவே செய்தனர். அவர்களுள் ஒருவர் அப்போது மிக ஆவேசத்துடனேயே காணப்பட்டார். அவரின் கை, கால்கள் மட்டுமல்ல அடர்ந்த தாடியும், தடித்த மீசையும் துடிக்க ஆரம்பித்திருந்தன. அதனால் அவர் தனது எதிர்ப்பைப் பக்கத்தில் இருந்த ஒருவரிடம் கொட்டித் தீர்க்க முற்பட்டார்.

"நானா, ஹதியா ஒண்டுக்காகத்தான் இந்த ஆலிம் தல்கீன் ஓதுறாரு. இவரு மையத்தூட்டுல பெரிய கத்தம் ஒண்டயும் ஓதித் தமாம் செஞ்சிட்டுத்தான் வந்தீக்குறாரு. இவருக்கென்னத்துக்கு இந்த ஷிர்கான விஷயங்கள். சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
700745

மையவாடியில இருந்து இவரு வெளியே வரட்டுமே. நாங்க ஒரு கை பாத்துக் கொள்ளுறோம்."

"தம்பி இது தவ்பீக் ஹாஜி ஊட்டு விஷயம். அவர்ட குடும்பத்தாருக்கு பள்ளிவாசல் பலமிருக்கு, மந்திரிமார்ட பலமிருக்கு, போலிஸ் பலமிருக்கு. அதனால வாய மூடிக்கொண்டு ஆலிம்ஷா ஓதுறத்த கேட்டுக் கொண்டு இரு. அது இஷ்டம் இல்லாட்டி பலாய் ஒண்ட இழுக்காம இங்க இருந்து பெய்த்திடு. ஒண்ட நன்மக்காகவல்ல இந்த ஊர் நன்மக்காகத்தான் நான் இது சென்னேன்."

இதைக் கேட்டவர் ஒருவாறு அடங்கிப் போக, சற்று நேரத்தில் தல்கீன் ஓதுவது நிறைவடைந்து விட்டது. அதன் பிறகு ஜனாஸாவுடன் வந்திருந்த கூட்டம் கலைந்து செல்ல ஆரம்பித்தது. தவ்பீக் ஹாஜியாரின் குடும்பத்தவர்கள் மையவாடியின் வாயிலருகே வரிசையாக வந்து நிற்க கலைந்து செல்பவர்கள் அவர்களுக்குச் சலாம் கொடுத்து விடை பெற்றுக் கொண்டனர். அவர்களுள் ஒருவராக அகமது லெப்பை ஆலிம்ஷாவும் விடை பெற்றுக் கொள்ள வந்தார். அப்போது தவ்பீக் ஹாஜியாரின் குடும்பத்தவர்களுள் யாராவது ஒருவர் அவருக்குரிய ஹதியாவைக் கொடுக்காதது அவருக்கு மனவருத்தமாக இருந்தது. அதனால் மையவாடியை விட்டு வெளியே வந்த ஆலிம்ஷா, அப்போதாவது அவர்களுள் யாராவது தன்னைக் கண்டு தனக்குரிய ஹதியாவைத் தந்து விடுவார்களா என்று பார்க்க சிறிது நேரம் அங்கே தாமதித்தார். எனினும் அங்கே ஒரு சிலர் தன்னை முறைத்துக் கொண்டும், மிரட்டிக் கொண்டும் செல்வதைப் பார்க்க அவரின் நெஞ்சம் திக், திக் என அடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டது. அடுத்த கணம் ஜனாஸா வீட்டுக்குத் தன்னை அழைத்துச் சென்ற மவ்ஜுூது துரை தூர வந்து கொண்டிருப்பதைப் பாக்க, அது அவருக்கு ஓர் ஆறுதலாக இருந்தது. ஆனால், அவர்கூட ஆலிம்ஷா அவர்களைக் கண்டு கொள்ளாமல் சென்று, தனது சொகுசு வாகனத்தில் ஏறி அமர, இவருக்குள் மீண்டும் ஒரு பதற்றமும் ஏமாற்றமுமே மிஞ்சியது.

"இதுக்குப் பெறகும் நான் இங்க நிற்கிறது எனக்குப் பிரயோசனம் தராது. கல்யாண ஊடொண்டுல, கந்தூரி, கத்தம், பாத்திஹா ஊடொண்டுல கொஞ்ச நேரம் காத்து நிண்டாலும் பரவாயில்ல. கோப்பி பங்கு வச்சிற நேரத்திலாவது என்னப் பத்தி ஞாபகம் வந்து, ஏதோ ஹதியா ஒண்டக் கொண்டு வந்து கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிடுவாங்க. இது மையவாடியாச்சே. இப்ப தாரு என்னக் கண்டு கொள்ளப் போறாங்க. போதாக் கொறக்கி கண்ட நிண்டவனுகள் என்ன மெறட்டிக் கொண்டும் போறானுகள். எனக்கு இங்க ஒரு பாதுகாப்பும் இல்ல."

ஆலிம்ஷா அவ்வாறு தவிக்க, வசதி படைத்தவர்கள் மையவாடிக்கு வெளியே நிறுத்தி வைக்கப் பட்டிருந்த தமது வாகனங்களில் ஏறி அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். வெற்றுச் சந்தூக்கும் வெகுதூரம் போய்க் கொண்டிருந்தது. அதனால் இனியும் அங்கு காத்திருப்பதில் பயனில்லை என்பதை ஆலிம்ஷா உணர்ந்து கொண்டு தனது வீட்டை நோக்கி நடையைக் கட்டினார். போகும் வழியில் தேநீர் கடையொன்றுக்குள் நுழைந்து பிளேன்டீ ஒன்றாவது குடித்து விட்டு போக சட்டைப் பையைத் தட்டிப் பார்த்தார். அங்கு கூட சில்லறைகள் இருக்கவில்லை. அவர் தனக்குள்ளே தன்னைப் பற்றிச் சிரித்துக் கொண்டார்.

அன்று அதிகாலை சுபகு நேரத் தொழுகையை முடித்து விட்டு, அன்றைய நாளாந்த செலவை எவ்வாறு சமாளிக்கலாம் என யோசித்த வண்ணம் கதிரையொன்றில் அவர் அமர்ந்து கொண்ட போதே, அவரது மனைவி வெறும் சாயத்தை அவருக்குக் கொண்டு வந்து கொடுத்திருந்தாள். அதைக் கூட உள்ளங்கையில் வைத்துக் கொண்ட சிறிது சீனியை தொட்டுக் கொண்டு குடிக்கும் போதுதான் அந்தச் சொகுசு வாகனம் தூசியைக் கிளப்பிக் கொண்டு, பெரும் இரைச்சலுடன் அவரது முற்றத்தில் வந்து நின்றது. அதனால் அவசர அவசரமாகச் சாயத்தைக் குடித்து முடித்த அவர் இருக்கையில் இருந்தவாறே ஒரு புறமாகச் சாய்ந்து அதை உற்று நோக்கினார்.

"ஆ... யாவாரி ஊட்டு பஜரோ வந்திருக்கே. அது என்ன சரி நன்மையான விஷயமொண்டுக்கு என்ன அழச்சிட்டுப் போவதற்காகத்தான் இருக்கும். அல்ஹம்துலில்லா, இண்டைய செலவ சமாளிச்சுக் கொள்ளலாம்."

அவர் எழுந்து மகிழ்ச்சியுடன் முன்னே செல்ல, அங்கே அபூதாஹிா ஹாஜியாரின் மகன் மவ்ஜூத் துரை வாகனத்தில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்.

"அஸ்ஸலாமு அலைக்கும் ஹஸரத்."

"வஅலைக்குமுஸ்ஸலாம். இது சின்ன தொரயல்லென். ஓங்கட பாதம் இந்த பூமீல பட நாங்க என்ன புண்ணியம் செஞ்சிட்டோமோ தெரியாது தொரே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரத்துக்கு ஏற்ற பருமனுடனும் பருமனுக்கு ஏற்ற உயரத்துடனுமான மவ்ஜூது துரையையும் அவரது மைத்துனர் நியாஸ் துரையையும் ஆலிம்ஷா அவர்கள் மிக்க மரியாதையுடன் வரவேற்றார். அதன் பிறகு தனது சிறிய இல்லத்துக்குள் அழைத்துச் சென்று அங்கிருந்த ஆசனங்களில் அமர வைத்தார்.

"தொரே, எப்பிடி சொக துக்கங்கள். உம்மா, வாப்பா எல்லாரும் சொகமா இருக்கிறாங்களா?"

"ஹஸரத் அவங்க ரெண்டு பேரும் சொகமா இருக்கிறாங்க. அது அல்லாஹ்ட கிருபையாலும், ஒங்கட துவா பரக்கத்தாலயும் தான்."

"போன ஜும்மாவத் தொழுது போட்டு நான் பள்ளி வாசலில இருந்து வெளியே வாறேன். அப்ப ஒங்கட வாப்பா என்னக் கண்டு, ஓடி வந்து ஸலாம் செல்லி, முஸாபஹாச் செஞ்சி, சொகம் விசாரிச்சிப் போட்டு என்னச் சும்மா வர உட இல்ல. 'இந்தாங்கோ ஹஸரத், சின்ன சதகா ஒண்டு' எண்டு நோட்டொண்ட ஏண்ட பொக்கற்றுக்குள்ள தினிச்சிட்டாரு. வாப்பா எங்க, எப்ப, என்னக் கண்டாலும் அப்பிடித்தான். அவருக்கு அல்லாஹ் இன்னுமின்னும் குடுத்து நல்லா இருக்க வேணும். அது சரி தொரே, ஊட்டுள நன்மையான விஷயங்கள் ஏதாவது நடக்குறத்துக்கு இருக்கா?"

"ஹஸரத், அப்ப ஒங்களுக்கு மையத்துச் செய்தி கேள்விப் பட இல்ல போல?"

"தார் தொரே, தார்? மவ்தாப் போனது தார்? எனக்கு ஒண்டுமே கேள்விப்பட இல்லயே.?"

"ஹஸரத் நேத்து ராத்திரி எங்கட தவ்பீக் மாமாவுக்கு இருந்தாப்புல நெஞ்சு வருத்தம் ஒண்டு வந்து மவ்தாப் பெயித்திட்டாரு."

"இன்னாலில்லாஹி.... ஒங்கட தவ்பீக் மாமாட மையத்துச் செய்தி எனக்கு மட்டும் கேள்விப்பட்டு இருந்ததெண்டா நான் ஒடனே ஓடி வந்தீப்பனே. அங்க நடக்க வேண்டிய அத்தன கருமங்களயும் செறப்பாச் செஞ்சீப்பனே."

"ஹஸரத் அவர்ட மையத்த அஸர் தொழுகையோட எடுக்க நாங்க முடிவு செஞ்சிட்டோம். அதனால வாப்பா ஒங்கள கையோட கூட்டிவரச் சென்னாரு. மாமாட பேருல பெரிய கத்தம் ஒண்டு ஓதி தமாம் செஞ்சி போடுறத்துக்கும் வாப்பா நிய்யத்து வச்சீக்குறாரு."

"ஒங்கட வாப்பா சென்ன விஷயமொண்ட என்னால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக் கழிச்ச ஏழா. அது மட்டுமல்ல, மவ்தாப்போன மாமாவும் என்னோட மிச்சம் முகப்பத்தா பழகினவரு. அதனால மையத்தூட்டுக் கருமங்கள் எல்லாத்தையும் முன்னிண்டு நெறவேத்துறது ஏண்ட பொறுப்பு. ஆனா, பெரிய கத்தம் ஓதுறத்த மட்டும் வேற தாருக்காவது குடுத்திட்டா நல்லாயிருக்கும் தொரே."

"ஹஸரத் அதென்ன அது? பெரிய கத்தம் ஓதுறத்த மட்டும் வேறு தாருக்காவது குடுக்கச் செல்லி என்னத்துக்கு அப்பிடிச் செல்லுறீங்க?"

"தொரே, நேத்துப் பேஞ்ச மழக்கி இண்டு மொழச்ச காளான் போல என்னென்னமோ இயக்கங்கள் எங்கட ஊருக்குள்ளும் வளந்திட்டுது. பெரிய கத்தம் ஓதுறது மட்டுமல்ல மையத்தொண்டுக்கு வழமையாச் செஞ்சி வந்த எத்தனயோ கருமங்கள, இஸ்லாத்துக்கு மொரண் எண்டு அவங்க இப்ப எங்களோட வாதிட வாறாங்க. வாக்குவாதப் படுறாங்க. அடிபுடிச் சண்டைகளுக்கு வாறாங்க. இதெல்லாம் ஒங்களுக்கும் தெரிந்த விஷயங்கள். அப்பிடி ஈக்க எப்பிடி தொரே நான் வந்து பெரிய கத்தம் ஓதுவேன்?"

"ஹஸரத் நாங்க இருக்கும் வர நீங்க தாருக்கும் பயப்புடத் தேவ இல்ல. அதுக்கேத்த பாதுகாப்ப நாங்க ஒங்களுக்குத் தருவோம். நீங்க கட்டாயம் வந்து, பெரிய கத்தத்த ஓதி தமாம் செஞ்சி தரத்தான் வேணும்."

"தொரே! பெரிய கத்தம் ஓதுற இன்னும் எத்தனையோ பேர் ஊரில இருக்கிறாங்க. நான் புள்ளகுட்டிக் காரன். அதனால என்ன இந்தப் பொறுப்புல இருந்து கை கழற்றி உடுங்கோ தொரே"

"ஒங்கள கூட்டி வரச் சென்னது வாப்பாட உத்தரவு. அதனால நீங்க கட்டாயம் எங்களோட வரத்தான் வேணும்."

"சரி, தொரே சரி. அபூ தாஹிா ஹாஜியார் ஊர் தலைவர். அதனால அவர்ட பேச்ச எனக்குத் தட்டிக் கழிச்ச ஏழா. ஒங்கட மொகத்த முறிச்சவும் ஏழா. சரி, நீங்க அப்ப போங்கோ. நான் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்திடுறேன்"

"ஹஸரத், நீங்க வரும் வர நாங்க இங்க நிற்கிறோம். எங்கட வாகனத்திலேயே ஒங்களுக்கும் போகலாம்."

"சரி தொரே, சரி. நான் ரெடியாகி வரும் வர அப்ப இரீங்கோ. பெரிய கத்தத்த ஓதி தமாம் செஞ்சி தாறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிம்ஷா வேறு வழி ஏதும் இன்றி அவர்களது கோரிக்கைக்கு உடன் பட்டாலும் அவர் ஓர் இக்கட்டான நிலைக்கே ஆளாகி இருந்தார். அவருக்கு இவர்களின் வற்புறுத்தல்கள் ஒரு பக்கம் இருக்க, மறு பக்கம் அச்சுறுத்தல்களும் இருக்கவே செய்தன. அதனால் அவர் இரு பக்கங்களும் எரியும் தீப்பந்தம் ஒன்றின் நிலைக்கு ஆளாகி இருந்தார். அது போதாக் குறைக்கு ஏற்கனவே முன் ஹாலில் நடந்தவற்றை நன்கு அவதானித்த வண்ணம் இருந்த அவரது மனைவி உம்மு ஹாணி அப்போது அவரை எதிர் கொண்டு விட்டாள்.

"நடந்த பேச்சுவாத்த எல்லாத்தயும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இப்ப இனி என்ன செய்யப் போறீங்க?"

"அபூ தாஹிா ஹாஜியார பகச்சிக் கொள்ளவும் ஏழா. அதனால நடக்கிறது நடக்கட்டும். நான் பெரிய கத்தத்த ஓதி தமாம் செஞ்சி குடுத்திட்டு வாறேன்."

"நீங்க சரி. போங்கோ, போங்கோ. ஹாஜியார் ஒங்களுக்கு பொருமதியான ஹதியா ஒண்டும் தருவாறு. மகனுக்கு போடின் பீசும் குடுக்க இருக்கு."

சற்று நேரத்தில் ஜனாஸா வீட்டுக்குச் செல்ல ஏற்ற ஆடை அலங்காரங்களுடன் அவர் முன் வாயிலுக்கு வந்து விட்டார். வெண்ணிற நீண்ட அங்கியொன்றை அணிந்து, தலையில் தொப்பியுடன் கூடிய பச்சை நிறத் தலைப்பாகையொன்றைத் தரித்து, முக்கோண வடிவில் மடிக்கப்பட்ட மக்கத்துச் சால்வையொன்றை முதுகுப் புறமாகப் போர்த்தியிருந்த அவரது தோற்றம் ஆலிம் ஒருவருக்கான சிறந்த ஆளுமையை அவருக்குக் கொடுத்திருந்தன. கண்களுக்கு சுருமா இடப்பட்டதனால் ஏற்பட்ட அவரது சீரான முகத் தோற்றம் அவ்வாளுமையை மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல உடலெங்குமாய் கம கம என அத்தர் வாசமும் பரவிக் கொண்டிருந்தது.

"சரி, தொரே சரி. நாங்க பிஸ்மில்லோட, வலது கால முன் வச்சி, எங்கட பயணத்த ஆரம்பிச்சுவோம்."

சாரதி ஆசனத்தில் மவ்ஜூத் துரை அமர அதனை ஒட்டிய ஆசனத்தில் ஆலிம்ஷா அவர்கள் அமர்ந்து கொண்டார். நியாஸ் துரை பின் ஆசனமொன்றில் அமர்ந்தார். மையத்து வீடு வரும் வரை அவர்களுக்குள் எவ்விதமான உரையாடல்களும் நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் அவர்கள் பயணித்த வாகனம் ஜனாஸா வீட்டை வந்தடைந்தது. அங்கு பலரும் வந்து போய்க் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவராக இருந்த அபூ தாஹிர் ஹாஜியார் ஓடி வந்து ஆலிம்ஷா அவர்களை ஸலாம் சொல்லி வரவேற்று முஸாபஹாச் செய்து கொண்டார். அதன் பிறகு அவர் ஜனாஸா வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு பெரிய கத்தம் ஓதுவதற்கு ஏற்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஜனாஸாவின் தலைமாட்டுப் புறமாக மேசையொன்று வைக்கப்பட்டு அதற்குப் பக்கத்தில் இருந்த கதிரைக்கு வெள்ளை விரிப்பொன்றும் விரிக்கப்பட்டிருந்தது. மேசைக்கு மேல் திருக்குர்ஆன் வைக்கப்பட்டிருந்தது. விலையுயர்ந்த, வாசனை மிகுந்த ஊதுவத்திகள் பக்கத்தில் புகைந்து கொண்டிருந்தன. சாம்பிராணிச் சட்டியும் ஓய்வின்றிப் புகைந்து கொண்டிருந்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கட்டப்பட்டிருந்த மேறகட்டி அவ்விடம் ஒரு புனிதப் பிரதேசம் என்பதைப் பிரகடனப்படுத்தியவாறு இருந்தது.

அபூதாஹிர் ஹாஜியார் ஆலிம்ஷா அவர்களின் கையிரண்டையும் பற்றியவாறு ஜனாஸாவுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை விபரிக்க ஆரம்பித்தார்.

"ஹஸரத், பெரிய கத்தம் ஓதி, அதத் தமாமாக்கி, மையத்தக் குளிப்பாட்டி, மையத்துக்குக் கவன் உடுப்பாட்டி, சந்தூக்குல மையத்த வச்சி, ஷஹாதத் கலிமாவோட ஜனாஸா ஊர்வலத்த முன்னிண்டு நடத்தி, மையத்த கபுருல வச்சி, அதுக்குப் பெறகு தல்கீன் ஓதுற வரக்கிமான சகல கருமங்களும் ஓங்கட பொறுப்புலதான் நடக்க வேணும்."

"இன்ஷா அல்லாஹ், ஹாஜியார் அதெல்லாத்தையும் நான் செறப்பாச் செஞ்சி தருவேன். அது ஏண்ட கடம."

அதன் பிறகு ஆலிம்ஷா அவர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து மிகவும் பயபக்தியுடன் திருக்குர்ஆனை ஓத ஆரம்பித்தார். அவரின் மேசை மீது உயர் ரக ஈச்சம் பழ வர்க்கங்களும், கற்கண்டும் வைக்கப்பட்டிருந்தன. குளிர் பானங்களும் பரிமாறப்பட்டிருந்தன. எனினும் அவர் ஓர் ஆசாரம் மிகுந்த ஆலிம் குடும்பமொன்றைச் சோந்தவராதலால் ஜனாஸா வீடுகளில் உண்பதையோ, குடிப்பதையோ தவிர்த்தே நடந்து கொண்டார்.

ஜனாஸாவுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமானவர்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தனர். அவர்களுள் பெரிய கத்தம் ஓதுவது இஸ்லாத்துக்கு முரண் என சொல்லிக் கொள்ளும் ஒரு சிலரின் பார்வை ஆலிம்ஷா அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் தன்னை மிரட்டுகிறார்களோ என ஓர் அச்சம் அவருக்குள் உருவாகி விட்டது. மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் எனும் மன நிலைக்கு அவர் ஆளாகி விட்டார். அதனால் அவரின் உள்ளம் மட்டுமல்ல உடலும் பதற ஆரம்பித்து விட்டது. நா வரண்டு விட்டது. எனினும் இறைவனை முன்னிறுத்தி பெரிய கத்தத்தை ஒருவாறு ஓதி முடித்துவிட்டார். அதன் பிறகு ஜனாஸாவுக்குரிய ஏனைய கடமைகளை நிறைவேற்றி வைக்க அவர் அங்கிருந்து அகன்று சென்றார். அங்கும் அவருக்குப் பாரிய பொறுப்புக்கள் இருந்தன. பெரிய இடத்து ஜனாஸா என்பதால் அதற்குரிய கடமைகள் பெரிய அளவிலேயே நிறைவேற்றப்பட வேண்டுமென அவர் வேண்டப்பட்டு இருந்தார். சிறப்பாக அவை எல்லாவற்றையும் நிறைவேற்றி வைத்த அவர் தான் ஓதிய பெரிய கத்தத்தை தமாம் செய்வதற்கு ஜனாஸாவுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

மீண்டும் ஊதுபத்திகள் பற்றவைக்கப்பட்டன. அவற்றின் நறுமணம் எங்கும் பரவியது. அபூதாஹிர் ஹாஜியார் சாம்பிராணிச் சட்டியில் சாம்பிராணி போட, ஆலிம் ஷா அவர்கள் பெரிய கத்தத்தை தமாம் செய்ய ஆரம்பித்தார். ஜனாஸாவைச் சுற்றியிருந்தவர்களுள் ஒரு சிலர் தன்னையே உற்று நோக்கிக் கொண்டிருப்பதையிட்டு ஆலிம்ஷா அவர்களுக்கு உள்ளூரப் பயமொன்று இருக்கவே செய்தது. எனினும் அபூதாஹிர் ஹாஜியாரினது பாதுகாப்பு தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்குள் இருந்தாலும் ஜனாஸா நல்லடக்கத்தின் பின்பு எந்தப் பாதுகாப்பும் அவருக்கு இருக்க வில்லையென்பதை நினைத்து போகும் வழியில் மீண்டும் அவர் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

"அல்லாஹ்ட பாதுகாப்பு எனக்கு இருக்கக்குள்ள தாருடயாவது பாதுகாப்பு எனக்கு என்னத்துக்கென்?"

அவ்வாறு தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்ட அவர் தளர்ந்து போன நிலையிலேயே வீடு வந்து சேர்ந்தார். அங்கே அவரை அவரது மனைவி முன் வாயிலில் வைத்தே எதிர் கொண்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கெணத்தடிக்குப் பெய்த்து குளிச்சிட்டே வாங்கோ, நான் கோப்பி ஒரு கோப்ப ஊத்தி எடுக்கிறேன்."

அதன்படி அவர் கிணறு வரை சென்று குளித்து விட்டு வர மனைவி கோப்பிக் கோப்பையுடன் முன் வாயிலில் காத்திருந்தாள். அவரின் நொந்து போன உள்ளத்துக்கு அவள் கொடுத்த கோப்பி இதமாக இருந்தது.

"கெடச்ச ஹதியாவால மகண்ட போடின் பீசக் கட்ட ஏழுமாயிருக்குமா?"

"என்ன ஹதியாவென்? ஒரு ஹதியாவும் கெடச்ச இல்ல. ஆத்தக் கடக்கிற வரக்கிம்தான் அண்ணன், தம்பி ஒறவு. கடந்ததுக்குப் பெறகு நான் தாரோ, நீ தாரோ எண்டு பழய மனிஷர் சென்ன கத உண்மையாப் பெயித்திட்டுது."

"அல்லாஹ்ட கலாமத்தானே நீங்க ஓதினீங்க. அதுட கூலிய அல்லாஹ் ஒங்களுக்குத் தருவான்."

ஆலிம்ஷாவின் மனதைத் தேற்ற அவள் அவ்வாறு சொன்னாலும் ஏதோ ஹதியாவொன்று உடனே கிடைக்காதது அவளுக்கும் ஒரு குறையாகவே பட்டது. அதைக் காட்டிக் கொள்ளாமல் அவள் அங்கிருந்து அகன்று சென்றாள். சற்று நேரம் செல்ல கதிரையில் சாய்ந்திருந்த ஆலிம்ஷா அவர்கள் கண் அயர்ந்து விட்டார். அப்போது ஏதோ சத்தம் ஒன்று கேட்க அவர் கண் விழித்துக் கொண்டார்.

"தம்பி, தம்பி, கல்லெறியாதே, ஏண்ட ஊட்ட அடிச்சி நொறுக்காதே. நான் புள்ள குட்டிக்காரன்."

ஆலிம்ஷா உரக்கக் கத்தியதைக் கேட்டு விட்டு அவரின் மனைவி பதறியடித்துக் கொண்டு முன் வாயிலுக்கு ஓடி வந்தாள்.

"உம்முஹானி, ஓடு, ஓடு, பின்பக்கமா ஓடு. அவங்க வந்து எங்கட ஊட்டுக்குக் கல் அடிக்கிறாங்க."

"அப்பிடி தாரு எங்கட ஊட்டுக்குக் கல் அடிக்க வருவாங்க. இங்க தாரையும் காண இல்லயே. நீங்க என்னமோ மனாம் ஒண்டக் கண்டு இருக்கிறீங்க போல. இப்ப மஹ்ரிபுக்கு நேரமாகிட்டுது. பள்ளிவாசலுக்குப் பெய்த்து இமாம் ஜமாத்த நடத்திப் போட்டு வாங்கோ. அல்லா எங்களக் கையுட மாட்டான். நான் பயத்துப் பலகாரம் செஞ்சி வச்சிருக்கிறேன். இஞ்சி போட்ட தேத்தண்ணி ஒண்டும் ஊத்தித் தரலாம்."

அவர் எழுந்து பள்ளிவாசலை நோக்கி நடையைக் கட்டினார். **நன்றி: ஞாயிறு தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. வன்முறைகள்

நான்கு புறமும் மதில்களால் சூழப்பட்டிருந்த அந்த வீடு புறநகர்ப் பகுதியொன்றில் அமைந்திருந்தது. வீட்டின் அமைப்பும் அதன் சுற்றுப்புறச் சூழலும் அங்கு வாழ்ந்து கொண்டிருப்போரின் பிரமாண்டத்தை எடுத்துக் கூறுவன போல் அமைந்திருந்தன. பல சமூக நல அமைப்புக்களில் அங்கம் வகித்து, தன்னைப் பிரபல்யப் படுத்திக் கொண்டிருந்த சமூக ஜோதி நசீமா ஹசீம் அவர்களே அங்கு குடியிருந்தார். வசீகரமான தோற்றம், பேச்சாற்றல், பிரச்சினைகளை அணுகி அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றின் மூலம் சிறந்த ஆளுமையொன்றை தனக்குள் வளர்த்துக் கொண்டிருந்த அவர் அவ்வமைப்புக்களில் முக்கியமான பல பதவிகளை வகித்துக் கொண்டிருந்தார். அதுமட்டுமல்ல சமூக, அரசியல், மதம் சார்ந்த பல பிரமுகர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்புகளும் இருந்தன. எனினும் அப்பிரமுகர்களை மேடைகளுக்கு அழைத்து பாராட்டி, பொன்னாடை போர்த்தி, கௌரவிப்பதன் மூலம் தனது பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாக அவருக்கெதிராகச் சில குற்றச்சாட்டுகளும் இருக்கவே செய்தன.

நசீமா ஹசீமின் கணவர் ஹசீம் இலங்கை ஆசிரிய சேவை தரம்-1 இல் சேவையாற்றி விட்டு தற்போது ஓய்வு பெற்றவராக இருந்தார். அவர்கள் இருவருக்கும் இடையே பத்து வருடத்துக்கும் மேற்பட்ட வயது வித்தியாசம் இருந்தது. அதனால் குடும்பத்தின் ஆட்சி அதிகாரம் நசீமா ஹசீமின் கைவசமே தங்கியிருந்தது. அவர்களது மகன் அம்ரி பல்கலைக்கழக-மொன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். மகளும் பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள்.

அன்றொரு நாள் மப்பும் மந்தாரமும் நிறைந்த ஒரு மாலைப் பொழுதில் ஹசீம் அன்றைய பத்திரிகையொன்றை எடுத்து வாசித்துக் கொண்டிந்தார். அப்போது தனது தாயாருடன் தொலைபேசி உரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்த நசீமா ஹசீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முடிந்ததும் ஹசீமுக்குக் குரல் கொடுத்தார்.

"ஹசீம் இன்னும் கொஞ்ச நேரத்தில உம்மா இங்க வந்திடுவா. அதனால உம்மா இங்கிருந்து போகும் வரக்கிம் ஒங்கட இருப்பிடத்த வேற எங்க சரி வச்சிக்கொள்ள இருக்கும்."

அதெப்பிடி நசீமா வேற எங்க சரி வச்சிக் கொள்ளுற? இது மழ காலமாச்சிது. கூதல் ஒரு பக்கம். நெளும்பு மறுபக்கம்."

"ஹசீம், ஊட்டுள மூனு ரூம்தான் இருக்கு. மகண்ட ரூமக் குடுக்க அவன் விரும்ப மாட்டான். மகளும் அவட ரூமக் குடுக்க விரும்ப மாட்டா. அதனால நாங்கதான் விட்டுக் குடுக்க வேணும். ஏதோ எங்களப் பாத்து சுகம் விசாரிச்சிட்டுப் போக உம்மா இங்க வாறா. ஏழெட்டு நாளைக்கித்தான் உம்மா இங்க இருப்பா."

"நசீமா சரி, சரி. வேற என்னதான் செய்ய? தலெக்கி மூத்த மனிசருட மனச நோகிச்சவும் ஏழா."

ஹசீம் வேறு வழியின்றி அவ்வாறு சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்து செல்ல, நசீமாவிடம் இருந்து அவருக்கு இன்னுமொரு கட்டளை பிறந்தது.

"ஹசீம், ஒங்களுக்கு லிஸ்ட் ஒண்டு தாரேன். கோவிச்சுக் கொள்ளாம நீங்க இப்ப ரவுனுக்குப் பெய்த்து அதிலுள்ள சாமானுகள வாங்கிவிட்டு வர வேணும்."

"நசீமா, இந்த அந்தி படுற நேரம். அதுவும் மல வரப் போற நேரம், நான் இப்ப ரவுனுக்கும் போக வேணுமா?"

"ஐயோ ஹசீம், இதென்ன கத கதைக்குரிங்க? நீங்களும் பென்ஷன் எடுத்த நாளேலிருந்து ஊட்டுள்ளுக்கு அடபட்டு, வேலவெட்டி ஒண்டுமில்லாமத்தானே இருக்குரிங்க. அதனால இந்த அந்திபடுற நேரத்தில கையக் கால வீசி, நடந்து பெய்த்து, ரவுனுல இருந்து சாமான் சட்டிகள தூக்கிக் கொண்டு வாங்களே. அது ஒங்களுக்கு ஒரு எக்சைசாகவும் இருக்கும்."

"சரி,சரி. அப்ப காசையும் லிஸ்டையும் இங்கால தாங்கோ."

நசீமாவிடம் இருந்து காசையும் சாமான் பட்டியலையும் பெற்றுக் கொண்ட ஹசீமுக்கு அவரிடம் இருந்து இன்னுமொரு கட்டளையும் பிறந்தது.

"ஹசீம் இன்னுமொரு விஷயமுமிருக்கு. உம்மா வருகிறத்துக்கு மொதல்ல ஒங்கட தலயண, பெட்ஷீட் எல்லாத்தயும் ஒங்களுக்குத் தேவயான எடமொண்டுல கொண்டு பெய்த்து வச்சிக் கொள்ளுங்களே. நான் இப்ப உம்மாக்கு இந்தக் கட்டில ரெடி பண்ணி வச்ச வேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெல்லாம் ஏண்ட தலே நசீபு."

"என்ன சென்னீங்க?"

"நான் என்னதான் செல்ல? ஏண்ட தலயண, பெட்ஷீட் எல்லாத்தயும் எனக்குத் தேவையான எடமொண்டுல கொண்டு பெய்த்து வச்சிக் கொள்ளுறேன் என்டுதான் சென்னேன்."

பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ள அவர் விரும்பாததால் உடனே அவற்றை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தார். அப்போது அம்ரி அங்கே வந்து சேர்ந்தான்.

"என்ன வாப்பா, என்ன இது? தலயண, பெட்ஷீட் எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு வீட்ட விட்டு எங்க சரி போகப் போரீங்களா?"

"நான் எங்க போக? இந்த வயசு காலத்துல என்னப் பொறுப்பெடுக்க யார் இருக்காங்க? இன்னம் கொஞ்ச நேரத்துல உம்மம்மா இங்க வரப் போறாவாம். அவவுக்கு ஏண்ட கட்டில குடுத்துப் போட்டு, நான் இது எனக்கேத்த எடமொண்டத் தேடிக் கொண்டு போறேன்."

"வாப்பா, நீங்க எங்கயும் போகத் தேவ இல்ல. ஏண்ட கட்டில் இருக்கு. அதுல படுங்கோ. நான் செட்டீல படுக்குறேன்."

"அம்ரி, உம்மம்மா ஏழெட்டு நாட்களுக்கு இங்க தங்குவாவாமே. ஒனக்கு ஏழெட்டு நாட்களுக்கு செட்டீல படுக்க ஏழுமாகுமா?"

"வாப்பா, உம்மம்மா ஏழெட்டு நாட்களுக்கு அல்ல, ஒரு மாசம் இங்க தங்கினாலும் பரவாயில்ல. எனக்கு செட்டீல படுக்க ஏழும். நீங்க அதப்பத்திக் கவலப்படத் தேவ இல்ல."

"அம்ரி, நீ கெம்பஸ்ல படிச்சிற புள்ள. ஒனக்கு எவளவு விஷயம் படிச்சிறத்துக்கு இருக்கும். வாப்பா பென்ஷன் எடுத்துப் போட்டு ஊட்டுல சும்மா இருக்கிற மனிஷன். அவருக்கு நல்லா செட்டீல படுக்கலாம். நீ ஒண்ட ரூம்ல படுத்துக்கோ."

"உம்மா, நான் ஒரு மொற ஒங்களுக்குச் செல்லிட்டேன். வாப்பா ஏண்ட ரூம்ல படுக்கட்டும். நான் செட்டீல படுக்கிறேன்."

அவன் தனது தந்தையிடம் இருந்து தலையணை, பெட்ஷீட் என்பவற்றை வாங்கி, அவற்றைத் தனது அறைக்குள் கொண்டு போய் வைத்தான்.

"நசீமா, பாத்தீங்களா? அம்ரி ஏண்ட மகன். உம்மா, வாப்பாவுக்கு செய்ய வேண்டிய கடமகள நான் அவனுக்குச் சின்ன வயசில இருந்தே படிச்சிக் குடுத்திருந்தேன். அதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப வேல செய்யுது."

"மகனுக்கு ஐசு வச்சி வச்சி அவண்ட படிப்பப் பாழாக்குறது ஓங்களுக்கு இப்ப வேலயாப் பெய்த்திட்டுது."

"சரி, நசீமா சரி. அப்ப நான் ரவுனுக்குப் பெய்த்து இந்தச் சாமான் சட்டிகள வாங்கிட்டு வாரேன்."

"வாப்பா, இந்த அந்தி படுற நேரத்தில என்ன சாமான் சட்டிய வாங்குறத்துக்கு ரவுனுக்குப் போறீங்க?"

"மகன், உம்மம்மா வாராவல்யா. அதனால அவவ நாங்க நல்லா கவனிச்சி அனுப்ப இருக்குமே. அதுதான், உம்மா இது லிஸ்ட் ஒண்டு தந்திருக்கிறா. இந்தச் சாமானுகள வாங்கி வரச் செல்லி."

"உம்மா, இங்க வாங்கோ. அந்த டிரைவர் நானாகிட்ட இந்த லிஸ்ட்டக் குடுத்து ஓங்களுக்குத் தேவையான சாமானுகள அழப்பிச்சி எடுக்க இருந்திச்சிதே."

"ஐயோ அம்ரி அந்த டிரைவர், புள்ள குட்டிக்காரன். அவண்ட பொண்சாதி பாவம். அவனுக்கு ஊட்டுக்குப் போனா ஆயிரம் வேல வெட்டி இருக்கும். வாப்பா ஊட்டுல சும்மா இருக்கிற மனிஷன்தானே. ரவுனுக்குப் பெய்த்து இந்தச் சாமான் சட்டிகள எடுத்து வாரது அவருக்கு பெரியதொரு வேலயா?"

"உம்மா நான் இது சென்னது பெரிய வேல, சின்ன வேலயப் பத்தி அல்ல. அந்தி படுற நேரத்தில, அதுவும் மழ காலத்துல வாப்பாவ ரவுனுக்கு அனுப்புறது பிழ எண்டுதான் சென்னேன்."

"வாப்பாவுக்கு வக்காலத்து வாங்குறது மகனுக்கு இப்ப வேலயாப் பெயித்திட்டுது. வாப்பா திருந்தவும் இல்ல. இப்பிடியே போனா மகனும் திருந்த மாட்டாரு போல."

"வாப்பா, இந்த அந்திபட்ட நேரம் நீங்க ரவுனுக்குப் போகத் தேவ இல்ல. அந்த லிஸ்ட்டையும் காசையும் இங்கால தாங்கோ. நான் பெய்த்து அந்தச் சாமான்கள வாங்கிட்டு வாறேன்."

தனது தந்தையிடம் இருந்து பணத்தையும் சாமான் பட்டியலையும் பெற்றுக் கொண்ட அம்ரி அங்கிருந்து வெளியேறி விட்டான்.

"ஹசீம், அப்ப ஓங்களுக்கு வேறொரு வேல இருக்கு. ஏண்ட கையெழுத்த விட ஓங்கட கையெழுத்து அழகா இருக்கிறத்தால லிஸ்ட் ஒண்டு தாரேன். அதில உள்ள பேர்கள இந்த இன்விடேஷன் கார்ட்களில நீங்க எழுதித் தர வேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாரம் நடைபெறவிருந்த சர்வதேச மகளிர் தின விழா அழைப்பிதழ்களையும் பெயர் பட்டியல்களையும் நசீமா கொண்டு வந்து ஹசீமிடம் கொடுக்க, வேண்டா வெறுப்புடன் அவற்றைப் பெற்றுக் கொண்ட அவர் தனது பணியை ஆரம்பித்தார். அப்போது நசீமாவின் தாயார் குல்தூம் நாச்சியா அங்கே வந்து விட்டார். தாயாரைக் கண்டதும் நசீமாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

"உம்மா ரெண்டொரு நாட்களுக்கு முந்தி நீங்க எனக்கு அறிவிச்சிருந்தா நான் ஏண்ட காரையே அனுப்பி வச்சிருந்தீப்பேனே."

"சரி,சரி. மகள் நான் இப்ப வந்திட்டேன் தானே. மறுமகன் எங்க? பேரப்புள்ளகள் எங்க? ஒருத்தரையும் காண இல்லயே?"

"அவர் அங்கால சின்ன வேலயொண்டு. மகன் ரவுனுக்குப் பெய்த்திருக்கிறாரு. மகள் இப்ப வந்திடுவா. ஹசீம், உம்மா வந்திட்டா. இங்கால வந்து காருக்குள்ள இருக்கிற உம்மாட பேக்குகள எடுத்திட்டு வாங்களே."

செய்து கொண்டிருந்த வேலையை இடை நிறுத்திய ஹசீம் வெளியே சென்று தனது மாமியார் கொண்டு வந்திருந்த பேக்குகளை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

"மறுமகன் எப்பிடி சொக துக்கங்கள்? பென்ஷன் எடுக்கிறத்தையும் எடுத்திட்டீங்க. இப்ப வேல வெட்டி ஒண்டும் இல்லாம ஊட்டுள சும்மா காலத்தக் கழிச்சிறீங்க போல."

"மாமி. நான் நாப்பது வருஷம் ஒழச்சது போதாதா? நீங்க எனக்கு இன்னும் ஒழச்சச் செல்லுறீங்களா?"

"மறுமகன், ஆம்புள எண்டா கடசி மூச்சுவர ஒழச்சவேணும். அப்பிடியெண்டாத்தான் அந்த ஆம்புளக்கி கவுரவமா ஊட்டுல வாழ முடியுமாக இருக்கும். நான் ஏண்ட அனுபவத்தச் சென்னேன். அவளவுதான்."

அப்போது அவ்விடத்துக்கு அம்ரி வந்து சேர்ந்தான்.

"ஹாய், உம்மம்மா வந்திட்டீங்களா?"

"என்னப் பார்க்க ஏண்ட பேரப்புள்ள வர இல்ல. அதனால பேரப்புள்ளய பார்த்திட்டு போக உம்மம்மா வந்திருக்கிறா. அது சரி மகன் ஓங்கட படிப்பு விஷய மெல்லாம் எப்பிடி போகுது?"

"உம்மம்மா அதெல்லாம் ஒழுங்காப் போகுது."

"வாப்பாவப் போல வாத்தித் தொழில் எடுக்காம நல்லாப் படிச்சி பெரிய உத்தியோகம் ஒண்டு எடுக்க இப்பவே மனசில வச்சிக் கொண்டு படியுங்கோ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மம்மா, வாப்பா வாத்தித் தொழிலச் செஞ்சி எங்களுக்குத் தின்னத் தர இல்லயா? உடுக்கத் தர இல்லயா? படிப்பிச்ச இல்லயா? வாப்பா எங்களுக்கு எந்தக் கொறயும் வச்ச இல்ல."

அப்போது அவ்விடத்துக்கு அம்ரா வந்து சேர்ந்தாள்.

"உம்மம்மா, தங்கச்சி வந்திட்டாதானே. எனக்கு படிக்கிறதுக்கு அதிகமான விஷயங்கள் இருக்கு. நான் அப்ப போறேன். தங்கச்சியோட நீங்க கதச்சிக் கொண்டு இரீங்கோ."

அம்ரி அங்கிருந்து அகன்று செல்ல, நசீமா தனது தாயாருக்குத் தேநீர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

"நசீமா, அம்ரி அவன்ட வாப்பாக்கு ஏத்த மகனாக இருக்கிறான். வாப்பாவும் மகனுக்கு ஏத்த வாப்பாவாக இருக்கிறாரு போல. உம்மாமாரு, ஆம்புளப் புள்ளகள வாப்பாட பக்கத்துக்கு சார்ந்து போக உடப் படாது. அது பெறகொரு காலத்துல உம்மாமாருக்கு பிரச்சினைகள ஏற்படுத்திப் போடும். நீ மகண்ட விஷயத்துல கவனமாக இருந்து, அவன ஓண்ட பக்கத்துக்குச் சார்ந்த புள்ளயா வளர்த்துக் கொள்ளப் பாரு."

"நான் ஒங்கட மகள். அவன வாப்பாட பக்கத்துக்குச் சார்ந்து போக நான் விடுவேனா? இருந்து பாருங்களே."

"உம்மா, நானா அங்கால இருக்கிறாரு. நீங்க பேசுறது அவருக்குக் கேட்டா பலாய் ஒண்ட இழுப்பாரு. அதனால கவனமாகப் பேசுங்கோ."

"ஆம்புளகளுக்கு இப்படிப் பயந்தா எப்பிடி மகள் பொம்புலகள் உலகத்துல வாழுற? பொம்புலகள்ட ஒடம்புல ஓடுற ரத்தம் எப்பவும் சூடாக இருக்க வேணும். அது எப்ப குளுந்து போகுமோ அப்ப அவ ஆம்புலக்கி அடிமயாப் போக வேண்டி வரும். அதெல்லாம் எங்க என்னோட? நீ உம்மம்மாவோட ஊர் புதினங்களப் பத்தி கொஞ்ச நேரம் கதச்சிக் கொண்டு இருந்து போட்டு, படிப்பு வேலகளக் கவனி. எனக்கும் நெரய வேலவெட்டிகள் இருக்கு."

அதன் பிறகு நசீமா நேரே தனது கணவனிடம் வந்தார்

"ஹசீம், மாதர் சங்க வேலகள் எக்கச் சக்கமா பாக்கியா இருக்கு. அதனால இண்டிரவுச் சாப்பாட்ட நாங்க கடயாலதான் வாங்க வேணும். இன்விடேஷன் கார்ட் எழுதுற வேல முடிஞ்சதும் நீங்க கடைக்குப் பெய்த்து சாப்பாட்ட வாங்கிக் கொண்டு வாங்கோ. ஒங்கள சாப்பாடு வாங்க அனுப்பினது மகனுக்குத் தெரிய வந்தா அவன் என்னோட சண்டக்கி வருவான். அதனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தெரியாமத்தான் நீங்க கடக்கிப் போக வேணும். தேவயான காசு இங்க இருக்கு."

சாப்பாட்டுக்குத் தேவையான காசை எண்ணிக் கொடுத்து விட்டு, தனது இருக்கையில் வந்து அமர்ந்த நசீமா, சர்வதேச மகளிர் தின விழாவில் தான் சமர்ப்பிக்க எடுத்துக் கொண்ட "பெண்களுக் கெதிரான வன்முறைகள்" எனும் தலைப்பிலான கட்டுரையை எழுத ஆரம்பித்தார். ஆனாதிக்கம், மாமியார் கொடுமை, பெண்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பி வைத்தல், சீதனக் கொடுமை, பாலியல் வல்லுறவு, போதிய காரணமின்றி பெண்களை விவாகரத்துச் செய்தல், ஆண்கள் தொழிலுக்குப் போகும் போது பெண்கள் வீடுகளில் தனிமைப் படுத்தப் படுதல். ஆண்கள் இரவு நேரங்களில் கால தாமதம் செய்து வீட்டுக்கு வருகை தருதல். ஓய்வு கொடுக்காது பெண்களை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்துதல், ஆண்களின் போதைப் பழக்கம்,.. என அங்குள்ள விடயங்கள் நீண்டு கொண்டு போயின. அவை அனைத்தும் பெண் விடுதலைக்குச் சார்பானதாகத் தென்பட்டாலும் அவற்றுல் சில ஆண்களுக்கு எதிராக பெண்களைத் தூண்டி விடுவன போலவும் இருந்தன.

கட்டுரையை எழுதி முடித்த நசீமா அதைப் பல முறை செவ்வை பார்த்தார். அங்கு வரும் அனைத்து விடயங்களும் ஒழுங்காக ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்க்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சிறிது நேரம் தனது கட்டுரையில் மெய் மறந்திருந்த நசீமா அவ்வாரத்துக்குரிய நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் ஈடுபட்டார்.

சர்வதேச மகளிர் தின விழாவுக்கு வரவிருக்கும் அதிதிகளுக்கு அழைப்பிதழ்களைக் கொடுத்தல், அன்றைய தினம் மேடையில் வைத்து வாழ்வாதாரமற்ற பெண்களுக்கு உதவி செய்வதற்காக அனுசரணையாளர்களைக் கண்டு பிடித்தல், மாதர் சங்கத்துக்கு புதிதாக அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், விவாகரத்துப் பெற்றுக் கொள்ள இருக்கும் பெண்களுக்கு சட்ட ஆலோசனை பெற்றுக் கொடுத்தல் என அந்நிரல் நீண்டு கொண்டு போனது.

அப்போது ஹசீம் உணவுப் பார்சல்களுடன் வந்து சேர்ந்தார். அதன் பிறகு எல்லோருமாக சேர்ந்து உணவருந்தி விட்டு படுக்கைக்குச் சென்று விட்டனர்.

நசீமாவுக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் பூராக தனக்கிருக்கும் ஓய்வில்லாத உழைப்பின் மூலம் தனக்கு ஏற்படப் போகும் பேரையும் புகழையும் நினைக்கும் போது அவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

காலம் வேகமாகச் சுழன்றது. அவ்வருட சர்வதேச மகளிர் தின விழாவுக்குரிய சகல ஏற்பாடுகளும் நசீமாவின் பொறுப்பிலேயே நடைபெற்றது. அதற்குப் பலர் உதவி செய்ய, குறிப்பிட்ட தினம் மாலை ஐந்து மணியளவில் கோலாகலமாக விழா ஆரம்பமாகியது. அதிதிகளின் வருகை தாமதமானாலும் பார்வையாளர்களால் மண்டபம் நிறைந்திருந்தது. நகரெங்கும் இடையிடையே பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் மூலம் விழா நிகழ்ச்சிகள் ஒலித்துக் கொண்டிருந்தன.

பார்வையாளர்கள் மத்தியில் நசீமாவின் தாயாரும், மகள் அம்ராவும் அமர்ந்து உற்சாகமாகக் காணப்பட்டனர். தலைமை உரை, வரவேற்புரை, ஒரு சில அதிதிகளின் பேச்சு என்பவற்றுக்குப் பிறகு நசீமா தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிப்பதற்கு மேடையில் சமூகம் கொடுத்தார். அப்போது பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கரகோஷம் ஒன்று எழுந்தது. வீட்டில் இருந்த ஹசீமுக்கு நகரில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கி ஒன்றினூடாக நசீமாவின் பேச்சு தெளிவின்றிக் கேட்டுக் கொண்டிருந்தது. அதை உள்வாங்கிக் கொள்வதற்கு அவருக்குத் தேவையொன்று இருந்தாலும் உடல் அசதி அதற்கு இடங் கொடுக்கவில்லை. அம்ரியும் வரத் தாமதமானதால் தனிமையும் அவரை வாட்டியது. அதனால் அவர் தனது படுக்கையில் வந்து சாய்ந்து கொண்டார். அப்போது என்றுமில்லாதவாறு அவரது இடது கை இலேசாக வலி எடுக்க ஆரம்பித்தது.

"இஷாவுக்கும் நேரமாகிட்டுது. எதுக்கும் பெணடோல் ரெண்டப் போட்டுக் கொண்டு படுத்தா எல்லாம் சரியாயிடும்."

ஆனால் அவரால் எழுந்து நிற்க முடியவில்லை. இடது கை வலி நெஞ்சையும் ஆக்கிரமித்திருந்தது.

நசீமா தனது கட்டுரையை தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார்.

"ஆண்கள் இரவு நேரங்களில் தாமதமாகி வீட்டுக்கு வருவது, பெண்களை உடல், உள ரீதியாகப் பாதிப்படையச் செய்வதனால் அதுவும் பெண்களுக்கெதிரான ஒரு வன்முறையாகவே கருதப்பட வேண்டியுள்ளது."

ஹசீமுக்கு நெஞ்சுவலி அதிகரிக்க, அவர் தலையணையொன்றை எடுத்து அதை நெஞ்சில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தியவாறு நசீமாவின் குரலை செவிமடுக்க முயற்சி எடுத்தார்.

நன்றி : ஞானம் - 2014, மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. நெருப்பு

சுல்தான் ஹாஜியார் தனது வீட்டு விறாந்தையில் போடப்பட்டிருந்த கதிரையொன்றில் அமர்ந்து, தனது தாய் மாமன் வரும்வரை காத்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது வலப்பக்கமாக இருந்த மர ஆலையின் இரைச்சலை மீறிக்கொண்டு, இடப்புறமாக நின்ற கொம்பனானையின் பிளிறல் ஒலித்தது. அதைத் தொடர்ந்து வீட்டுக்குள் இருந்து சக்களத்திகளின் வாய்த்தகராறொன்றும் அவருக்குக் கேட்ட வண்ணமாக இருந்தது.

"ஏண்ட தலே நசீபு. மாமா வார நேரம் பாத்து இவளுகளும் சண்டயொண்டத் தொடங்கிட்டாளுகள் போல."

அதைத்தொடர்ந்து அடிக்கடி சுல்தான் ஹாஜியாரை வாட்டி வதைத்த கடந்தகாலச் சம்பவங்கள் மீண்டும் ஒருமுறை அவரின் மனத் திரையில் மின்ன ஆரம்பித்தன. அப்போது அவரின் தாய் மாமனாரான மரிக்கார் ஹாஜியார் கார் ஒன்றில் வந்து இறங்கிக் கொண்டார்.

"அஸ்ஸலாமு அலைக்கும் சுல்தான். எப்பிடி சொகதுக்கங்கள்?"

"வஅலைகுமுஸ்ஸலாம் மாமா. சொகதுக்கத்த என்னத்துக்குக் கேக்குறீங்க?"

அதன் பிறகு அவர்கள் இருவரும் கைகொடுத்து சலாம் சொல்லி சம்பிரதாய முறைப்படி ஆரத் தழுவிக் கொண்டனர்.

"மாமா, நீங்க மிச்சம் கலச்சிப் போய் வந்திருக்குறீங்க. மொதல்ல எதாவது குடிச்சிட்டிருப்போம். டீ, பிலேன்டீ, கூல்டிரிங்ஸ் இல்ல தெம்பிலி எது நல்லம்?"

"சுல்தான், இந்த நேரத்துக்கு தெம்பிலி ஒன்டுதான் நல்லா ஈக்கும்."

சுல்தான் ஹாஜியார் அங்கிருந்த மணியை அழுத்த, வீட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாள் மம்மன்சார் அவர்களுக்கு முன்னால் வந்து, கூனிக் குறுகிய வண்ணம் நின்று கொண்டான்.

"மம்மன்சார், நீ பெய்த்து நல்ல தெம்பிலி ரெண்டு எடுத்து, வெட்டி, ஸ்ட்ரோ ரெண்டும் போட்டு எடுத்திட்டு ஓடி வா பாக்க."

"என்னா வெப்பு?, என்னா வெப்பு? காலநிலையெல்லாம் மாறிக் கொண்டு போகுதே! சுல்தான்."

அன்றைய காலநிலையிலிருந்து தொடங்கிய அவர்களது பேச்சு வார்த்தையில் அரசியல், நாட்டு நிலவரம் வியாபாரம் என பல்வேறு விடயங்கள் அலசி ஆராயப்பட்டன. அப்போது செவ்விளநீரும் வந்து சேர்ந்தது. அதை இருவரும் அருந்தி முடித்ததும் மரிக்கார் ஹாஜியார் தன்னை அங்கே அழைத்ததற்கான காரணத்தை வினவி நின்றார்.

"மாமா, நான் வாலிப வயசில விட்ட தப்புத் தவறுகள் என்ன எண்டு ஓங்களுக்குத் தெரியும். இப்போ அதெல்லாம் ஒண்டாச் சேந்து ஏண்ட மனச உறுத்த ஆரம்பிச்சிட்டுது. அது போதாத்துக்கு காலாகாலத்துல ஏண்ட புள்ளகளுக்குக் கலியாணம் காப்புகளச் செஞ்சி வச்சவும் என்னால முடியாமப் பெயித்துட்டுது. அதனால இப்போ எனக்கு பசி எடுத்தா தின்க மனமில்ல. தாகம் எடுத்தா குடிச்ச மனமில்ல. படுத்துக் கொண்டா தூக்கம் வர இல்ல. இந்த ஆக்கினயெல்லத்திலயும் ஈந்து நான் விடுபட, நடந்த விஷயமெல்லாத்தையும் செல்லி ஒரு நாள் ஆலிம் ஒருத்தருக்கிட்ட ஆலோசன கேட்டுப் பாத்தேன்."

"சுல்தான், அப்ப அவர் சென்ன பரிகாரம் என்னத்தென்?."

"மஹ்ரிபுத் தொழுகைக்கும், இஷாத் தொழுகைக்கும் எடையில, நான் செய்த தவற உணர்ந்து, அதுக்கு அல்லாட்ட பாவமன்னிப்புக் கேட்டா, மனம் சாந்தி அடையும் எண்டு அவர் ஒரு ஆலோசன சென்னாரு. அவர் சென்ன மாதிரி நான் கொஞ்ச நாள் செஞ்சி வந்தேன். ஆனா, மனம் சமாதானம் அடைய இல்ல. அதுக்குப் பெறகு மனநல டொக்டர் ஒருத்தருக்கிட்டப் பெய்த்து நடந்த விஷயம் எல்லாத்தையும் சென்னேன். அவர் மருந்து மாத்திரகள எழுதித் தந்து போட்டு செல பயிற்சிகளச் செய்யும் படி எனக்கு ஆலோசன சென்னாரு. அதுவும் சரிவர இல்ல. அதுதான் ஏண்ட கார அனுப்பி ஓங்கள இங்க வரவழச்சேன். நீங்க நாலு விஷயம் தெரிஞ்சவரு. என்னப் பத்தி நல்லா அறிஞ்சவரு. குடும்பத்துக்கு மூத்தவரு. நீங்கதான் ஏண்ட மனசு சமாதானம் அடைய இப்ப ஏதாவது ஆலோசன செல்ல வேணும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுல்தான், நீ மார்க்க சட்டதிட்டங்களுக்கு மாறாக, ஊர் வழமகள மீறி, சமூகக் கட்டுப்பாடுகள மதிக்காம செல தவறுகளச் செஞ்சிட்டாய். அதுக்குக் கூட்டம் குடும்பமும், ஊர் மக்களும் ஒன்ன ஒதுக்கி வச்சாலும் தாய் மாமன் நான் ஒன்னக் கையுட இல்ல. இதுக்குப் பெறகும் நான் ஒன்னக் கையுட் மாட்டேன். நீ படுற வேதன ஓண்ட மொகத்துல நல்லா வெளங்குது. ஓண்ட புள்ளகளுக்குக் காலாகாலத்துல கலியாணம்காப்புகளச் செஞ்சி வச்சிருந்தாயெண்டா பேரப்புள்ளகளுட தமாசிலாவது ஓண்ட மனசு ஆறுதலடஞ்சீக்கும். நீ செஞ்ச தவறுகள மனிஷர் இன்னும் பேசுறாங்க. அதுதான் ஓண்ட புள்ளகள்ட கலியாணம்காப்புகள் இன்னும் தாமதம் ஆகுது போல. நீ செஞ்ச பிழகள் ஒன்ன மட்டுமல்ல, ஓண்ட புள்ளகளையும் பாதிச்சிட்டுது."

"மாமா, நடந்து முடிஞ்ச கதகளப் பத்தி இப்ப பேசுரத்தால எந்தப் பிரயோசனமும் இல்ல. எனக்கு இப்போ இருக்கிற பிரச்சினகளுக்கு ஒரு பரிகாரம் காணத்தான் நான் ஒங்கள இங்க வரவழச்சேன்."

"சுல்தான், எனக்கு வெளங்குற மாதிறிக்கு பல விஷயங்கள் ஓண்ட மனச உறுத்துது. அதுல மொதலாவது விஷயம், எப்பவோ நடந்து போன சம்பவங்களால ஒனக்கேற்பட்ட அவமானம். அது முடிஞ்சி போன கத. அத விட்டிடு. ரெண்டாவது விஷயம் ஓண்ட மூத்த மகள்ட கலியாணம். மூனாவது விஷயம் அவளுக்கு ஓண்ட அந்தஸ்த்துக்கு ஏத்த மாப்புளயக் கண்டு புடிச்சிவது. நாலாவது விஷயமொண்டும் ஈக்கு. நீ எழந்த அந்தஸ்த திரும்ப எப்பிடிப் பெறமுடியுமெண்டு ஒனக்குள்ள ஈக்கிற கவல. இதெல்லாத்திலயும் மொதலாவதாக ஓண்ட மகள்ட விஷயத்த நாங்க முடிச்சிப் போட வேணும்."

"மாமா, அதுக்கேத்த எடமொண்டு ஒங்கட கைவசமாவது ஈக்கா?"

சுல்தான் ஹாஜியார் மிக உற்சாகத்துடன் வினவி நின்றார்.

"கொழும்புல எனக்குத் தெரிஞ்ச மொதலாளி ஒத்தர் ஈக்குறாரு. அவர்ட பெயர் தாவூஸ் ஹாஜியார். ஒன்ன விடப் பெரிய பணக்காரன். இம்போர்ட் எக்ஸ்போர்ட பிஸ்னஸ்தான் பண்ணுறாரு. ஒனக்குப் போல அவருக்கும் ஒரு சின்னக் குடும்பப் பிரச்சின ஈக்கு. அதுவும் ஒரு பொம்புளப் பிரச்சினதான். அவரும் தண்ட மகனுக்கு எத்தனயோ எடங்களுல பொண் தேடினாரு. ஆனா அந்தக் குடும்பப் பிரச்சின குறுக்கே நிற்குது. நேத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தனாத்து கலியாண ஊடொண்டுல வச்சி அவர் என்னச் சந்திச்சாரு. அவர்ட குடும்பப் பிரச்சின எல்லாத்தயும் ஒழிப்பு மறப்பு இன்றி எனக்கிட்ட சென்னாரு. அதுக்குப் பெறகு அவர்ட மகனுக்கு, எனக்குத் தெரிஞ்ச எடமொண்டுல கலியாணம் ஒண்டு பேசச் சென்னாரு. எனக்கு ஒடனே ஓண்ட மகள்தான் ஞாபகத்துக்கு வந்தா. நீ விருப்பம் எண்டா அந்த விஷயத்தப் பேசிப் பாக்கலாம்."

"மாமா, தாவூஸ் ஹாஜியார்ட குடும்பப் பிரச்சினய எனக்குத் தெரிஞ்சு கொள்ள ஏலுமா?"

அப்போது, மரிக்கார் ஹாஜியார், சுல்தான் ஹாஜியார் உட்கார்ந்திருந்த கதிரைக்குப் பக்கத்தில் இருந்த கதிரையொன்றில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

"மகனே, ரெண்டு பொண்டாட்டிக் காரனுகளுட ஊட்டுச் சுவருகளுக்கும் காதுகள் ஈக்கலாம். அதனால நாங்க கவனமாகத்தான் பேச வேணும்."

அதன் பிறகு மரிக்கார் ஹாஜியார் சுற்றுப் புறத்தை நன்கு அவதானித்து விட்டு, தாவூஸ் ஹாஜியாரின் குடும்பப் பிரச்சினையை காதோடு காது சொல்லி வைத்தார். அதைக் கேட்டதும் சுல்தான் ஹாஜியாருக்கு ஏற்பட்ட வியப்பில், அவரின் கண் புருவங்கள் நெற்றியில் போய் நின்று விட்டன. அப்போது சுல்தான் ஹாஜியாரின் முகத்தில் ஏற்பட்ட பாரதூரத்தை அவதானிப்பதற்கு மரிக்கார் ஹாஜியார் தவறவில்லை.

"சுல்தான், நான் ஓண்ட தாய் மாமா. நான் ஒனக்கு துரோகம் செய்ய மாட்டேன். தாவூஸ் ஹாஜியார்ட குடும்பத்தார் கொழும்பு மனிஷர். இங்க ஈக்கிற நாட்டானுகளுக்கு அவங்களப் பத்தி எதுவும் தெரிய வாய்ப்பில்ல. நான் இப்ப ஒனக்கிட்ட சென்ன விஷயம் எனக்கும் ஒனக்கும் மட்டும் தெரிஞ்சாப் போதும். ஓண்ட புள்ளகுட்டிகளுக்கும் அந்த விஷயங்கள இப்போ செல்லத் தேவ இல்ல. தருணம் வரக்குள்ள தேவப்பட்டா செல்லி வெச்சுவோம். எல்லா விஷயங்களையும் பாத்துக் கேட்டு, இன்ஷா அல்லா நீ விருப்பம் எண்டா இந்த விஷயத்த நான் நெறவேத்தித் தாறேன். அப்ப ஓண்ட மனச உறுத்துற ஒரு விஷயம் நீங்கிடும். ஓண்ட மகளுக்கும் நல்லதொரு வாழ்க அமயும்."

தனது மகளின் திருமணப் பேச்சுவார்த்தைகள் தளர்ந்து போயிருந்த நிலையில் தாய் மாமனாரின் வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத நிலைக்கு சுல்தான் ஹாஜியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்பட்டிருந்தார்.

"சரி, மாமா சரி, அல்லாஹ் வச்ச மாதிரி நடக்கட்டும். நீங்க அந்த விஷயத்தப் பேசுங்கோ. மனசுக்குப் புடிச்சா செஞ்சி வச்சுவோம்."

அப்போது சுல்தான் ஹாஜியாரின் மூத்த மனைவி சாரா கொண்டு வந்து கொடுத்த தேநீரை அருந்திவிட்டு மரிக்கார் ஹாஜியார் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

தாவூஸ் ஹாஜியார் வீட்டுக் குடும்பப் பிரச்சினை இங்கே இப்போதைக்கு இருவருக்கிடையே ரகசியமாகப் பேணப்பட்டாலும் சுல்தான் ஹாஜியார் வீட்டுக் குடும்பப் பிரச்சினை பரகசியமாகவே இருந்தது. அதனால் கதையை முன்னெடுத்துச் செல்ல அப்பிரச்சினை உருவாகிய விதத்தை ஆரம்பத்தில் இருந்தே குறிப்பிட்டாக வேண்டும்.

சுல்தான் ஹாஜியார் பரம்பரைச் செல்வந்தராக இருந்தார். அவரின் தந்தை செய்து கொண்டு வந்த மர வியாபாரத்தை அவரும் செய்து வந்தார். ஊரில் ஏகப்பட்ட நிலபுலன்களும், காசுபணமும், வீடுவாசல்களும், வாகன வசதிகளும் அவருக்கிருந்தன. அவருக்கு வயது இருபத்தெட்டு பூரணமாவதற்கு முன்பே பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர் பதவி அவருக்குக் கிடைத்திருந்தது. அதற்கு அவருக்கிருந்த சிறந்த ஆளுமைதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். அதனால் அவருக்கு அன்று பெண் கொடுப்பதற்குப் பல செல்வந்தர்கள் முன் வந்தார்கள். இருந்தும் அவர் பார்த்த பெண்களுள் மக்கீன் ஹாஜியாரின் மகள் சாராவே அவரின் உள்ளத்தைக் கவர்ந்து நின்றாள்.

"சுல்தான் ஊட்டார் சாராவுக்கு விருப்பம் எண்டு செய்தி அனுப்பி வச்சீக்குறாங்க. மாப்புள சீதனமோ, நகநட்டோ, கைக்கூலியோ, எதுவுமே தேவ இல்ல எண்டு செல்லிட்டாராம். ஆனா மாப்புளேட வாப்பா எங்கட கொம்பனச் சீதனமா எதிர்பார்க்கிறாராம்."

இவ்விடயத்தை ஒரு நாள் இரவு உணவருந்தும் போது மக்கீன் ஹாஜியார் தனது மனைவியிடம் தெரிவித்துக் கொண்டார்.

"எங்கட ஊட்டுல புள்ள போல வளந்த கொம்பன நாங்க எப்பிடிக் குடுக்கவென்?"

"குல்தூம், கொம்பன் புள்ள போல வளந்தது உண்மதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா, அவங்க எங்கட புள்ளக்கித்தானே கொம்பனச் சீதனமா கேக்கிறாங்க. கொம்பன் எங்களுட்ட ஈக்கிறத்த விட சுல்தானிட்ட ஈக்கிறது, அவர்ட மரம் யாவாரத்துக்கும் ஒதவியாக ஈக்கும். அதனால நாங்க கொம்பனச் சீதனமாக குடுத்து சாராட கலியாணத்த முடிச்சிப் போடுவோம்.''

மக்கீன் ஹாஜியாருக்கு அன்று பெருமை சேர்த்த கொம்பனானையை அவர் தனது மகளுக்குச் சீதனமாகக் கொடுக்கப் போகிறார் என்ற செய்தி ஊரெல்லாம் பரவலாகப் பேசப்பட்டது. அச்செய்திக்கு மேலும் மெருகூட்டுவதுடன் கொம்பனானைக்கும் பெருமையொன்றைச் சேர்க்க அவர் விரும்பினார். அதன்படி மூன்று அடி உயரத்தில் வெள்ளியால் ஓர் அங்குசம் செய்து, அதை மூன்று அடி நீள வெள்ளித் தட்டொன்றில் வைத்து, சுல்தான் - சாரா நிக்காஹ் நடைபெற்ற சபையில் அவர் ஒப்படைத்தார்.

அவ்வாறு எடுப்பும் மிடுக்கும் கம்பீரமும் நிறைந்த அந்த நிக்காஹ் மஜ்லிசுக்கு, சுல்தான் வழங்கிய வலீமா விருந்துபசாரம் மேலும் மெருகூட்டியது. அதனைத் தொடர்ந்து வந்த சில தினங்களில் புதுமணத் தம்பதியினர் புதுக்குடித்தனம் போய் விட்டனர். நவீன வசதிகளுடன் அமைக்கப் பட்டிருந்த அந்த இல்லம் சாராவின் மனதைக் கவர்ந்திருந்தது. அவளின் உதவிக்குப் பல வேலையாட்கள் இருந்தனர். இந்நிலையில் சுல்தான் - சாரா தம்பதியின் இல்லற வாழ்க்கை மிக இன்பகரமாகக் கழிந்தது. ஒரு வருடத்துக்குள் சாரா பெண் குழந்தையொன்றையும் பெற்றெடுத்து விட்டாள்.

குழந்தை பிறந்த ஒரு சில தினங்களில் அவளுக்கு ஜன்னி கண்டு விட்டது. அன்றிருந்த சிறந்த வைத்தியர்களின் சிகிச்சை அவளுக்குக் கிடைத்தும் அவளுக்கிருந்த நோய் குணமடைய காலதாமதம் ஏற்படுமென அவர்கள் கூறி விட்டனர். அதனால் குழந்தை வளர்ப்பு அவளின் தாயார் குல்தூமையே வந்தடைந்தது. அதுமட்டுமல்ல, நோய் வாய்ப்பட்ட சாராவின் பராமரிப்பும் அவளையே சார்ந்து நின்றது. குல்தூம் அதனால் மிகவும் தளர்ந்து போக, சாராவின் தங்கை பாராவும் அடிக்கடி வந்து தனது தாய்க்கு உதவியாக நின்றாள். நாளடைவில் சாரா படிப்படியாகத் தேறி வந்தாள். இக்கால கட்டத்தில் விபரீதம் ஒன்று நடந்து விட்டது. சுல்தானுக்கு பாரா மீது இருந்த ஒரு தலைக் காதல் அம்பலத்துக்கு வந்து விட்டது. அதைக் கேள்வியுற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கீன் ஹாஜியார் பதறிப் போய் விட்டார். ஆரம்பத்தில் அதை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள அவர் முயற்சி எடுத்தும் அது பலிக்க வில்லை. அதன் பிறகு அவர் மார்க்க அறிஞர்களையும், குடும்ப உறவினர்களையும் நாடினார்.

ஓர் இஸ்லாமிய ஆண் தனது மனைவி உயிருடன் இருக்கும் போது, அவளின் சகோதரியை திருமணம் முடிப்பதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்பதுடன், அது நமது கலாசார பண்பாடுகளுக்கும் இஸ்லாமிய வழிமுறைகளுக்கும் முரண் என்பதையும் அவர்கள் சுல்தானுக்கு எடுத்துக் கூறினார்கள். அதற்கு அவர் இசைந்து கொடுக்கவில்லை. அப்போது அவர்கள் சாராவை விவாகரத்துச் செய்து விட்டு, பாராவை மணமுடித்துக் கொள்ளுமாறு சுல்தானிடம் வினயமாக வேண்டிக் கொண்டார்கள். சுல்தானின் ஆணவம், அகங்காரம், அதிகாரம் என்பவற்றுக்கு முன்னால் இவையொன்றும் எடுபடவில்லை. அதனால் மக்கீன் ஹாஜியார், சுல்தானிடம் நேரடியாகச் சென்று, தனது மகள் பாராவைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொண்டார்.

"மாமா எனக்கு சாராவும் வேணும். பாராவும் வேணும். அவங்க ரெண்டு பேரும் இல்லாம என்னால வாழ முடியாது."

"மருமகன், இது எங்கட மார்க்கத்துக்கு முரணான விஷயம்."

"அது மார்க்கத்துக்கு முரணா? மார்க்கத்துக்கு முரணா நாங்க எத்தனையோ விஷயங்கள செய்றோம். சரி மாமா, நான் வரும் வரக்கிம் கொஞ்சம் இரீங்கோ."

சுல்தான் உள்ளே சென்றார். மீண்டும் அவர் வெளியே வரும் போது அவரது கையில கைத்துப்பாக்கியொன்று இருந்தது. அதை அவர் அவர்களுக்கு முன்னால் இருந்த மேசை மீது வைத்தார்.

"மாமா, நான் செய்யப் போறது மார்க்கத்துக்கு முரணான விஷயம் எண்டா, நீங்க இந்தத் கைத்துவக்கால் என்னச் சுட்டுக் கொன்று போடுங்கோ. ஒங்களால அப்பிடிச் செய்ய முடியாட்டி, நான் இப்ப ஒங்களச் சுட்டுக் கொல்வேன். அதுக்குப் பெறகு பாராவச் சுட்டுக் கொல்வேன். அதுக்குப் பெறகு சாரா. அதுக்குப் பெறகு ஒங்கட பேத்தி ஹலீமா. அதுக்குப் பெறகு என்ன நானே சுட்டுக் கொள்வேன். நீங்க என்னச் சுடுறதா? இல்ல நான் ஒங்களச் சுட வேண்டுமா? எண்டத்த நீங்கதான் முடிவு செய்ய வேணும். நீங்க முந்தினா ஒரு கொல விழும். நான் முந்தினா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி கொல விழும்."

இதைக் கேட்ட மக்கீன் ஹாஜியார் கதிரையில் இருந்து எழுந்து நின்றார். அவரின் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. நா வரண்டு விட்டது. அவருக்குச் சொற்கள் வரவில்லை. ஆனாலும் அவர் சொற்களை வலிய வரவழைத்துக் கொண்டார்.

"மறுமகன், தாத்தா உசிரோட ஈக்கத் தங்கச்சியக் கேப்பது ஒங்களுக்குப் பொல்லாத பாவம். அந்தப் பாவத்தச் செஞ்சி, என்னயும் அதுக்குப் பங்காக்கி, ஏண்ட குடும்பத்தையும் அவமானப்படுத்தப் போறீங்க. அதனால நான் கெஞ்சிக் கேக்கிறேன். இந்த விஷயத்த உட்டுப் போடுங்கோ. பாரா ஒங்களுக்குத் தேவ எண்டா, சாராவுக்கு தலாக் செல்லிப் போட்டு பாராவக் கட்டிக்கோங்கோ. மறுமகனே, ஒங்களோட மோத ஏண்ட வயசு எனக்கு எடந்தர இல்ல. அதனால நான் போறேன். யா அல்லா! நீ நீதியானவன். இந்த வீட்டுள்ளுக்கு இதுக்குப் பெறகு நடக்குற எல்லா விஷயங்களுக்கும் நான் ஒன்னயே சாட்டி விடுறேன்."

இதைக் கேட்ட சுல்தானின் முகத்தில் ஏற்பட்ட எள்ளலையும் ஏளனச் சிரிப்பையும் அவர் கண்டுவிட்டார். ஆகவே மேலும் சுல்தானுடன் கதை வளர்ப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதை, அவர் உணர்ந்து கொண்டு வாசல் வரை வந்தார். ஆயினும் அவரின் உள்ளம் தாங்கவில்லை. அதனால் அவர் தனது இரு கைகளையும் நெஞ்சில் ஓங்கி அடித்துக் கொண்டார்.

"டேய் சுல்தான், ஏண்ட நெஞ்சு பத்தி எரியுறது போல, ஒரு நாள் ஓண்ட நெஞ்சும் பத்தி எரியும். அந்த நெருப்பு ஒன்னச் சுட்டுப் பொசுக்கக்குள்ளதான் நீ செஞ்சது பிழ எண்டத்த ஒத்துக் கொள்வாய். அல்லா ஒரு நாள் ஒன்னக் கேக்கத்தான் போறான். நீ நரக நெருப்புல வேகத்தான் போறாய். அதனால நான் ஒன்ன விட்டு வெலகிப் போறேன்."

கால்கள் பின்ன, உடல் தள்ளாட அவர் அங்கிருந்து வெளியேறி தனது வீட்டை வந்தடைந்தார்.

அன்று மக்கீன் ஹாஜியார் பயமுறுத்தப்பட்ட முறையிலேயே சாராவும் பாராவும் பலமுறை பயமுறுத்தப் பட்டிருந்தனர். கைத்துப்பாக்கியே அதற்கும் பயன்படுத்தப் பட்டிருந்தது.

ஒரு சில தினங்கள் கழிந்து சுல்தான் பாராவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவந்தப்படுத்தி நிக்காஹ் செய்து கொண்டதாக ஊரெங்கும் கதை அடிபட்டது. நிக்காஹ் நடக்காமலேயே சுல்தான் பாராவை தனது தாரமாக்கிக் கொண்டதாக வேறொரு கதையும் அடிபட்டது. இவை எவ்வாறாயினும் காலாகாலத்தில் பாரா ஒரு குழந்தைக்கு தாயாகி விட்ட கதை ஊரெல்லாம் பரவலாகப் பேசப்பட்டது. அதன் பிறகு சுல்தானுக்கு எதிராக ஊரில் எதிர்ப்புகள் எழுந்தன.

"தலைவர் பதவியில ஈந்து சுல்தான் தொரய நீக்க வேணும்."

"அது மட்டுமல்ல, சுல்தான் தொரய ஊரில ஈந்து வெலக்கி வெச்சவும் வேணும்."

"இல்ல, இல்ல. சுல்தான் தொரய ஊர உட்டு அடிச்சித் தொரத்த வேணும்."

இவை அனைத்தும் கடைத் தெருவிலும், ஆற்றங் கரையிலும், கிணற்றடிகளிலும் சுல்தானுக்கு எதிராக பேசப்பட்டவையே அன்றி, பூனைக்கு மணி கட்ட எந்த எலியும் முன்வராத கதையாகவே அமைந்து விட்டது.

அங்கிருந்த அதிகமானோரின் தொழில் வாய்ப்புக்கள் சுல்தானின் கைவசம் இருந்ததுதான் அதற்குரிய பிரதான காரணமாகும். அது மட்டுமல்ல, அவருக்கிருந்த அரசியல் பின்னணி, பள்ளிவாசலின் ஆட்சி அதிகாரம், ஆட்பலம் என்பவையும் மேலதிகமான காரணங்களாக இருந்தன. எனினும் ஊரார், சுல்தானை ஒதுக்கி வைத்தே காரியம் ஆற்றத் துணிந்து விட்டனர். சுல்தானின் உறவினர்களிடமும் அதே போக்குத் தான் காணப்பட்டது.

காலம் வேகமாகச் சுழன்றது. சாராவும் பாராவும் மாறி மாறி குழந்தைகளை ஈன்றெடுத்தனர். அதைக் கண்ணுற்ற அவர்களது பெற்றோர் சொல்லொண்ணாத் துன்பத்தில் ஆழ்ந்து விட்டனர். அதன் காரணமாக அவர்கள் நோய்வாய்ப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளாகி, நாளடைவில் காலமாகி விட்டார்கள்.

சுல்தான் ஹாஜியாரின் வாழ்வில் நடந்த சம்பவங்களை ஊரார் மறந்து விடாது, சந்தர்ப்பம் ஒன்று வரும் போது அவற்றைக் கதைக்க முற்பட்டனர். அவரின் வளர்ந்து ஆளாகிய பிள்ளைகளுக்கும் அவை கேட்கவே செய்தன. அதனால் அவர்கள் தமது தந்தையுடன் முரண்பட ஆரம்பித்து விட்டனர்.

"வாப்பா, ஹராத்த செஞ்ச நீங்க எங்களையும் ஹராத்துல பொறக்க வெச்சுட்டீங்க. இனி எங்களையும் கொன்று போட்டுட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் செத்துப் போங்கோ."

சாராவும் பாராவும் சகோதரிகளாக இருந்தாலும் சக்களத்திச் சண்டைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

"பாரா, நீ கண்ண, மூக்கக் காட்டி சுல்தானோட வந்தத்துக்கு நான் தான் அவருக்குச் சட்டப்படியான பொண்டாட்டி. எனக்கும் ஏன்ட புள்ளகளுக்கும்தான் அவர்ட சொத்து சொகங்களுட உரிம ஈக்கு."

"சாரா, நீ தெரியாம பேசுராய். இந்த ஊடு வாசல் இப்ப ஏன்ட பேர்லதான் ஈக்கு. அவர் இல்லாத காலத்துக்கு நான் ஒன்ன வெளியே போட்டா நீ ரோட்டுளதான் ஈப்பாய்."

சாரா-பாரா இருவரினதும் தந்தையான மக்கீன் ஹாஜியாரும் அவரின் நினைவுகளில் சதா வந்து போக ஆரம்பித்து விட்டார். சில சமயம் கனவுகளிலும் வந்து அவருக்கு தொந்தரவு கொடுத்தார்.

"டேய் சுல்தான், ஏன்ட நெஞ்சு பத்தி எரியுறது போல ஒரு நாள் ஓண்ட நெஞ்சும் பத்தி எரியும். அந்த நெருப்பு ஒன்னச் சுட்டு பொசுக்கக்குள்ளதான் நீ செஞ்சது பிழ எண்டத்த ஒத்துக் கொள்வாய்."

இவை மட்டுமல்ல, சுல்தான் ஹாஜியாரை மூப்பும் ஆட்கொண்டு விட்டது. பல நோய்களும் அவரைப் பற்றிக் கொண்டன. அதனால் உடல் தளர்ந்த நிலையில் அவர் தனது உள அமைதியைப் பாதுகாத்துக் கொள்ள பலரை நாடி நின்றார். ஒரு நாள் அவரது தாய்மாமனாரான மரிக்கார் ஹாஜியாரை அவரது இல்லத்துக்கு வரவழைத்து ஆலோசனை கேட்டு நின்றதும் அதனால்தான். அவர் அன்றிருந்த இக்கட்டான நிலையில் மரிக்கார் ஹாஜியார் சொன்ன ஆலோசனையை நிராகரிக்க முடியாத நிலைக்கு ஆளாகியிருந்தார். அதனால் தாவூஸ் ஹாஜியாரின் குடும்ப விவகாரத்தைக் கருத்திற் கொள்ளாது, அவரது மகனுக்கு தனது மகளை மணமுடித்துக் கொடுக்க முடிவு செய்து விட்டார். அவர்களது குடும்பத்தின் முதல் கல்யாணம் என்பதால் அது மிகவும் சிறப்பாகவும் ஆரவாரமாகவும் நடந்தேறியது. தானும் தனது தாய்மாமனாரும் மட்டும் தெரிந்து வைத்திருந்த தாவூஸ் ஹாஜியார் வீட்டுக் குடும்பப் பிரச்சினை அதுவரைக்கும் வெளியே ஒருவருக்கும் தெரியாதிருந்தது அவருக்குத் திருப்தியாக இருந்தது.

திருமணம் நடந்து ஒரு சில நாட்கள் கழிந்ததும் சுல்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாஜியார் பல வெகுமதிப் பொருட்களுடனும் பணக் கட்டொன்றுடனும் தனது தாய் மாமனாரைச் சந்தித்து அவருக்கு நன்றி கூறி விட்டுவரச் சென்றார்.

"மாமா, குடும்பமெல்லாம் கையுட்ட நெலயில நீங்க என்னக் கையுடாம, என்னப் புரிஞ்சி கொண்டு, எனக்கு எத்தனயோ ஒதவிகளச் செஞ்சிருக்குரீங்க. அதனால இதுல ஒரு தொகப் பணம் ஈக்கு. அத வேணாமெண்டு செல்லாம நீங்க எடுத்துக் கொள்ள வேணும்."

"நான் ஒனக்குச் செஞ்ச ஒதவிகளுக்கு இதெல்லாத்தையும் எதிர்பாக்க இல்ல சுல்தான்."

மரிக்கார் ஹாஜியார் அவ்வாறு சொன்னாலும் தனது கையில் திணிக்கப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்வதற்கு அவர் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

"சுல்தான், ஒண்ட மகளுக்கு ஏத்த மாப்புள்ள, ஒண்ட அந்தஸ்த்துக்கு ஏத்த மருமகன், ஒண்ட யாவாரம் தொழிலுக்கு கைகுடுக்கக் கூடிய சம்பந்தி எண்டு எத்தனயோ விஷயங்கள் இந்தக் கலியாணத்தால நெறப்பமாகிட்டுது. அதுமட்டுமல்ல, ஒன்ன ஒதுக்கி வச்சீந்த கூட்டம் குடும்பமும் ஊர் மக்களும் வந்து ஒன்னோட இணஞ்சிட்டாங்க. அது போல இன்னும் பல நன்மகள் ஒனக்கு நடக்கும். அதுகள வச்சி மத்தப் புள்ளகளுக்கும் நல்ல எடங்களுல சம்பந்தம் கெடச்சும். நீ எழந்த அந்தஸ்து மறுபடி ஒன்ன வந்து சேரும். ஒண்ட மனச உறுத்தின விஷயமெல்லாம் படிப்படியா நீங்கி ஒனக்கு மன ஆருதலும் கெடச்சும்."

"மாமா, எல்லா நன்மயும் ஒங்கட முயற்சியாலயும் துவா பரக்கத்தாலயும்தான் எனக்குக் கெடச்சிரிச்சி. சரி, இப்போ ஜும்மாவுக்கு நேரமாகிட்டுது. மாமா, வாங்கோ என்னோட பள்ளிவாசலுக்குப் பெய்த்து ஜும்மாவத் தொழுதிட்டு வருவோம்."

அதன்படி அவர்கள் அன்று நேரகாலத்துடன் பள்ளிவாசலுக்குச் சென்று, ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றி விட்டு, அங்கிருந்து வீடு நோக்கிச் செல்வதற்காக வேண்டி சுல்தான் ஹாஜியார் அவரது பஜரோவுக்கு அருகே வந்தார்.

"சுல்தன் ஹாஜி, அஸ்ஸலாமு அலைக்கும்."

மிகவும் உரத்த குரலில் தனக்கு ஸலாம் சொன்னது யாரென்று அறிந்து கொள்ள அவர் பின்னே திரும்பிப் பார்த்தார். அங்கே பீக்கர் நானா அவரை நோக்கி வந்துகொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமாகப் பேசுவதனாலேயே அவருக்கு அந்தப் பெயர் சூட்டப் பட்டிருந்தது. சுல்தான் ஹாஜியாரின் பால்ய காலத்து நண்பரான அவர் பிறகொரு காலம் அவருடன் மர வியாபார விஷயங்களிலும் ஈடுபட்டிருந்தார்.

அவர் வியாபார விஷயங்களுக்காக அவ்வப்போது கொழும்பில் தங்கி வாழ்ந்தவர். பிறரின் அந்தரங்கங்களைப் பலர் முன்னிலையில் பேசி அதன் மூலம் ஏதோ இன்பமொன்றைக் கண்டவர்.

"மாமா, பீக்கர் வாரான். அவசரமா வாகனத்துல ஏறுங்கோ."

மரிக்கார் ஹாஜியார் வாகனத்தில் ஏற ஏற்பட்ட தாமதத்தில் பீக்கர் நானா, சுல்தான் ஹாஜியாருக்கு அருகே வந்து விட்டார்.

"சுல்தான் ஹாஜி, ஸலாம் சென்னேன். கேக்க இல்ல போல."

"வஅலைக்குமுஸ்ஸலாம் பீக்கர் நானா."

"சுல்தான் ஹாஜி, நான் ஒங்கட சம்பந்தி தாவூஸ் ஹாஜியார்ட பிஸ்னஸ் பாட்னர். அவர் ஏன்ட நல்ல கூட்டாளியும்தான். அவருக்கு முந்தியே நீங்களும் ஏன்ட கூட்டாளிதான். அதுல ஒரு கொற இல்ல. ஆனா நீங்க ஒங்கட மகள்ட கலியாணத்துக்கு என்ன அழச்ச இல்ல. தாவூஸ் ஹாஜியார் அழச்சாலும் நீங்க அழச்சாத காரணத்தால நான் அந்தக் கலியாணச் சாப்பட்டுக்கு வர இல்ல."

பீக்கர் நானாவின் குரல் அங்கே ஓங்கி ஒலித்ததனால பலரும் கூடிவிட்டனர்.

"சரி பீக்கர் நானா, எனக்குச் செல அவசர வேலகள் ஈக்கு. நான் ஒங்கள பெறகு சந்திச்சிறேனே."

"இல்ல, இல்ல, கொஞ்சம் இரீங்கோ. தாவூஸ் ஹாஜியாரப் பத்தி இந்த ஊர் மனிஷரும் அறிஞ்சி தெரிஞ்சி வச்சீக்க வேணும். அவர் இன்டெய்க்கு கொழும்புல கொடிகட்டிப் பறக்கிறவரு. மல்டி மில்லியனர். தங்கமான மனிஷன். ஏழ எளிய மனிஷருக்கு அள்ளி அள்ளிக் குடுப்பவரு. வலது கை குடுக்கிறத்த எடது கை அறியாதவரு. ஓங்கட மருமகனுக்கு ஆரம்பத்துல நானும் எத்தனயோ கலியாணங்கள் பேசினேன்தான். தாவூஸ் ஹாஜியார்ட குடும்பப் பிரச்சினயால அதொண்டும் கைகூட இல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒங்களுக்குப் போல அவருக்கும் ரெண்டு பொம்புள. அதனால ஒங்க ரெண்டு குடும்பத்துக்கும் அந்தச் சம்பந்தம் பொருந்திப் பெய்த்திட்டுது. நீங்க முடிச்சது தாத்தாவயும் தங்கச்சியையும். அது ஹறாம் எண்டு ஊரில கதச்சாங்க. ஆனா நீங்க உட்டுக் குடுக்க இல்ல."

"சரி பீக்கர் நானா, அதெல்லாம் ஊரில எல்லருக்கும் தெரிஞ்ச விஷயங்கள் தானே. எனக்கு அவசரமாகப் பயணம் ஒண்டு போக ஈக்கு. நாங்க பிறகு பேசுவோமே."

"இல்ல, இல்ல, நான் செல்லப் போற விஷயம் ஒங்களுக்குத் தெரியுமோ தெரியா? அதனால அதயும் கேட்டிட்டே போங்கோ. தாவூஸ் ஹாஜியார்ட மூத்த பொம்புள சோனகத்தி.பெரிய எடத்துப் பொம்புள. ரெண்டாவது பொம்புள சிங்களத்தி. அவர்ட பெக்டரில வேலக்கி வந்தவ. அழகுக்காக அவர் அவவக் கலியாணம் கட்டிக் கொண்டாரு. ஹாஜியார்ட இனசனங்களுட கட்டாயத்துக்கு அவவ இஸ்லாத்துக்குள்ள எடுக்க அவர் எவளவோ முயற்சி செஞ்சாரு. ஆனா அவ அதுக்கு ஒத்துக் கொள்ள இல்ல. இப்பவும் அவ சிங்கள மொறப்படிதான் வாழுறா. ஆனா தாவூஸ் ஹாஜியார் இப்பகூட அவவோட நல்ல ஒகப்பத்தான் ஈக்கிறாரு."

"நான் இப்போ ஒங்களிட்ட சென்னேன்தானே, எனக்கு அவசர வேலயொண்டு ஈக்குதெண்டு."

"சரி, சரி, இந்த விஷயம் ஒங்களுக்குத் தெரியுமோ தெரியா? ஒங்கட மருமகன் அஸ்மி தொர அந்தச் சிங்களப் பொம்புளக்கிக் பொறந்தவரு, ஆரம்பத்திலேயே அந்தப் பொம்புள ஏண்ட மகன், ஏன்ட மொறப்படி வாழ்ந்திட்டுப் போகட்டும் எண்டு புடிவாதமா ஈந்திட்டா. அதனால அஸ்மி தொரெக்கி தாவூஸ் ஹாஜியாரால கத்னா செஞ்சிவச்சவும் ஏலாமப் பெய்த்திட்டுது. நடந்த விஷயம் எல்லாம் நடந்திட்டுது. எல்லாம் அல்லாட நாட்டம் தான். சரி இப்ப நீங்க ஒங்கட பயணத்தப் பெய்த்திட்டு வாங்கோ. ஒங்களுக்கு அல்லாட காவல்."

இவற்றைக் கேட்க சுல்தான் ஹாஜியாரின் உடல் நடுங்கியது. வியர்வை கொட்டியது. நா வரண்டு விட்டது. பேசுவதற்குச் சொற்கள் வரவில்லை. பக்கத்தில் இருந்த தாய் மாமனாவது தன் பக்கம் பேச மாட்டாரா என நினைக்க, அவரும் அங்கிருந்து தலை மறைவாகி இருந்தார். அங்கிருக்கும் அனைவரும் தன்னை ஏளனமாக பார்த்துக் கொண்டிருப்பதைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண அவர் செய்வதறியாது திகைத்து விட்டார். உடனே அவர் பஜரோவின் கதவைத் திறந்து, தனது ஆசனத்தில் அமர்ந்து, வேகமாக அதை மூடிவிட்டார். அதன் பிறகு அவர் சாரதிக்கு சைகை மூலம் கொடுத்த உத்தரவை அடுத்து அவன் வாகனத்தை ஓட்ட ஆரம்பித்தான். அப்போது அவரது மாமனாரான மக்கீன் ஹாஜியார் ஒரு நாள் சொன்னவை மீண்டும் அவரது நினைவலைகளில் மிதக்க ஆரம்பித்து விட்டன.

"டேய் சுல்தான், ஏன்ட நெஞ்சு பத்தி எரியுறது போல ஒரு நாள் ஓண்ட நெஞ்சும் பத்தி எரியும். அந்த நெருப்பு ஒன்னச் சுட்டுப் பொசுக்கக்குள்ளதான் நீ செஞ்சது பிழ என்டத்த ஒத்துக் கொள்வாய். அல்லா ஒரு நாள் ஒன்னக் கேக்கத்தான் போறான். நீ நெருப்புல வேகத்தான் போறாய்."

அப்போது, குளிரூட்டப்பட்ட வாகனம் கூட அவருக்கு ஒரு கொதி கலனாக மாறியிருந்தது. அவர் அங்கே வெந்து கொண்டிருந்தார்.

**நன்றி - ஜீவநதி 2016, மாசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. விடுதலை

"அடியே மருமகளே, இங்க வாடி. வந்து ஓண்ட மகள்ட கெட்டித்தனத்த பாருடி."

மைமூன் நாச்சியாவின் ஓங்கிய குரல் அசீனாவை அதட்டுவது போல் இருந்தது.

"ஏ... மாமி, ஏ... இப்பிடிக் கத்துறீங்க? கத்தி ஊரக் கூப்பிடவா போறீங்க? நடந்தீற விசயங்களச் செல்லிப் போட்டுக் கத்துங்களே."

"நான் ஊரக் கூப்பிட இல்ல. ஒன்னத்தான் கூப்பிட்டேன். இங்க பாருடி. நான் செல்லித்தான் ஓண்ட மகள்ட விஷயங்கள நீ அறிஞ்சி கொள்ள வேணுமெண்டா நீ என்ன பொம்புளடி? பக்கீருக்கு பாட்டுப் பாடுறதும் கையேந்துறதும்தாண்டி தொழில். அப்பிடி ஈக்க, நீ அந்தப் பக்கீர் வாத்திய ஊட்டுள்ளுக்குக் கோந்து வச்சி என்னத்துக்கடி புள்ளக்கிப் பாடம் படிப்பிச்சிக் குடுத்தாய்?"

"ஐயோ மாமி, அதுல இப்ப என்ன கொற வந்திட்டுது?"

"என்ன கொறயா? அங்க பாருடி. ஓண்ட மகள் சத்தி எடுக்கிறத்த."

"மாமி என்னத்தயோ செல்லுறீங்க. அந்தப் புள்ள நேத்தயில ஈந்தே தலவலி, தலவலி எண்டு செல்லிக் கொண்டு ஈந்திச்சிது. அதனால அது பித்தச் சத்தியா ஈக்கும்."

"அடியே மறுமகளே, நான் பெரிய வைத்தியருட பேத்தி. எனக்கு நீ பித்தச்சத்தியப் பத்தி பாடம் படிப்பிச்சித் தரப் போறியா? அந்தப் பக்கீர் வாத்தியக் கூட்டிக் கொண்டு வந்து, அவளுக்குப் பாடம் படிப்பிச்சிக் குடுக்கக்குள்ள நான் நெனச்சேன், இது நடக்கும் எண்டு."

"ஏ மாமி, நீங்க ஏண்ட புள்ளக்கி இப்பிடியெல்லாம் கத காரணம் கட்டுறீங்க? லைலா, நீ வா உம்மா. நாங்க ஊட்டுள்ளுக்குப் போவோம். நான் ஒனக்குச் சுக்குக் கோப்பி ஒரு கோப்ப ஊத்தித் தாரேன். பித்தச் சத்திக்கு அது மிச்சம் நல்லம்."

"சரி, சரி போ. நானும் ஒனக்குப் பின்னால வருவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து, என்ன, ஏதெவடம் எண்டு அவளிட்டக் கேட்டு தெரிஞ்சி கொள்ளத்தான் போறேன்."

அதைத் தொடர்ந்து அசீனா தனது மகளுடன் வீட்டுக்குள் செல்ல, மைமூன் நாச்சியா அவர்களைப் பின் தொடர்ந்து சென்றாள்.

"அடியே மருமகளே, நடந்தீர விஷயங்கள நீ அவளிட்ட கேக்குரியா? இல்ல நான் கேக்கவா?"

"மாமி, அவள் ஒங்களுக்கு ஈற பயத்தால ஒண்டும் செல்ல மாட்டாள். அதனால நானே கேட்டுத் தெரிஞ்சி கொள்ளுறேன்."

"மருமகளே, இங்க பாருடி. பூத்தானத்துக்குப் புள்ள வளத்தா இப்பிடித்தாண்டி நடக்கும். சரி, இப்ப நீ பெய்த்து அவளுக்கு நடந்த எல்லா விஷயங்களையும் அடியில ஈந்து, நுனி வர கேட்டறிஞ்சி கொண்டு வந்து எனக்கிட்ட செல்ல வேணும் பார்."

அதன் படி அசீனா தனது மகளை அவளின் அறைக்குள் அழைத்துச் செல்ல, மைமூன் நாச்சியா அங்கிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டாள். நரை, திரை, மூப்பு அனைத்தும் அவளை நெருங்கியிருந்தாலும் அவளின் உடலுறுதி பார்ப்போரையும் சொல்லுறுதி கேட்போரையும் வியக்க வைத்தன.

"மம்மனிபா, நீ இப்ப இங்க வாடா."

மைமூன் நாச்சியா வீட்டில் இருந்த வேலையாள் ஓடோடி வந்து, அவளுக்கு முன்னே கூனிக்குறுகிய வண்ணம் நின்று கொண்டான். அந்த வீட்டுக்குப் பரம்பரை பரம்பரையாக உழைத்த அவனின் முன்னோர்களது கொத்தடிமைத்தனம், அவனையும் அவ்வாறு நிற்க வைத்தது என்றே சொல்ல வேண்டும்.

"மம்மனிபா, நீ இப்ப பெய்த்து, ஏண்ட சுருட்டுப் பொட்டிய எடுத்துக் கொண்டு ஓடி வாடா இங்க."

மம்மனிபாவின் உடல் தளர்ந்து இருந்தாலும் அதை மைமூன் நாச்சியாவுக்கு முன்னே காட்டிக் கொள்ள அவன் எப்போதும் விரும்பவில்லை. அதனால் தனது கைகளை வீசி, கால்களை நீட்டி வைத்து, ஓட்டமும் நடையுமாக அவன் அங்கிருந்த பெட்டகத்துக்கு அருகே வந்து, அதன் லாட்சுகளில் ஒன்றுக்குள் இருந்த சுருட்டுப் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

"நாச்சியாவுக்கு நெருப்பெட்டியும் தேவப்படுமே."

அதனால் சுருட்டுப் பெட்டியுடன் அதற்குப் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப் பட்டிருந்த தீப் பெட்டியையும் அவன் கைகளில் எடுத்துக் கொண்டான். அதன் பிறகு ஓட்டமும் நடையுமாக வந்து, மைமூன் நாச்சியாவிடம் அவற்றை ஒப்படைத்து விட்டு, மீண்டும் அவளெதிரே கூனிக் குறுகிய வண்ணம் நின்று கொண்டான்.

"மம்மனிபா இப்ப நீ பெய்த்து வெளீல ஈற வேல வெட்டிகள கவனி."

அவன் அங்கிருந்து அகன்று செல்ல, மைமூன் நாச்சியா சுருட்டுப் பெட்டியில் இருந்து நல்லதொரு சுருட்டைத் தெரிந்து, அதைப் பற்ற வைத்து வாயில் வைத்துக் கொண்டாள்.

அவள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்துக்குப் பக்கத்து அறையில் தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைத் தனக்குள் நன்கு உள் வாங்கிக் கொள்வதற்கு ஏதுவாக, அவள் தனது தலைமுடியை நன்கு கோதி, காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள். அதனால் அவளது காது மடல்களை அழகு செய்த பதினொரு சோடி அல்குத்துகளும் பளிச் என மின்னிக் கொண்டிருந்தன.

அப்போது அவளின் வாயில் சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. நடந்திருக்கும் அசம்பாவிதங்களை எதிர் கொண்டு, தனது அந்தஸ்துக்கு ஏற்ப எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, அவள் அப்போது தீர யோசித்தாள். அது மட்டுமல்ல, எதிரியை எவ்வாறு மடக்கலாம் என்பது பற்றியும் அவள் தனது மனதுக்குள் வியூகம் ஒன்றை அமைத்துக் கொண்டாள். அச்சமயம் அசீனாவின் அதட்டல்களையும், லைலாவின் விம்மல்களையும் அடிக்கடி கேட்கக் கூடியதாகவே இருந்தன. அப்போது அடித்துப் பிடித்துக் கொண்டு வெளியே பாய்ந்த அசீனா, மைமூன் நாச்சியாவின் காலடியில் வந்து குந்த வைத்துக் கொண்டாள்.

"ஐயோ மாமி, ஒங்கட ஊகம் சரி. அந்தப் பாழாப் போன பக்கீரு வாத்தி, எங்கட மொகத்துல கரியப் பூசிட்டான். நாங்க இப்ப என்ன செய்ய மாமி? என்ன செய்ய?"

"அடியே மறுமகளே, நடந்தது நடந்திட்டுது. நீ இப்ப பதறாம இரி. அதெல்லாத்துக்கும் ஏத்த மாதிரி நான் காரியம் வகுத்திட்டேன்."

"மாமி, அப்ப கருவக் கலச்ச வேணுமெண்டா செல்லுறீங்க?"

"அடியே மறுமகளே, கருவக் கலச்சா அந்தப் பக்கீரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்திக்குப் பாடமொண்டு படிச்சிக் குடுக்க ஏழாமப் போகும். அதனால விஷயம் உண்மையா எண்டு செல்லிப் பாக்க, மொதல்ல இந்தச் சிறுக்கீட நாடியப் புடிச்சிப் பாக்க வேணும்."

மைமூன் நாச்சியா மிகவும் பதற்றத்துடன் தனது பேத்தியின் அறைக்குள் நுழைந்தாள், அவளின் கண்களில் கோபக் கனல் பறந்தது.

"அடியே லைலா ஓண்ட எடது கைய இங்கால நீட்டுடி."

தலை குனிந்த வண்ணம் அழுகையும் விம்மலுமாக இருந்த லைலா அச்சம் மிகுந்தவளாய் தனது இடது கையை நீட்டினாள்.

வைத்தியப் பரம்பரையொன்றின் வாரிசாக இருந்த மைமூன் நாச்சியா, லைலாவின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு, அவளின் கையை ஓங்கி உதறி விட்டாள்.

"மறுமகளே, நடக்க வேண்டிய விஷயம் நடந்தீக்குது, இனிக் கவலப்பட்டு வேல இல்ல. இப்ப நீ மம்மனிபாவக் கடக்கி அனுப்பி, புவாது மகனுக்கு ஒடனே இங்க வரச் செல்லி செய்தி ஒண்ட அனுப்பி வை."

அசீனா மம்மனிபாவைத் தேடிக் கொண்டு வெளியே செல்ல, மைமூன் நாச்சியா கதிரையில் நன்கு சாய்ந்த வண்ணம், அணைந்த சுருட்டை மீண்டும் பற்ற வைத்து, புகைக்க ஆரம்பித்தாள். பிரச்சினைகளை சமாளிப்பதை விட, அவற்றை ஒரு சவாலாக எதிர்கொண்டு, தீர்வு காண்பதிலேயே அவள் சதா நாட்டம் வைத்திருந்தாள். சுருட்டுப் புகை அதற்கொரு உந்துதலை அவளுக்குக் கொடுத்த வண்ணம் இருந்தது. அவள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். அவளின் முன் அனுபவங்களும் அதற்கு உறுதுணையாயின. அப்போது பதறியடித்துக் கொண்டு புவாது ஹாஜியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

"யாவாரம் சூடு புடிச்சிக் கொண்டு வார நேரத்துல, மெனக் கெட்டு என்ன இங்க வரவழச்ச, என்னெத்தென் உம்மா, என்னெத்தென் இங்க நடந்தீக்குற?"

"என்னெத்தென் இங்க நடந்தீக்குறதா? நடக்கக் கூடாத விஷயமொண்டு இங்க நடந்தீக்குது. அந்தப் பக்கீரு வாத்தி இங்க வந்து போனத்தால ஓண்ட மகளுக்கு புள்ள உண்டாயீக்கு."

அதைக் கேட்டதும் புவாது ஹாஜியாருக்குள் ஒரு பொல்லாத ஆவேசம் வந்து விட்டது.

"உம்மா எங்க அந்தச் சிறுக்கி? அவள்ட கையக் கால ஒடச்சி மூலயொண்டுல போட்டுட்டு, அந்தப் பக்கீரு வாத்திய கண்ட துண்டமா வெட்டிப் பொதச்சாத்தான் ஏண்ட இந்த கோவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும்."

அவர் தனது மகள் இருந்த அறையை நோக்கி வேகமாக முன்னேறிச் செல்ல ஓரிரண்டு அடி எடுத்து வைத்து விட்டார். அப்போது அறைக்குள் இருந்த அசீனாவின் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது.

"டேய் புவாது நில்லுடா அங்க."

மைமூன் நாச்சியா போட்ட சத்தத்தில் புவாது ஹாஜியார் நின்ற இடத்திலேயே நின்று விட்டார்.

"டேய் மகனே, ஓண்ட பொல்லாத பொண்டாட்டிதான் இதெல்லாத்துக்கும் காரணம். அவள் பஞ்சு ஈற எடத்துல நெருப்பக் கோந்து வச்சிட்டாள். ஒரு பக்கத்துக்கு அவளக் கொற செல்லியும் வேல இல்ல. இதெல்லாம் இந்தப் பக்கீருகளால வந்த வென. நோன்பு காலத்துல ஷகருக்கு மனிஷர எழுப்புறத்துக்கும், பித்தரா அரிசி வாங்குறத்துக்கும், ராத்திபுக் களரிகளுல தஹறா அடிச்சிறத்துக்கும், தவுஸ் குத்துரத்துக்கும் இந்த ஊருல வந்து குடியமந்தவனுகள் இப்ப எங்கட தலயில கைகழுவ வந்துட்டானுகள். அதெல்லாம் இந்த மைமூன் நாச்சியாட்ட எங்க பலிக்க?"

"உம்மா அதெல்லாம் சரி. நாங்க இப்ப என்ன செய்ய வேணும் எண்டத்த மொதல்ல செல்லுங்கோ."

"டேய் மகனே, ஓண்ட மகள் செஞ்சிக் கொண்டீக்கிற வேலகளுக்கு அவள வெட்டிப் பொதச்ச வேணும். இல்ல, அவள அந்தப் பக்கீரு வாத்திக்கே கலியாணம் கட்டி குடுக்க வேணும்."

"உம்மா, அவள் ஏண்ட புள்ள. அவள வெட்டிப் பொதச்ச ஏண்ட மனசு எடம் குடுக்க இல்ல."

"நீ சரி, எந்தத் தகப்பனும் தண்ட புள்ளயொண்ட வெட்டிப் பொதச்சிப் போட விரும்ப மாட்டான்தான். அதனால நீ விரும்பினாலும் விரும்பாட்டியும் அவள அந்தப் பக்கீருக்கே கலியாணம் கட்டிக் குடுக்க நான் முடிவெடுத்திட்டேன்."

"உம்மா, நாங்க அப்பிடிச் செஞ்சா ஊர் சிரிக்குமே உம்மா. எங்கட மாணம், மரியாத கப்பலேருமே உம்மா. நாங்க ஊருக்குத் தல குனிய வேண்டி வருமே உம்மா. இதெல்லாத்தையும் நெனச்சக்குள்ள ஏண்ட கைகாலெல்லாம் பதறுதே உம்மா."

"டேய், நீ ஹம்தூன் மத்திசத்துட மகன். ஓண்ட வாப்பாட தங்கச்சி, எவனோ ஒத்தனுக்கு ஏமாந்து, அவனோட பாஞ்சி போன நேரம், ஓண்ட வாப்பா அவனுக்கும் அவளுக்கும் படிப்பிச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் ஒனக்குத் தெரிய வாய்ப்பில்ல. நீ அப்ப சின்னப் புள்ள. ஆனா, மம்மனிபா அதெல்லாத்தையும் நல்லாத் தெரிஞ்சி வச்சீக்குறான்."

அப்போது கதவுத்திரைக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டிருந்த மம்மனிபா பாய்ந்து வந்து, அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டான்.

"நாச்சியா, அந்த விஷயங்கள மகனிட்ட செல்லவா? வானாமா?"

"மம்மனிபா, நீ அதெல்லாத்தையும் இவனிட்ட இப்ப செல்லத்தான் வேணும். பொம்புளப் புள்ளயப் பெத்த மனிஷரு கம்புக்கு கத்தி போல ஈக்கோணுமெண்டத்த அப்பவாவது இவன் அறிஞ்சி கொள்ளுவான்."

"மகன், ஒங்கட சவுதா மாமி சின்ன வயசில நல்ல அழகான, பசுந்தான புள்ள. அவ எங்கட தோட்டந்தொரவுல கூலி வேல செஞ்ச உபைதுட ஆச வாத்தகளுக்கு மயங்கி, ஒரு நாள் அவனோட ஓடிப் பெய்த்திட்டா, அப்ப, நானும் ஒங்கட வாப்பாவும்தான் பின்னால பெய்த்து, அவங்க ரெண்டு பேரையும் புடிச்சி, அவன மரத்துல கட்டி வச்சிட்டு, சவுதா மாமிய ஊட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்த. அதுக்குப் பெறகு வாப்பாவும் நானும் திரும்பப் பெய்த்து அவன்ட கையக்கால ஒடச்சி..."

"மம்மனிபா அது வரக்கிம் சென்னாப் போதும்."

"புவாது கேட்டாயா வாப்பாட கெட்டித்தனத்த. அது மட்டுமல்ல; வாப்பா, சவுதா மாமிக்கு கலியாணம் காப்பொண்டு செஞ்சி குடுக்காம அவவ வாழாவெட்டியாக்கி ஊட்டுலேயே வச்சிக் கொண்டதும் குடும்பத்துல மத்தப் பொம்புளகளுக்கு அது ஒரு பாடமா ஈக்கட்டும் எண்டுதான்."

"நாச்சியா, அது பிழ. அவவ வாழாவெட்டியாக்கினது மத்திஷம் காக்கா அல்ல. அவக்கிருந்த சொத்து சொக மெல்லாத்தையும் அபகரிச்சிக் கொள்ள, நீங்கதான் அந்த வேலயச் செஞ்சீங்க. இத நான் செல்ல இல்ல. ஒங்கட இன சனமும் ஊர் மனிஷரும் தான் செல்லுறாங்க."

"மம்மனிபா, நீ இப்ப அளவுக்கதிகமா பேச வாராய். நீ இப்ப இங்க ஈந்து போறியா? இல்ல, ஒன்னக் கொண்டத்து இருட்டறையில போட்டுக் கதவ மூடவா?"

"உண்மயப் பேசவும் நெலத்துல உக்காரவும் பயப்புடாதே எண்டு, மத்திஷம் காக்கா அடிக்கடி செல்லுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஈக்கட்டும் நாச்சியா, நீங்க செல்லுறதாக ஈந்தா நான் வாய மூடிக் கொள்ளுறேன். எனக்கென்னத்துக்கு வீண் தொரட்டு?"

மம்மனிபா அங்கிருந்து ஓடிச் சென்று கதவுத் திரைக்குப் பின்னால் மீண்டும் மறைந்து கொண்டான். நாச்சியாவின் இருட்டறைத் தண்டனைக்கு ஆளானால் மூன்று நாட்களுக்கு பச்சைத் தண்ணீரும் கிடைக்காதென்பது அவனுக்கு நன்கு தெரியும்.

"உம்மா, நீங்க ஏண்ட மகளயும் வாழாவெட்டியாக்கிடு வீங்களோ எண்டு எனக்குப் பயமாக ஈக்கு."

"டேய் புவாது, இது போல எத்தனையோ விஷயங்கள நான் கண்டும் கேட்டும் ஈக்குறேன். நானும் ஒரு பொம்புல எண்டத்தால பொம்புலகளப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். பொம்புள எப்பவுமே ஒரு புள்ளி மானப் போல. ஆனா ஆம்புள? ஆம்புள எப்பவுமே பொல்லாத புலியப் போல. புள்ளிமான் புலியிட்ட வலியப் பெய்த்து அதுக்கு எறயாகுற இல்ல. புலிதான் பாஞ்சி வந்து, புள்ளி மானப் புடிச்சி, கடிச்சி, எறயாக்கிக் கொள்ளுற. ஆம்புள, பொம்புளகளுக்கு எடயில நடக்குற பொல்லாத ஒரவுகளும் அதுபோலத்தான். அதனால இங்க பொம்புளக்கி அல்ல ஆம்புளக்கித்தான் தண்டன குடுக்க வேணும். நீ பயப்புடாதே. நான் ஒண்ட மகள வாழ வெச்சுவேன். ஆனா அந்தப் பக்கீரு வாத்திக்கு ஒரு பாடம் படிப்பிச்சிக் குடுக்காம விட மாட்டேன். அதெல்லாம் என்ன, ஏது எண்டு நீ எனக்கிட்ட கேக்கப் படாது. இப்ப நீ ஒரு வேல செய்ய வேணும். அந்தப் பக்கீரு வாத்தீட வாப்பா ஈக்குறாரே மம்மசன் பக்கீரு. அவர் இன்டெய்க்கு கடெக்கி வந்தா அவரிட்டச் செல்லு, என்ன வந்து சந்திக்கச் செல்லி."

அதன்படி அன்று மாலை மம்மசன் பக்கீர் மைமூன் நாச்சியாவைச் சந்திக்க அவளது வீடு தேடி வந்தார். அப்போது அவள் என்றுமில்லாதவாறு அவருக்குச் சலாம் சொல்லி வரவேற்றாள். பதிலுக்குச் சலாம் சொல்லுவதற்குத் தயங்கிய மம்மசன் பக்கீர் அங்கே தனக்கேற்ற ஆசனமொன்றைத் தேடி சுற்றும் முற்றும் பார்க்க, மைமூன் நாச்சியா முந்திக் கொண்டாள்.

"பாவா இங்க வாங்கோ. வந்து இந்த எடத்துல உக்காருங்கோ."

அவள் தனக்கு முன்னால் இருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்ட, அவரின் கண்களில் பிரமிப்பொன்றே ஏற்பட்டது.

"பாவா, நீங்க மகனப் படிப்பிச்சி, ஆளாக்கி, வாத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலும் எடுத்துக் குடுத்துட்டீங்க. அதனால ஒங்கட அந்தஸ்தும் ஒசந்திட்டுது. இப்ப இனி எனக்கு முன்னால ஒங்களுக்கு உக்காரத் தகுதியும் ஈக்கு."

அதன்படி மிகவும் கூனிக்குறுகிய வண்ணம் மம்மசன் பக்கீர், மைமூன் நாச்சியா காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

"சரி பாவா, நாங்க இப்ப விஷயத்துக்கு வருவோம். ஒங்கட மகன் இங்க எங்கட பேத்திக்கு படிப்பிச்ச வந்தான். அவன் அவளுக்குப் படிப்ப மட்டும் குடுக்க இல்ல. புள்ளயொண்டையும் குடுத்திட்டான்."

"யா அல்லாஹ்! அவன் இப்பிடி ஒரு காரியத்த ஒங்களுக்குச் செஞ்சிட்டானா? இப்ப நீங்க செல்லுங்கோ. நான் பெய்த்து, அவன்ட கையக் காலக் கட்டிக் கொண்டு வந்து, ஒங்கட காலடியில குந்த வச்சுறேன். அப்ப நீங்க அவனுக்கு ஏத்த தண்டனையக் குடுங்கோ. நான் எதுவும் பேச மாட்டேன். ஒங்களுக்கு ஊழியம் செய்யாமலே நீங்க போட்ட பிச்சையால பொழச்சித் திண்ட ஜனங்கள் நாங்க. ஒங்கட எந்த உத்தரவுக்கும் நான் தல சாய்ப்பேன்."

"பாவா, பதறாம இறீங்கோ. நான் ஒங்கட மகனுக்கு ஏண்ட பேத்திய கல்யாணம் கட்டி வச்ச தீர்மானிச்சிட்டேன். அதுதான் நான் அவனுக்குக் குடுக்கிற தண்டன. அதனால நீங்க இப்ப எதுவும் பேச வானம். நாளெக்கி அஸருத் தொழுகைக்குப் பெறகு நீங்களும், ஒங்கட மகனும், இனசனங்களும் இங்க வரவேணும். இது சம்பந்தமா கதச்சி, ஒரு முடிவுக்கு வந்து நிக்காஹையும் முடிச்சிப் போட வேணும். இப்ப எல்லாம் சரி. சவ்தா கோப்பி ஒரு கோப்ப ஊத்தித் தருவாள். அதக் குடிச்சிட்டு இங்க ஈந்து பெய்த்திடுங்கோ."

அந்த வீட்டுக்குள் மாத்திரமல்ல, அதன் எல்லைகளைத் தாண்டி அந்த ஊருக்குள்ளும் வியாபித்திருந்த மைமூன் நாச்சியாவின் அதிகாரத்தின் முன்னே மௌனம் காப்பதைத்தவிர மம்மசன் பக்கீருக்கு மாற்று வழி எதுவும் தென்படவில்லை. அதனால், சவ்தா கொண்டு வந்து கொடுத்த கோப்பியை குடித்து விட்டு, பதை பதைக்கும் உள்ளத்துடன் அவர் தனது வீடு நோக்கிச் சென்றார். போகும் வழியில் அவருக்குக் கைகால் விளங்கவில்லை. ஏதேதோ பயங்கரக் கற்பனைகள் வந்து போய்க் கொண்டிருந்தன.

"மைமூன் நாச்சியா பொல்லாத கெழவி. பச்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீக்குள்ள நெருப்புக் கொண்டோர பொம்புள. எங்கள நாளெக்கி அஸர் தொழுகைக்குப் பெறகு வந்து அவளச் சந்திக்கச் சென்னது என்னத்தயோ வஞ்சகமொண்ட மனசுல வச்சிக் கொண்டுதான். பாவம், அந்த சவ்தா. அவள வாழாவெட்டியாக்கினதும் மைமூன் நாச்சியாதான். அது மட்டுமல்ல சவ்தாவக் கூட்டிக் கொண்டு பாஞ்சி போன உபைதுட கையக்கால ஒடச்சி, குத்துயிராக்கி, செங்கள்ளுச் சூழயில போட்டுச் சாம்பலாக்கி, அந்த சாம்பல கொண்டத்து ஹம்தூன் மத்திஷம் ஆத்துல கறச்சதும் அவள்ட பேச்சக் கேட்டுத் தான் எண்டு, இண்டும் ஊரில கதச்சிறாங்க. அந்த அநியாயம் எல்லாத்துக்கும் ஒடந்தயா ஈந்த மம்மனிபாவோட சேந்து கொண்டு அவள் நாளெக்கி எங்களுக்கு என்ன கொடும செய்யக் காத்திருக்கிறாளோ தெரியா? இனி, தப்பினோம் பொழச்சோம் எண்டு எங்கசரி போறதுதான் எனக்குத் தெரிபடுற ஒரே வழி. யா அல்லாஹ்! நீ இப்பிடியெல்லாம் எங்கள சோதிச்சிறாயே? நாங்க என்னதான் பாவம் செஞ்சிட்டோம்?"

ஓட்டமும் நடையுமாக தனது வீடு நோக்கி வந்து சேர்ந்த அவர், உரத்த குரலில் தனது மனைவியை அழைத்தார்.

"அடியே பீபி ஜான், இங்க வாடி. வந்து ஒண்ட மகன் செஞ்சீற வேலயக் கேளுடி. இந்த ஊருள நாங்க ஈரதா, இல்ல ஊர உட்டுப் போறதா எண்டத்த நீதாண்டி எனக்குச் செல்ல வேணும்."

"வந்தும் வராததுமா சும்மா கத்திக் கொண்டே போறீங்க. நடந்தீற விஷயத்த மொதல்ல செல்லிட்டு இரீங்களே."

"அடியே, ஒண்ட வாத்தி மகன், மைமூன் நாச்சியாட பேத்திக்கு பாடம் செல்லிக் குடுக்கப் பெய்த்து அவள்ட வயித்துக்குப் புள்ளயொண்டயும் குடுத்திட்டு வந்தீக்குறான். இப்ப அந்தக் கெழவி என்னக் கூப்பிட்டுச் செல்லுறாள், அவள்ட பேத்திய எங்கட மகனுக்குக் கலியாணம் கட்டிக் குடுக்க வேணும் எண்டு."

"யா அல்லாஹ்! அவள் பொல்லாத கெழவி. அவள்ட நெழல் படுற எடத்துல ஈந்தாலும் அது மனுஷருக்குத் தீமயாத் தான் முடியும். ஏண்ட மகன நான் நம்புறேன். அவன் அப்பிடி கீழ்த்தரமான வேலயொண்டச் செஞ்சீக்க மாட்டான். அவள் என்னமோ எங்களோட வம்புக்கு வாறாள். அதனால நாங்க ராவோடு ராவா இந்த ஊர உட்டுப் போறதுதான் எங்களுக்கு சொகமாக ஈக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப இனி சாமான் சட்டி எல்லாத்தையும் கட்டி ரெடியாக்கு. அது சரி, இப்ப எங்க ஒண்ட நம்பிக்கையான மகன்?"

"பொஸ்தகம் ஒண்ட வாசிச்சிக் கொண்டு அது அங்கால ஈக்குறானே."

"அப்ப, அவன இங்கால வரச்செல்லு."

பீபி ஜான் அவனை அழைக்கச் செல்வதற்கு முன்பே அவன் அங்கே பிரசன்னமாகி விட்டான்.

"என்னடா மகனே, நீ செஞ்ச காரியம்? நீ எங்கள ஊர் தேசம் உட்டுப் போக வெச்சிட்டாயேடா."

"பாவா, நீங்க உம்மாவிடம் சென்ன விஷயங்கள் எல்லாத்தையும் நான் கேட்டுக் கொண்டுதான் ஈந்தேன். நாங்க பக்கீர் குடும்பத்துல பொறந்தது உண்மதான். பித்ராவும் ஸக்காத்தும் வாங்கத் தகுதி உள்ள எட்டுக் கூட்டத்துல அடங்குறதும் உண்மதான். அதுக்காக நாங்க எந்த வகயிலயும் தாழ்ந்தவங்க அல்ல. இஸ்லாம், முஸ்லிம்கள் எல்லாரும் சகோதரங்கள் எண்டுதான் செல்லுது. அவங்க எல்லாரும் சம அந்தஸ்து உள்ளவங்க எண்டுதான் செல்லுது. அரசனும் ஆண்டியும் ஒரே ஸஃப்பில் ஈந்து தொழ இஸ்லாம் வழியுறுத்துற அதனாலதான். ஆனா வரலாறு பூரா மைமூன்நாச்சியாட மனநிலையில உள்ளவங்க எங்கள தாழ்த்தித்தான் பாத்திருக்குறாங்க. பாவா, அதிலிருந்து நாங்க விடுபட வேணும். அல்லாஹ் மேல சத்தியமா நான் செல்லுறேன். மைமூன் நாச்சியாட பேத்தி லைலாவுக்கு நான் பாடம் செல்லிக் குடுத்தேனே தவிற, எந்தத் தகாத ஒறவும் எனக்கும் அவளுக்கும் எடயில ஈக்கெல்ல. லைலாட வைத்தில வளருற புள்ளேக்கி தகப்பன் நான்தான் எண்டு மைமூன் நாச்சியா செல்லுறதாக ஈந்தா நான் லைலாவக் கலியாணம் கட்டிக் கொள்ள விரும்பம்."

"டேய் மகனே, அநதக் கெழவி ஒரு நல்ல பாம்பு. அவள புத்துக்குள்ள பெய்த்தா நீ பொண் எடுக்கப் போறாய்?"

"பாவா, அந்தப் புத்துக்குள்ள பூந்து அந்த நல்லபாம்புட வெஷப்பல்ல கழற்றி எறியத்தான், நான் அவள்ட பேத்திய கலியாணம் கட்டிக் கொள்ளப் போறேன். அது மூலமா அவளுக்குப் பாடமொன்று படிப்பிச்சத்தான் போறேன். அதுக்குப் பெறகு அந்தக் கெழவீட, அந்தஸ்துக்கு சம அந்தஸ்து எங்களுக்கும் கெடைச்சும். பாவா, அப்போதாவது எங்களுக்கு விடுதலை கிடைக்குமா எண்டு செல்லிப் பாப்போம்."

**நன்றி: ஞானம் 2014, நவம்பர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
12 DEC 2019
LIBRARY

## 07. பெற்றது குற்றம்

பல பேர் நடமாடும் ஒரு பஸ் தரிப்பு நிலையம் உம்முனாவின் வசிப்பிடமாக இருந்தது. அங்கு சீமேந்தினால் கட்டப் பட்டிருந்த ஒரு வாங்கை அவள் உட்காரவும் உறங்கவும் பயன்படுத்திக் கொண்டாள். அவளின் கண்களில் குடி கொண்டிருந்த அன்பும் கருணையும் கலந்த தாய்மை அங்கு வருவோர் போவோரை ஈர்த்துக் கொண்டன. அதனால் அவள் அங்கிருப்பதைப்பற்றி அவளுக்கெதிராக எதிர்ப்புகளோ, புகார்களோ எழவில்லை. அது மட்டுமல்ல, உரிய நேரங்களில் அவளுக்கு ஏதோ ஒரு சாப்பாடோ தேநீரோ கிடைத்துக் கொண்டே இருந்தது. அவள் கேட்காவிடினும் அங்கு வந்து போகும் ஒரு சிலர் சில நாணயங்களை அவளுக்குப் பக்கத்தில் இருக்கும் குவளைக்குள் போட்டு விட்டுச் சென்றனர். அதைப் பிச்சையாக எடுத்துக் கொள்ள முடியாது. அவளின் கருணை மிகுந்த கண்களில் ஜொலிக்கும் தாய்மைக்குக் கிடைத்த ஓர் அன்பளிப்பாகவே நாம் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அவளுக்கு உதவி கிடைக்கும் ஒவ்வொரு முறையும் அவளின் கண்களில் நன்றிப் பெருக்கொன்று தென்பட, வாய் ஏதோ ஒன்றை முணுமுணுத்தது. உதவி செய்தவர்கள் தமது உதவிக்கு அவள் நன்றி சொல்வதாக அதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

பார்வைக்கு உம்முனாவின் வயது எழுபதுக்கும் எண்பதுக்கும் இடைப்பட்டது போல் இருந்தது. மிகவும் தளர்ந்த நிலையில் காணப்பட்ட அவளது முகத்திலும் கைகால்களிலும் முதுமை கோடுகளால் கோலமிட்டிருந்தது. பார்வை குறைந்திருந்தது. காது அரைகுறையாகவே கேட்டது. ஏதோ தனது வசதிற்கேற்ற உடைகளை அவள் அணிந்திருந்தாலும் முக்காடு எந்நேரமும் அவளின் தலையையும் உடலையும் மறைத்துக் கொண்டே இருந்தது. ஒரு பீங்கான், ஒரு கோப்பை, ஒரு போத்தல், ஒரு பாய்... என ஒரு சில அத்தியாவசியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் மாத்திரமே அவள் கைவசம் இருந்தன.

உம்முனாவுக்குத் தனி காப்பது போல் அவளுடன் பூனையொன்றும் வாழ்ந்தது. அவள் தனக்குக் கிடைக்கும் உணவை அதனுடன் பங்கு வைத்துக் கொண்டே உண்டாள். சிலசமயங்களில் அவள் அதனைத் தூக்கித் தனது மடியில் வைத்துக் கொண்டு, அதன் உடலை வருடிய வண்ணம் அதனுடன் உறவு கொண்டாடி மகிழ்ந்தாள். அவளின் உபசரிப்புகளுக்கு நன்றி சொல்வதுபோல் அந்தப் பூனையும் அவளைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து, அவளின் தனிமையைப் போக்கியது. அவளுக்கொரு பாதுகாப்பையும் அளித்தது.

ஒரு சில மாதங்களாக அங்கு குடியிருக்கும் உம்முனாவைப் பற்றிய விபரங்களை அங்கு வந்து போகும் எவரும் அறிந்திருக்கவில்லை. எனினும் அவளின் முகவசீகரமும் அங்கலட்சணங்களும் அவள் வசதி வாய்ப்புக்கள் இருந்த குடும்பமொன்றில் பிறந்து வாழ்ந்தவள் என்பதை பிறருக்கு எடுத்துச் சொல்வது போல் இருந்தது. உண்மையும் அதுதான். எனினும் அவள் அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளவில்லை. தான் பெற்று, வளர்த்து ஆளாக்கி விட்ட மூன்று பிள்ளைகளும் தனக்கு ஏதேதோ துரோகங்களை இழைத்திருந்தாலும் அவர்கள் தற்போது எங்கிருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது பற்றிய கவலையே அந்தத் தள்ளாத வயதிலும் அவளின் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது.

அதனால் அவள் சில நேரங்களில் தனது தளர்ந்த கண்களை ஏற்றி பாதையில் வருவோர் போவோரின் முகங்களை உற்று நோக்கிய வண்ணமாகவே இருந்தாள். தனது மூன்று பிள்ளைகளுள் ஒருவராவது தன்னைப் பற்றித் தேடியலைகிறார்களா? இல்லை, அவர்களுடைய ஏதேதோ தேவைகளுக்காவது அங்கு வந்து நடமாடுகிறார்களா? என்று அறிந்து கொள்ளுவதற்காகவேதான் அந்த முயற்சி அமைந்திருக்க வேண்டும்.

ஒரு நாள் அவளது முயற்சி வெற்றியளிப்பது போல் இருந்தது.

"ஆ.... முனாஸ் மகன் வாரான் போல. நான் இந்த எடத்தில ஈக்கிறத்தக் கண்டா அவன் பதறிப் போவான். அவன் நல்லவன். மருமகளும் நல்லவதான். ஈந்தாலும் மறுபடி அவங்களோட பெய்த்து வாழுறத்த நான் விரும்ப இல்ல. அல்லாட விதிப்படி நடக்கிறது நடந்து போகட்டும். அதனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனாஸ் மகண்ட கண்ணில படாம நான் ஒலிஞ்சி கொள்ரதுதான் புத்திசாலித்தனம்".

தள்ளாடிய வண்ணம் எழுந்து நின்ற உம்முனா, அங்கிருந்த தூண் ஒன்றுக்குப் பின்னால் மறைந்த வண்ணம் அவனை உற்று நோக்கினாள். என்ன ஏமாற்றம்! அங்கு வந்து கொண்டிருந்தது அவளது மகனை ஒத்த உருவத்தை உடையவன் ஒருவனே. அதனால் நீண்ட பெருமூச்சொன்றை விட்ட வண்ணம் அவள் மீண்டும் வந்து சீமேந்து வாங்கில் உட்கார்ந்து கொண்டு தன் உலர்ந்த கண்களில் வலிந்த இரண்டு கண்ணீர் துளிகளையும் தனது முந்தானைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். உம்முனா பெற்று வளர்த்து ஆளாக்கி விட்ட மூன்று பிள்ளைகளுள் முனாஸ்தான் இளைய மகன். அக்ரம் மூத்த மகன். அவர்களுக்கு இடையே பிறந்த மஸீஹா அவளின் ஒரேயொரு மகள்.

உம்முனாவின் கணவர் அப்துல் காதர் ஹாஜியார் மறைந்ததின் பின், அவள் முனாஸ் வீட்டில் வாழ்வதையே விரும்பினாள். முனாஸைப் போல அவனுடைய மனைவியின் உபசரிப்பும் அவர்களின் குழந்தைகளில் அவளுக்கிருந்த பற்றும் அவளது கணவரான அப்துல்காதர் ஹாஜியார் மறைந்து போக, அவரின் கொள்முதல் வியாபாரத்தை முனாஸ் தொடர்ந்து செய்து கொண்டு வந்ததும் அதற்குரிய காரணங்களாக இருந்திருக்க வேண்டும்.

நாட்கள் சுழன்றன. கணவனும் இல்லாத நிலையில் தனது மூன்று பிள்ளைகளும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்துடன் வாழ்வதைக் காண, அவளின் உள்ளம் பூரித்தது. எனினும் அந்தப் பூரிப்பு அதிக நாட்கள் நீடிக்கவில்லை. முனாஸ் செய்து கொண்டு வந்த வியாபாரத்தில் திடீர் பின்னடைவொன்று ஏற்பட்டு விட்டது.

"உம்மா, ஏண்ட யாவாரம் விழுந்திட்டுது. நாளுக்கு நாள் நஷ்டம் வந்து கொண்டே இருக்குது. அதனால அந்த யாவாரத்த தொடர்ந்து செஞ்சி கொண்டு போறாதாயீந்தா பெரிய அளவுல ஒரு தொகப் பணம் தேவப்படுது. கடன் படவும் ஏழா. வட்டி குடுக்கவும் ஏழா. அதனால எனக்கு சும்மா ஒரு ஐடியா வந்திச்சி. உம்மாட அந்த வயல வித்தா என்ன எண்டு?"

"என்ன மகன், நீ இது செல்லுறாய்? ஏண்ட வயல விக்கவா? மகனே, அது எண்டா நடக்காத காரியம். நானும் வாப்பாவும் சம்பாரிச்ச சொத்து சொகம் எல்லாத்தயும் ஒனக்கும் காக்காவுக்கும் தாத்தாவுக்கும் சமமாகத் தந்த போட்டு, மிச்சமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈந்த அந்த வயலையும் காக்கா ஈக்கிற ஊட்டையும் வாப்பா ஏண்ட பேரில வச்சிட்டு மவ்த்தாப் போனது ஏண்ட கடசி காலத்தில நான் புள்ளகளுட பராமரிப்புக் கெடச்சாமக் கஷ்டப்படுவேன் எண்ட காரணத்துக்காகத்தான் ஈக்க வேணும். அதனால நீ செல்லுற விஷயத்துக்கு என்னால உடன்பட ஏழா."

"என்னத்துக்கு உம்மா இப்ப ஒங்களுக்கு வயலொண்டு? அந்த வயலில வெளயுற நெல்ல ஊட்டுள கோந்து போட்டா, ஊடெல்லாம் தூசு படியுறதெண்டு மறுமகள் கொற செல்லுறா. அதுதானே காசு ஈந்தா வாங்குறத்துக்கு வக வகயா நல்ல அரிசிகள் ஈக்கு. அதனால நாங்க அந்த வயல வித்தப் போடுவோம் உம்மா."

உம்முனா எதுவும் பேசாது அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டாள். இருந்தாலும் மகனின் வேண்டுகோள் அவளை பலவாறு யோசிக்க வைத்து விட்டது.

"பாவம், சின்ன மகன் புள்ளகுட்டிக்காரன். அவன் நஷ்டவாலியானா புள்ளகுட்டிகள்தான் ரோட்டுள எறங்கும். நான் இப்ப கெழவி. எனக்கென்னத்துக்கு வயல் வரம்புகள். அதனால வயல வித்து மகனுக்கு ஒதவியொண்டு செய்யிறதுதான் நல்லம்."

அவளின் மனம் இரங்கியது. அடுத்தநாள் உம்முனா வயலை விற்பதுக்கு இணக்கம் தெரிவித்தாள். ஓரிரு வாரங்களில் வயல் விற்பனையாகிவிட்டது. அதன்மூலம் கிடைத்த பணத்தை முனாஸ் வியாபாரத்தில் முதலீடு செய்தான். ஆனால் அவன் எதிர்பார்த்த நண்மைகள் கிடைக்கவில்லை. மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன. அதனால் கணவன் மனைவியிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஆரம்பித்தன. அவற்றைச் சமாளிக்க இடையில் புகுந்த உம்முனாவுக்கு அவர்களின் ஏச்சுப் பேச்சுக்களுக்கு ஆளாக நேர்ந்து விட்டது. அது மட்டுமல்ல, அவள் அங்கு இருப்பதை மகன், மருமகள் இருவரும் விரும்பவில்லை என்பதையும் அவர்களின் பேச்சுவார்த்தைகளும் நடத்தைகளும் உணர்த்தி நின்றன. இவ்விடயங்கள் மஸீஹாவுக்குக் கேள்விப்பட அவள் உடனே பதறியடித்துக்கொண்டு தனது தாயிடம் வந்தாள்.

"உம்மா, பெத்த மகள் நான் ஈக்க, நீங்க என்னத்துக்கு கவலப்பட வேணும்? நீங்க என்னோட வாங்கோ. நான் ஒங்கள பூவப்போல வச்சிக் கவனிச்சிக் கொள்ளுறேன். இப்ப முனாஸ் தம்பி வருவார்தானே. வந்ததும் அவரிட்ட விஷயத்த செல்லிட்டு எங்கட ஊட்டுக்குப் போவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்முனாவின் தளர்ந்த வயது, யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்கும் நிலைக்கு ஆளாக்கி இருந்தது. அதன் விளைவாக அவள் முனாஸிடம் விடை பெற்றுக் கொண்டு, மஸீஹாவோடு அவளது வீட்டுக்குச் சென்று விட்டாள். அன்று அங்கே மருமகன், பேரப்பிள்ளைகள் என்போரிடமிருந்து உம்முனாவுக்கு அமோக வரவேற்பு கிடைத்தது. அதுமட்டுமல்ல, மஸீஹாவின் அன்பாலும் ஆதரவாலும் உம்முனாவின் உள்ளம் குளிர்ந்தது.

நாட்கள் மெதுவாகச் சுழல. மகளின் உபசரிப்பு உம்முனாவை வெகுவாகக் கவர்ந்திருந்தது. ஒரு நாள் இரவு உணவருந்திய பின், உம்முனா மஸீஹாவிடம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

"மகளே, ஒரு குத்தம் கொற இல்லாம நீ என்னப் பாக்கிற கேக்கிறத்துக்கு அல்லா ஒனக்கு பறகத்துச் செய்வான்."

"உம்மா, ஒங்கட துவா பரக்கத்தாலதான், இந்த ஊட்டுல எல்லா விஷயங்களும் நல்ல படியா நடக்குது. மகளுக்கு நல்ல எடமொண்டுல சம்பந்தம் கெடச்சதும் அதனாலதான்."

" அது சரி மஸீஹா, அடுத்த மாசம் கலியாணமும் வருகுது. அதுக்கேத்த செலவு சித்தாயங்களுக்கெல்லாம் என்ன செய்யப் போறாய்? "

உடனே தனது தாயிடம் நெருங்கி வந்த மஸீஹா அவளின் தலையை மெல்ல வருடி விட்டாள். அதன் பிறகு மஸீஹாவின் கை விரல்கள் மெதுவாக கீழ் நோக்கி இறங்கி, உம்முனாவின் காதுகளைத் தொட்டு, அவற்றை அணி செய்து கொண்டிருந்த அல்குத்துகளில் ஓடியது.

"இந்த வயசில என்னத்துக்கும்மா அல்குத்தெல்லாம் போட்டுக் கொண்டு அவதிப் படுரீங்க? அல்குத்துகளுட பாரத்துக்கு காது மடல் ரெண்டும் மடிஞ்சி பெய்த்தீக்கு. இதுகளால நாலஞ்சி சோடியக் கழற்றித் தாங்கோ, பேத்திக்கு நக நட்டுச் செய்ய. அப்ப, காதுகளுக்கு ஈர பாரமும் கொறயும். பேத்திக்கு நகநட்டு செஞ்சி குடுத்தோமே எண்டு மனசும் நெறயும்."

உம்முனா, அதற்கு எதுவும் பேசவில்லை. பதிலுக்கு, மகள் சொல்வதை ஆமோதிப்பது போல் தலையை அசைத்துக் கொண்டாள்.

தாயின் நகைகள் மீது கண்ணுங்கருத்துமாய் இருந்த மஸீஹா, அவற்றை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. திருமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நெருங்கி வர, அவள் மீண்டும் ஒரு முறை நகைகளின் தேவை பற்றி உம்முனாவுக்கு ஞாபகம் ஊட்டினாள்.

அச்சமயம் உம்முனாவின் சிந்தனை சுழன்றது.

"நான் வாழ்ந்த காலம் மிச்சம். இன்னும் வாழப் போறது சொற்ப காலம். அந்தச் சொற்ப காலமும் சந்தோசமாகக் கழிய வேணுமெண்டா மஸீஹாவுட ஒதவி ஒத்தாச எனக்குத் தேவ. அதனால அவள் கேக்கிற ஒதவிய நான் செய்யத்தான் வேணும். அதோட இந்தக் கெழவிக்கு என்ன நகநட்டென்?"

உம்முனா ஒரு முடிவுக்கு வந்தாள். உடனே தனது காதுகளில் இருந்த பதினொரு சோடி தங்கத்தினாலான அல்குத்துக்களையும் ஒவ்வொன்றாகக் கழற்றி பக்கத்தில் இருந்த மேசை மீது வைத்தாள். அதன் பிறகு தனது கழுத்தில் இருந்த மாலையையும் கழற்றி அதையும் அவற்றிற்குப் பக்கத்தில் வைத்தாள்.

"மகள், இதெல்லாத்தையும் சந்தோஷமாத் தாறேன். பேத்திக்குத் தேவையான எல்லா நகநட்டுக்களையும் செஞ்சி குடுத்திடு."

அதன் பிறகு திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன. திருமணத்துக்கு முதல் நாள் மஸீஹா உம்முனாவிடம் வந்தாள்.

"உம்மா, நீங்க ஈக்கிற இந்தக் காமராவத்தான் மாப்புள பொண்ணுக்கு ரெடி பண்ண வேணும். அதனால ஒங்கட கட்டில், சாமான் சட்டிகள் எல்லாத்தயும் ஸ்ட்டோர் ரூம்ல போடுறேன். தவறா ஒண்டும் நெனச்ச வானாம்."

உம்முனாவுக்கு அது பெருங் குறையாகத் தென்படவில்லை.

" இந்தத் தள்ளாத வயசில படுக்க ஒரு எடமும் தின்ன ஏதோ ஒரு சாப்பாடும் கெடச்சிறதே பெரிய விஷயம்."

உம்முனா அவ்வாறு தனது மனதைத் தேற்றிக் கொண்டாலும் திருமணத்தன்று அங்கு வந்த உம்முனாவின் மூத்த மகன் அக்ரமுக்கு, தாயின் நிலை பெருங் குறையாகவே பட்டது.

"என்ன உம்மா, நீங்க இது ஸ்ட்டோர் ரூம் ஒண்டுள்ளுக்கு அடப்பட்டுப் போய்? இவளவு பெரிய ஊட்டுள ஒங்களுக்காக ஒதுக்க ரூம் ஒண்டு இல்லயா? நான் நாளெக்கி இங்க வருவேன். நீங்க ரெடியா ஈக்க வேணும். ஏண்ட ஊட்டுக்குப் போறத்துக்கு. அது வாப்பா கட்டின ஊடு. அதுட உறுதி இன்னும் உம்மாட பேருலதான் ஈக்கு. அதனால நீங்க என்னத்துக்கு இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டுல ஈந்து கொண்டு கஷ்டப்பட வேணும்? அது சரி, உம்மாட காது கழுத்தெல்லாம் பாழாய்ப் பெய்த்து பாக்க அசிங்கமா ஈக்கு."

"மகன், மஸீஹாட மகள்ட கலியாணம் குடும்பத்துல வார தலக்கலியாணமல்யா? அதனால ஏண்ட நக நட்டெல்லாத்தயும் அழிச்சி, புதிய நகநட்டு செஞ்சி கொள்ள பேத்திக்கு குடுத்திட்டேன்."

"அதுவும் அப்பிடியா? முனாஸ் வயல வித்து ஏமாத்திட்டான். மஸீஹா நகநட்ட எடுத்து ஏமாத்திட்டாள். நீங்க புள்ளகள அளவுக்கதிகமா நம்பிட்டீங்க. அது சரி நீங்க ஏண்ட ஊட்டுக்கு எப்ப வருவீங்க."

"மகன், இந்த காமராவுக்குள்ள அடபட்டு ஈக்கிறது கஷ்டமாத்தான் ஈக்கு, ஆனா மஸீஹாட மனச நோகிச்ச ஏழா. கலியாண அமக்களங்கள் முடிஞ்சதும் ஆர அமர அவக்கிட்ட ஒரு வார்த்த செல்லிப் போட்டு, நான் ஒண்ட ஊட்டுக்கு வாரேன். நீங்க எல்லாரும் ஏண்ட புள்ளகள்தான்."

அதன்படி திருமணம் நடந்து முடிந்த சில தினகங்களுக்குப் பிறகு வந்த அக்ரம், உம்முனாவை அவனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான். அப்போது, ஒரு பிள்ளை கைவிடும் போது இன்னொரு பிள்ளை கைகொடுக்க இருப்பது அவளுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

"என்ன விட ஏண்ட முன்னோர்கள் நன்ம செஞ்சி ஈக்குறாங்க போல. அதனால்தான் அல்லா என்னக் கையுட இல்ல."

உம்முனா இறைவனுக்கு அவ்வாறு நன்றி கூறிக் கொண்டாள். அக்ரம் குடியிருந்த வீடு, வீட்டுப் புறச்சூழல், மருமகளின் உபசரிப்பு, ஓடியாடும் குழந்தைகள் என பல்வேறு அம்சங்கள் உம்முனாவுக்கு மன நிறைவை அளித்தாலும் அது அதிக நாட்கள் நீடிக்கவில்லை. ஒரு நாள் இரவு உம்முனா ஓய்வாக இருக்கும் போது அக்ரம் அவளிடம் வந்தான்.

"உம்மா, நான் கண்டீல புதிய ஊடொண்டு வாங்கப் போறேன். துவாச் செஞ்சி கொள்ளுங்கோ."

"மகன் இந்த ஊடுவாசல் போதாதா ஒனக்கு? வாப்பா எவளவு வசதி வாய்ப்போட ஒனக்கு இந்த ஊடு வாசலக் கட்டித் தந்தீக்கிறாரு. இதுல என்ன கொற குத்தத்த நீ கண்டாய்? அது மட்டுமல்ல, இந்தச் சுற்று வட்டாரத்தில பழகுறத்துக்கு எவளவு அருமையான மனிஷர் ஈக்குறாங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா, அதெல்லாம் சரிதான். ஆனா புள்ளகளுட படிப்புக்காகத்தான் நான் கண்டீல ஊடொண்டு வாங்கப் போறேன். இண்டெய்க்கு புள்ளகளுக்குக் குடுக்குறத்துக்கு கல்வியப் போல செல்வம் ஒண்டு வேற இல்ல உம்மா."

"அது சரி. கண்டீல ஊடு வாங்குறத்துக்கு ஒனக்கு எங்கால மகன் அவளவு காசி பணம்?"

"உம்மா, ருமானாட சீதனப் பங்குக்குரிய காசி கெடச்சிட்டுது. கண்டீல நாங்க பாத்து வச்சீக்கிற ஊட்ட வாங்க இன்னும் கொஞ்சம் காசி தேவப்படுது. உம்மாட பேரில ஈக்கிற இந்த ஊட்ட ஈடு வச்சோ, வித்தோ தான் அந்தக் காசத் தேட வேண்டி ஈக்கு. நிங்க விருப்பம் எண்டாத்தான் நான் அதச் செய்வேன்."

"மகன் நான் என்ன இன்னும் மிச்சம் காலம் வாழப் போறவளா? புள்ளகளுட படிப்புக்குத்தான் நாங்க மொதலிடம் குடுக்க வேணும். ஊட்ட ஈடுவச்சி வட்டிக்குப் பணம் வாங்குறது ஹறாமான வேல. அதனால, நாங்க ஊட்ட வித்து தேவயான காசத் தேடி எடுப்போம்."

சந்தர்ப்பத்துக்கு அவ்வாறு அவள் சொன்னாலும் முனாஸும் மஸீஹாவும் நடந்து கொண்டது போல், அக்ரமும் நடந்து கொள்வானோ என ஓர் ஐயம் அவளின் மனதில் குடி கொண்டே இருந்தது. அது அவ்வாறாக இருந்தாலும் வீட்டை விற்பதற்காக வேண்டிய அனுமதியை அவள் கொடுத்து விட்டாள். அதன்படி வீடு விற்கப்பட்டு, கண்டியில் நவீன வசதிகள் கொண்ட வீடொன்று வாங்கப்பட்டது. அந்த வீட்டில் இருந்த ஆடம்பரமும் சொகுசும் உம்முனாவுக்கு ஒரு சௌகரியத்தை விட அசௌகரியத்தையே கொடுத்துக் கொண்டிருந்தது. குளிரூட்டப்பட்ட அறைகள், மினுமினுப்பான தரைகள், நவீன வசதிகள் கொண்ட குளியலறைகள் என்பன அவளுக்கு ஒத்துவரவில்லை. அதே நேரம், வீட்டின் பராமரிப்புக்கு மாமியாரின் நடவடிக்கைகள் தடையாய் இருப்பது, ருமானாவுக்குப் பொறுக்கவில்லை. அதனால் சில நேரங்களில், அது சம்பந்தமாக அவளுக்குத் தனது மாமியாருடன் முரண்பட வேண்டியிருந்தது. அந்த முரண்பாட்டால் மாமி - மருமகளுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட, அதில் மகனுக்கும் தலையிட வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகிவிட்டன. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் உச்சகட்டத்தை அடைந்த சமயம், உம்முனாவும் அவர்களுக்குப் பக்கத்திலேயேதான் இருந்தாள். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது சண்டை சச்சரவுகளும் ஏச்சுப் பேச்சுக்களும் உம்முனாவைத் திணர வைத்து விட்டன.

"அக்ரம், இந்த ஊட்டுக்குள்ள வார சண்ட சச்சர வெல்லாத்துக்கும் இந்தக் கெழவிதான் காரணம். நாங்க ரெண்டு பேரும் இந்த ஊட்டுள சந்தோசமா வாழ வேணுமெண்டா இந்தக் கெழவிய எங்க சரி அனுப்பி வையுங்கோ. இல்ல, எனக்குத் தலாக்குச் செல்லி, என்ன ஏண்ட ஊட்டுக்கு அனுப்பி வெச்சிட்டு, நீங்க இந்தக் கெழவியோட சந்தோசமா வாழுங்கோ."

"அல்லாட அர்ஷும், நடுங்குற தலாக் எண்ட சொல்ல மருமகள் வாய் கூசாமல் செல்லுறாளே. செல்லுவாள், செல்லுவாள். இந்தக் காலத்துப் பொம்புளகளுக்கு அதப்பத்தியெல்லாம் கவல இல்ல."

அவ்வாறு தனக்குள் மெதுவாகச் சொல்லிக் கொண்ட உம்முனா மகனை நோக்கி நின்றாள்.

"மகன், என்னால நிங்க ரெண்டு பேரும் சண்ட சச்சரவுகளுல ஈடுபடுரத்த எனக்குத் தாங்கிக் கொள்ள ஏழாம ஈக்கு. அதனால நான் இந்த ஊட்ட உட்டு தல திரும்பின திசயில எங்க சரி போக முடிவு செஞ்சிட்டேன். நீங்க ரெண்டு பேரும் இந்த ஊட்டுள சந்தோஷமா இறீங்கோ."

"உம்மா, ஒங்கட அட்டகாஷங்கள எனக்குத் தாங்க ஏழாம ஈக்கு. நீங்க ஊட்ட உட்டுப் போறத்துக்கு முடிவெடுத்தா பெய்த்துத் தொலய வேண்டியது தானே. நானும் எவளவு காலத்துக்குப் பொறுக்கிறது. உம்மா, நான் ஒங்கட வயித்துல தரிச்சதும் பாவம். நீங்க என்னப் பெத்ததும் குத்தம். அன்ன செல்லிட்டேன். நீங்க இனி வேண்டிய முடிவ எடுத்துக் கொள்ளுங்கோ."

அப்போது உம்முனாவின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. உடல் தளர்ந்தது. உள்ளம் பதறியது. உடனே தனது கணவர் எப்போதோ தன்னிடம் சொன்ன ஒரு விடயம் திடீரென அவளது ஞாபகத்துக்கு வந்து சுழல ஆரம்பித்தது.

"உம்முனா ஒரு காலம் வரும். அப்போ புள்ளகள் தாய் தகப்பன மதிக்க மாட்டாங்க. தாய் தகப்பன் தங்கட அற்ப ஆசைகள நெற வேத்திக் கொள்ளப் பெய்த்துத்தான் அவங்க பொறந்தாக தாய் தகப்பனுக்குக் குத்தம் சாட்டு வாங்க. உலகத்துல புள்ளயொண்டு பொறக்கிறது அல்லாட நாட்டம் எண்டத்த மறந்திடுவாங்க. ஆனா புள்ளகள் பெருத்து ஆளாகும் வரக்கிம் தாய் தகப்பனிட்ட ஈந்து எல்லா ஒதவி ஒத்தாசகளயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொள்வாங்க. தாய் தகப்பனுக்கு ஈக்கிற சொத்து சொகங்கள அபகரிச்சுக் கொள்வாங்க. தாய் தகப்பண்ட ஒழைப்ப உறிஞ்சிக் கொள்வாங்க. கடசியா தாய் தகப்பன் வயசுக்குப் போகப் போக புள்ளகள் அவங்கள ஒரு சொமயாக எடுத்துக் கொள்வாங்க. அந்தச் சொமயில ஈந்து விடுபட புள்ளகள் செல நேரம் தாய் தகப்பனோடு முரண்படுவாங்க. ஏசுவாங்க. அடிப்பாங்க. அப்போ அதெல்லாத்தயும் தாங்கிக் கொண்டு தாய் தகப்பன் அமைதியாக ஈக்க வேணும். செல நேரம் ஊட்ட உட்டே தொறத்தியும் உடுவாங்க. அப்ப தாய் தகப்பன் ஊட்ட உட்டு பெய்த்திட வேணும். அதுதான் புள்ளகளப் பெத்தது குத்தமென்டு செல்லி அல்லாட நாட்டத்த மறுக்கிற புள்ளகளுக்கு தாய் தகப்பன் செய்ய வேண்டிய பரிகாரம். அப்ப அல்லா தாய் தகப்பன கையுட மாட்டான்."

முன்பொரு நாள் தனது கணவன் சொன்ன விடயங்கள் மீண்டும் மீண்டும் அவளின் காதுகளில் ஒலிக்க ஆரம்பித்தன. "ஏண்ட புருஷன் சென்ன விஷயங்கள் எல்லாம் சரி. ஏண்ட புள்ளகள் என்னோட முரண் பட்டாங்க. ஏசினாங்க. பேசினாங்க. அடிச்சமட்டும் இல்ல. ஆனா, நான் தொடந்து இங்க ஈந்தா அடிபட வேண்டியும் வரும். அதனால இங்க ஈந்து வெளியேறி எங்க சரி போறதுதான் புத்திசாலித்தனம்."

அதன் பிறகு அவள் புத்தி பேதலித்தது போல் வீட்டுக்குள் அங்கும் இங்கும் நடமாடத் தொடங்கினாள். மகனும் மருமகளும் அதனைக் கண்டும் காணதது போலவே இருந்தனர். அவள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய் வீட்டைவிட்டு வெளியேறும் ஆயத்தங்களுடன் வாயில் வரை வந்து தனது முதலாதவது காலடியை எடுத்து வைத்தாள். இரண்டாவது காலடியை எடுத்து வைத்தாள். மூன்றாவது காலடியையும் எடுத்து வைத்தாள். அப்போது அவளின் புத்தி தெளிந்து விட்டது போல் இருந்தது.

"நான் இப்ப எங்க போவேன்? என்னப் பொருப் பெடுக்க தார் ஈக்கிறாங்க? நான் அவசரப்பட்டுட்டேனா?"

உடனே தனது அவசரப் புத்தியால் தான் தவறான முடிவொன்றுக்கு வந்திருப்பதாக அவளுக்கு விளங்கி விட்டது. எனவே மகன், மருமகள் இருவரில் ஒருவராவது வந்து தனது பயணத்தை நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் அவள் ஒரு முறை திரும்பி அவர்களை நோட்டமிட்டாள். எனினும் அவர்கள் இருவரில் ஒருவராது வந்து அவளை நிறுத்தவில்லை. அதனால் வீட்டை விட்டு வெளியேறுவது போல் பாசாங்கு செய்தபடி அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வெளியே வந்தாள். அங்கே பேரப் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களாவது வந்து தனது பயணத்தை நிறுத்துவார்களா என ஓர் ஆவல் மேலிட, அவள் ஒரு கணம் அங்கே நின்று அவர்களை எதிர்பார்த்தாள். அவர்களும் வரவில்லை. உள்ளம் நொந்து போன அவள் கேட் வரை வந்தாள். அங்கிருந்த கேட் காவலாளி கூட பாராமுகமாகவே இருந்தான். எனவே தற்போதைக்கு தான் யாருக்கும் தேவையில்லாத ஒரு ஜீவன் என்பதை அவள் உணர்ந்து கொண்டு, வீதி வரைக்கும் வந்து விட்டாள்.

ஆறறிவு படைத்த அவளது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவளைக் கை விட்டாலும் ஐயறிவு படைத்த அவளது செல்லப் பூனை அப்போது அவளைப் பின் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

நாளடைவில் அவளையும் அவளது செல்லப் பூனையையும் அந்த பஸ்தரிப்பு நிலையம் தனக்குள் ஐக்கியமாக்கிக் கொண்டது.

**குறிப்பு: கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய அமரர் இலங்கையர் கோன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி - 2014இல் பரிசு பெற்ற சிறுகதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. ரௌத்திரம் பழகு

"வாப்பா அங்க டாம் வெளயாட மகன் இங்க வீடியோகேம வெளயாடுறாரு போல. இம்ரான், நீ இன்னும் கிளாஸுக்குப் போக இல்லயா? இரி, ஒனக்கு நான் இன்டெய்க்கு நல்லொரு பாடம் படிப்பிச்சிறேன்."

வீடியோகேம் பார்த்து தனது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருந்த இம்ரானை கண்டதும் மிகவும் கோபாவேசத்துடனேயே ஜென்னத் வீட்டுக்குள் நுழைந்தாள். அதைக் கண்ணுற்ற சிறுவன் இம்ரான் அங்கிருந்து ஓடிப்பாய்ந்து சென்று, வீட்டு முற்றத்தில் இருந்த மாமரத்தில் ஏறி அதன் கிளையொன்றில் அமர்ந்து கொண்டான். அதைக் கண்ட ஆத்திரத்தில் ஜென்னத்தின் கோபம் இருமடங்காகி விட்டது. அவள் உடனே நிலத்தில் இருந்த கல்லொன்றை எடுத்து அவன் மீது வீசி எறிய, அது தவறி கீழே விழுந்து, பக்கத்தில் படுத்துக்கிடந்த நாயொன்றின் மேல் பட்டு விட்டது. உடனே அது கத்திக்கொண்டு ஓட, அங்கே நடக்கும் அமளி துமளியைக் காண வந்த மாரியத்தும்மா, சிறுவன் மரக்கிளையில் அமர்ந்திருப்பதைக் கண்டு தலையில் கையை அடித்துக்கொண்டு பதற ஆரம்பித்தாள்.

"ஐயோ, மறுமகளே என்ன உம்மா நீ இது செஞ்சாய்? அவன் சின்னப்புள்ள. தப்பித்தவறி நெலத்துல விழுந்து கையக்கால ஒடச்சிக் கொண்டா என்ன செய்வாய்?"

"மாமி, அவன் நெலத்துல விழட்டும். விழுந்து கையக் கால ஒடச்சிக் கொள்ளட்டும். அப்ப நான் அவன ஒரு மூலயில போட்டு வைத்தியம் பாக்கிறேன். நீங்க சும்மா பதறாம போங்கோ மாமி போறத்துக்கு."

மரக்கிளையில் அமர்ந்திருக்கும் பேரனுக்கு வர இருக்கும் ஆபத்தை மனதில் கொண்ட மாரியத்தும்மா, மருமகளுக்குப் பதில் சொல்வதை விடுத்து அவனைக் கீழே கொண்டுவரவே நாட்டம் வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பா, இம்ரான், ஏன்ட தங்கம், மரத்தில ஈந்து கவனமா எறங்கி கீழ வாங்கோ தொரே."

ஜென்னத் அப்போது குறுக்கிட்டாள்

" சரி, மரத்தில ஈந்து எறங்கி நீ கீழே வாவே. அப்ப நான் ஒன்னப் புடிச்சி இதே மரத்தில கட்டி வச்சி ஒனக்கும் ஓண்ட வாப்பாக்கும் நல்லதொரு பாடம் படிபிச்சித் தாரேன்."

இதைக் கேட்ட இம்ரான் மாமரக் கிளையில் இருந்து கொய்யா மரக்கிளையொன்றுக்குத் தாவி, அங்கிருந்து கீழே குதித்து தலை திரும்பிய திசையில் ஓடிவிட்டான்.

தனது மகனைப் பற்றி மறுமகள் அவ்வாறு குறிப்பிட, மாரியத்தும்மாவுக்கு கோபம் வந்து விட்டது.

"அவன் செஞ்ச குத்தத்துக்கு அவன மரத்துல கட்டி வச்சிறது சரி, அவண்ட வாப்பாக்கு நீ என்ன பாடம் படிப்பிச்சிக் குடுக்கப் போறாய்?"

"மாமி, அவண்ட வாப்பா செய்யிற வேலகளால எனக்கு ஊருலகத்துக்கு மொகம் நீட்ட ஏழாம ஈக்கு."

"மறுமகளே, நீ அளந்து பேசு. ஒனக்கு ஊருலகத்துல மொகம் நீட்ட ஏலாமல் ஈக்குறத்துக்கு ஏண்ட மகன் என்ன தப்புத்தவற ஒனக்குச் செஞ்சிட்டான்."

"மாமி, அந்தச் சந்தீல தேத்தண்ணிக்கட வெச்சீக்கிறாளே சவ்தா. அவள், அவள்ட தேத்தண்ணிக்கடயுள்ளுக்கு பைஸ்கோப்பும் காட்டுறாளாம். ஓங்கட மகனும் இன்னும் சில காவாலிகளும் அந்த பைஸ்கோப்பப் பாத்து கும்மாளம் போடுறாங்களாம். அது மட்டுமல்ல, அவரப் பத்தியும் அவளப் பத்தியும் என்னென்னமோ கதகளும் ஊரில கதபடுது."

"காணி புரோக்கர் வேல செய்யிற ஏண்ட மகன் தேத்தண்ணியொண்டு கோப்பியொண்டு குடிச்சிறத்துக்கு சவ்தாட கடெக்கிப் போறதாயீக்கும். இந்த ஊரில ஈரவளுகள் அதக் கண்டுட்டு கத காரணங்கள் கட்டீப்பாளுகள். நீ ஒண்டுக்கும் யோசிக்காதே. ஆம்புளகள் எண்டா இப்பிடித்தான். நாங்க அவங்கள உட்டுத்தான் புடிச்ச வேணும்."

"இல்ல நான் இண்டெய்க்கு ரெண்டுல ஒண்டு காண வேணும். நான் இப்பவே சவ்தாட கடெய்க்குப் பெய்த்து, அவளிட்ட ரெண்டு கேள்வி கேட்டிட்டு வர வேணும்."

" உம்மா, தாயே நீ இப்ப அங்க பெய்த்து, அவள வம்புக்கு இழுக்கப் போனா ஊரு சிரிச்சும். அதனால நாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனோட ஆர அமர இந்த விஷயத்தப் பேசி தீத்துக் கொள்வோம்."

"மாமி, நீங்க ஒங்கட பாட்டுக்கு இரீங்கோ. நான் இப்ப பெய்த்து அவளிட்ட ரெண்டு கேள்வி கேக்காட்டி எனக்கு இன்டெய்க்கு தூக்கம் வராது."

"நான் செல்லுறத்தக் கேளு மகளே."

மாமியாரின் வேண்டுகோளை நிறைவேற்றும் நிலையில் ஜென்னத் இருக்க வில்லை. அவள் ஓட்டமும் நடையுமாக சவ்தாவின் கடையை நோக்கி நடக்கலானாள். அங்கே சவ்தா காணக் கிடைக்கவில்லை. பதிலுக்கு அவள் கிணற்றடியிலேயே காணப்பட்டாள்.

உடனே ஜென்னத் கிணற்றடிக்குச் செல்ல, அங்கே சவ்தா துணி துவைத்துக் கொண்டிருந்தாள். முகத்தில் கோபாவேசம் தெறிக்க ஓட்டமும் நடையுமாக வந்த ஜென்னத்தைக் கண்டதும் சவ்தா தான் துவைத்துக் கொண்டிருந்த அழுக்குத் துணிகளுக்கு மத்தியில் இருந்த ஏதோ ஒன்றை மறைக்க முற்பட்டதை ஜென்னத் அவதானித்து விட்டாள்.

"சவ்தா என்னக் கண்டதும் நீ என்ன அது மறச்சிக் கொண்டாய்?"

"ஏண்ட ஊட்டு உடுப்புகள காட்டுறத்துக்கும் மறச்சிறத்துக்கும் ஒனக்கிட்ட உத்தரவு எடுக்க நீ என்ன இந்த ஊருக்கு மகாராணியா?"

"இந்த ஊருக்கு அல்ல, ஏண்ட ஊட்டுக்கு நான்தான் மகாராணி. ஏன்ட புருஷனுக்கு நான்தான் மகாராணி. அதனால ஏண்ட உத்தரவு இல்லாம நீ எப்பிடி ஏண்ட புருஷன்ட சாரம் சட்டய துவைச்சிறாய்?"

"ஏண்ட கடெய்க்கி வார ஆம்புளகளுக்கு தேத்தன்னி, கோப்பி ஊத்தி உபசாரம் செய்யிரது போதாத்துக்கு, அவங்கட சாரம சட்டகளயும் கழுவிக் குடுக்க, நான் என்ன ஒரு ரூ இன் வன் பொம்புள எண்டு நெனச்சாயா?"

"ஓண்ட புருஷன வெளிநாட்டுக்கு அனுப்பி வச்சிட்டு, ஊர் ஆம்புளகள மயக்கி வச்சிக்கொண்டீக்குற ஒன்ன, ரூ இன் வன் அல்ல இன்னுமொரு விஷயத்தையும் சேத்தி திரீ இன் வன் பொம்புள எண்டுதான் செல்ல வேணும். இப்ப நீ மறச்சி வச்சிக்கொண்டதும் ஏண்ட புருஷன்ட சாரம் சட்டயத்தான்."

"ஓண்ட புருஷன நீ அழகு வடிவா, அன்பாதரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிச்சி கொண்டிருந்தா இந்தச் சந்தேகம் ஒனக்கு வந்திருக்காது."

"இப்ப நீ சென்னத்த இன்னமொரு தடவ செல்லு பாக்க."

"நான் செல்லுறத்த ஒரு மொறதான் செல்லுவேன். கேத்தல்ல தண்ணி கொதிச்சுது. நீ பாவம், எனக்கிட்ட வந்து இந்தக் கேள்வியெல்லாம் கேக்கிறாயே. ஊட்டுள்ளுக்கு வா, ஆர அமர உக்காந்து கோப்பி ஒரு கோப்ப குடிச்சிட்டுப் போகலாம்."

"ஒன்னோட இந்த விஷயங்களப் பேசி வேல இல்ல. அவர் இண்டெய்கு ஊட்டுக்கு வரட்டும். நான் அவருக்கு நல்லதொரு பாடம் படிப்பிச்சிறேன்."

"சரி .... சரி .... அல்லாட காவல். அப்ப நீ பெய்த்திட்டு வா தாத்தா."

சவ்தா எந்தப் பிடியும் கொடுக்காமல் பேசின கதைகளைக் கேட்ட ஜென்னத்துக்கு ஆத்திரம் பொறுக்க வில்லை. அதனால் அவளின் எண்ணங்கள் பலவாறு சுழல, மீண்டும் அவள் தனது வீட்டை நோக்கி நடக்கலானாள்.

"ம்... சவ்தா என்னக் கண்டதும் துணிகளுக்குள்ள ஏதோ ஒண்ட மறச்சாளே. அது கபூர்ட சாரமும் ஷேட்டுமா? அப்ப மைமூன் கெழவி எனக்கிட்ட வந்து சென்ன விஷயம் உண்மயா? சவுதாட புருஷனும் வெளிநாட்டுல. அதனால் கபூர் இங்க வந்து சவ்தாவோட குடும்பம் நடத்துறாரா? கபூர் நல்லவர். என்னோட அன்பாதரவா நடந்து கொள்ளுரவர். குடும்பப் பாசம் உள்ளவர். சவ்தாதான் ஆச வாத்தகளப் பேசி அவர மயக்கிக் கொண்டிப்பாள் போல."

நடுக்கடலில் புயலுக்கு அகப்பட்ட ஒரு கப்பலைப் போல ஜென்னத்தின் உள்ளம் தத்தளித்தது.

"இதெல்லாத்தையும் நான் தாரிட்டச் செல்ல? மாமீட்ட சென்னா மாமி சண்டெக்கி வருவா. உம்மா வாப்பாவும் வயசானவங்க. நானாவும் வெளிநாட்டுல. பள்ளிவாசலுக்கு அறிவிச்சா விஷயம் பெரிசாப் பெய்த்திடும். சரி, தார்ட ஒதவியும் எனக்குத் தேவ இல்ல. நானே இதுக்கு ஒரு தீர்வு காணுரேன்."

அவள் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தவளாய் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவளைக் கண்டதும் மாமியார் தனது முகத்தைத் திருப்பிய வண்ணம் ஒரு பக்கம் செல்ல, அவள் தனது அறைக்குள் நுழைந்தாள். அங்கே தனது கணவன் உறங்கும் கட்டிலை தூக்கி எடுத்து வந்து வெளி வறாந்தாவில் போட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மறுமகளே, நீ என்ன உம்மா இது செய்யப் போறாய்?"

"மாமி, நீங்க ஒண்டும் பேச வாணாம். இண்டெயில ஈந்து அவருட ஊண், உறக்கம், இருப்பிடம் எல்லாம் இந்த விறாந்தையிலதான் நடக்க வேணும். அதனால இந்த வாசலுக்கு அங்கால அவர நான் ஊட்டுள்ளுக்கு எடுக்க மாட்டேன்."

"மருமகளே, அதெப்பிடி நீங்க ரெண்டு பேரும் ஒரு ஊட்டுக்குள்ள மாப்பிள பொம்புளயா வாழுற? "

"மாமி, ஏண்ட மகன் வளந்து வாப்பா எங்க எண்டு கேட்டா, காட்டுறத்துக்கு அவர் என்னோடதான் வாழ வேணும். அதனாலதான் அவருக்கு இந்த அளவுல சரி நான் உட்டுக் குடுக்கிறேன். அவர் விருப்பம் எண்டா அதப்படி நடந்து கொள்ளட்டும். இல்லாட்டி என்ன ஏண்ட ஊட்டுக்கு அனுப்பி வச்சட்டும்."

"மருமகளே, அவன் ஆம்புள. நீ பொம்புள. அதனால நல்லா யோசிச்சி நடந்துகோ உம்மா?"

மருமகள் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என வாதிடும் ஒரு பிடிவாதக்காரி என்பது மாரியத்தும்மாவுக்கு நன்கு தெரியும். அதனால் அவள் ஜென்னத்தும்மாவுடன் அளவுக்கதிகமாக பேச்சு வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை.

அன்றைய நாள் மெதுவாக நகர்ந்தது. அந்தி வந்தது. வானம் இருள ஆரம்பித்தது. கூடுகளை நோக்கிப் பறவைகள் பறந்து சென்றன. இரவை எதிர்கொள்ள எங்கும் ஆயத்தங்கள் நடந்தன. ஆனால் ஜென்னத் வீட்டில் எல்லாம் வழமைக்கு மாறாகவே நடந்தன. தினம் மஹ்ரிபுடன் எரியும் சாம்பிராணிச் சட்டி எரிய வில்லை. ஊதுபத்திகள் புகையவில்லை. வெளி விறாந்தையில் விளக்கு பற்ற வில்லை. திருக்குர்ஆன் ஓதப்படவில்லை. ஏனைய தினங்களில் பள்ளிவாசலுக்குச் சென்று மஹ்ரிபுத் தொழுகையை முடித்துவிட்டு வீடு வந்து சேரும் கபூர் கூட அன்று நேர காலத்துக்கு வரவில்லை. அதனால் மாரியத்தும்மா தனது மகனின் வரவை எதிர்பார்த்து முன்வாசலில் காத்திருந்தாள்.

"சவ்தா பொல்லாதவள், மாயக்காரி. அவள்ட சிரிப்புக்கும் ஆட்டம் தேட்டம்களுக்கும் கபூர் மகன் மயங்கிட்டான் போல. சாட மாடயா எனக்கும் கேள்விப்பட்டிருச்சி. நெருப்பு இல்லாம பொக எழும்பாது. அதனால ஊர் மனிஷர் கதச்சிற விஷயங்களுல என்னசரி உண்மகள் ஈக்கும்."

கவலை தோய்ந்த முகத்துடன் அவள் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனுக்காகக் காத்திருந்தாலும் ஜென்னத் வழமைபோல் இரவுக்கான சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அவளின் உள்ளம் திடமாக இருந்தது. கட்டின மனைவி இருக்க, வேறொரு பெண்ணுடன் கள்ளத் தொடர்பை வைத்திருக்கும் ஏனைய ஆண்களுக்கும் தான் எடுக்கும் நடவடிக்கைகள் ஒரு பாடமாக அமைய வேண்டும் என அவள் விரும்பினாள். அதனால் எது வந்தாலும் அதை எதிர் கொள்ள அவள் உறுதி பூண்டிருந்தாள்.

பள்ளிவாசலில் இஷா நேரத் தொழுகையும் முடிந்து, சிறிது நேரம் தாமதித்தே கபூர் வீடு நோக்கி வந்தான். அன்று காலை நேரம் நடந்த சம்பவங்களை சவ்தா மூலம் அறிந்து வைத்திருந்த அவனுக்கு, வீட்டுக்குள் இருந்த ஆழ்ந்த அமைதி ஒரு பேராபத்தை உணர்த்தி நின்றது. இருந்தும், ஏதும் அறியாதவனைப் போல வீட்டுக்குள் நுழையவே அவன் விரும்பினான். அப்போது முன் விறாந்தையில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த மாரியத்தும்மா, அவனைக் கண்டதும் முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பிக் கொண்டது, மேலும் அவனை அதிர வைத்தது. ஆனால் அதை அவன் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

"உம்மா, என்ன உம்மா இது? ஊடெல்லாம் இருண்டு பெய்த்தீக்கு? நீங்க என்ன இது மூலயொண்டுல குந்திக்கொண்டு செய்யிற? ஆ .... இதென்ன இது? ஏண்ட கட்டில இங்க கொண்டு வந்து போட்டது தாரு?"

"மகனே, நீ ஆழமறியாமக் கால உட்டுட்டாய் போல. நான் ஒரு கெழவி. அதனால, நீ கேட்டாயே செல கேழ்விகள். அதெல்லாத்துக்கும் பதில் செல்ல எனக்குச் சக்தி இல்ல. நீ போட்ட சத்தத்துக்கு மருமகள் இப்ப இங்க வருவா. அப்ப அவ, நீ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் செல்லுவா போல."

"உம்மா, இது ஏண்ட ஊடு. ஏண்ட கட்டில வெளியில போட்டது என்ன வெளியில போட்டது மாதிறி. அதுக்கு அவ தாரென்?"

அப்போது அங்கே ரௌத்திர கோலத்தில் ஜென்னத் காட்சியளித்தாள்.

"நான் தாரெனா? அல்லா ரசூல முன்னிருத்திய ஒரு சபையில வச்சி, பல பேரச் சாட்சிகளாக்கி, ஏண்ட வாப்பா வலி செல்ல, நீங்க பொறுப்பேத்துக் கொண்ட ஒங்கட ஹலால் பொஞ்சாதி நான். அப்பிடி ஈக்க நீங்க என்னத்துக்கு ஹறாத்துல அலையுறீங்க. ஏதோ ஒண்டு ஈப்பதனாலதான் ஊருல செல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிஷர் ஒங்களப் பத்தியும் சவ்தாவப் பத்தியும் பல மாதிறி கதச்சிறாங்க. அது கேள்விப்பட்ட நேரமே நான் இந்த ஊட்ட உட்டுப் பெய்த்தீக்க வேணும். ஆனா நான் போகாம ஈந்ததுக்குக் காரணமொண்டு ஈந்திருச்சி. அதுதான் ஏண்ட மகன். அவன் உம்மா-வாப்பா ரெண்டு பேருட அன்பாதரவோடயும்தான் வளர வேணும். செல நேரம் அந்த சவ்தாவோட ஈக்கிற ஒறவு பொய்யாகவும் ஈக்கலாம். ஆனா ஒங்களுக்கு களங்கம் ஒண்டு வந்திட்டுது. அதப்பத்தி எனக்குக் கவல இல்ல. ஆனா நீங்க எனக்குப் புருஷனாகவும் ஏண்ட மகனுக்கு வாப்பாவாகவும் ஈக்க வேணும். அதனால நீங்க தொடந்து என்னோட வாழவேணும். ஆனா அதுக்கு ஒரு கண்டிஷன் ஈக்கு. அதுதான் இண்டெயில ஈந்து குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ஒங்களுக்கு ஊண், உறக்கம், இருப்பிடம் எல்லாம் இந்த வெளி விறாந்தையில தான். அதனால இந்த வாசலுக்கு இங்கால நீங்க வரக்கூடாது. இதுக்கு விருப்பமெண்டாத்தான் நான் தொடந்து ஒங்கட பொஞ்சாதியா வாழுவேன். அப்படி நடந்து கொள்ள நீங்க விருப்பம் இல்லாட்டி என்ன ஏண்ட உம்மா வாப்பாட ஊட்டுக்கு அனுப்பி வையுங்கோ."

'நான் செஞ்சது பிழதான். சவ்தாக்கு என்னில ஏதோ ஒரு புடிப்பு. அவள், மினுக்கி, குழுக்கி, சிரிச்சி என்ன மயக்கிட்டாள். நான் இப்ப என்ன செய்ய? இப்போ ஜென்னத்த எதிர்த்துப் பேசாம ஈக்கிறதுதான் புத்திசாலித்தனம். இல்லாட்டி அவள் அவள்ட உம்மாட ஊட்டுக்குப் பெய்த்திடுவாள். அப்ப பிரச்சின இன்னும் பெரிசாப் போகும்.'

"பிழய ஒத்துக்கொண்டதனாலதான் நீங்க மௌனமா ஈக்கிறீங்க போல."

"உம்மா, தாயே, பிழயோ, சரியோ, நீ செல்லுறபடியே நான் நடந்திட்டுப் போறேன்."

"ஒங்களுக்குத் தந்த தண்டனயப் போலவே ஒரு தண்டனய சவ்தாவுக்கும் குடுப்பேன். அதயும் மனசில வச்சிக் கொண்டு, இப்ப கை கால் மொகத்த கழுவிட்டு வாங்கோ சாப்பிட."

ஜென்னத் சுப்பறாவைக் கொண்டு வந்து வெளி விறாந்தையில் விரித்து விட்டு இரவுச் சாப்பாட்டை கொண்டு வந்து பரத்தினாள். அதன்பிறகு கை கால் முகம் கழுவி விட்டு வந்த கபூர் சாப்பிட அமர்ந்தான்.

"மகன், வாப்பா சாப்பிடுறாரு. நீங்களும் வந்து அவரோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுங்கோ."

தனது அறையில் படித்துக் கொண்டிருந்த இம்ரான் தாயின் வேண்டுகோளை ஏற்பதுக்குப் பதிலாக, தனது கையை மேசையில் ஓங்கி அடித்தான். சாடை மாடையாக தெரிந்து வைத்திருந்த தனது தந்தையின் செயல்கள், தற்போது அம்பலமாக, அவை அவனுக்கு கோபத்தை ஊட்டியிருக்க வேண்டும்.

"மகன் வர மாட்டான் போல. நீங்க சாப்பிடுங்கோ. "

உள்ளே ஒரு வெறுப்பு இருந்தாலும் ஜென்னத் மலர்ந்த முகத்துடனேயே கபூருக்கு உணவைப் பரிமாறினாள். தனது கணவன் ஓர் ஒழுக்கமற்றவனாக இருந்தாலும் அவனை நல்வழிப்படுத்தி அவனுடன் தொடர்ந்து குடும்பம் நடத்தவே அவள் விரும்பினாள் என்பதுதான் அதற்குரிய காரணமாக இருந்திருக்க வேண்டும். அதற்காக அவள், அவனை அடுத்து வாழவும் விரும்பினாள். அடித்து வாழவும் விரும்பினாள்.

கபூர் உணவருந்தி முடிந்ததும் ஜென்னத் வீட்டுக்குள் செல்ல, விறாந்தையின் ஒரு மூலையில் குந்தியிருந்த மாரியத்தும்மா தனது மகனின் பரிதாப நிலையைக் கண்டு கண் கலங்கி நின்றாள்.

"மாமி பத்து மணியாகப் போகுது. நான் கதவ மூடப்போறேன். நீங்க உள்ளுக்கு வாரீங்களா? இல்ல... "

"மருமகளே, நான் உள்ளுக்கு வர இல்ல. இங்க, இந்த மூலயில படுத்துக் கொள்ளுறேன். மகன் பாவம்..."

அவளின் பெற்ற பாசம் விட்டுக் கொடுக்க வில்லை. அதனால் மகனும் தாயும் வெளி விறாந்தையில் படுக்க ஜென்னத் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டாள்.

'பெண்புத்தி பின்புத்தி எண்டது சரியாப் போச்சி, மகன வெளியே போட்டுட்டு மருமகள் உள்ளே படுக்கிறது, சரியா ஆமயத் தூக்கி ஆத்துல போட்ட கதயாகிடுமோ தெரியா?"

மாரியத்தும்மா அவ்வாறு நினைத்தாலும் கபூரை சவ்தாவிடம் இருந்து பிரிக்க, அவனுக்கெதிராகத் தான் எடுத்த அதிர்ச்சி நடவடிக்கை வெற்றியளித்ததைப் பற்றி, ஜென்னத் திருப்தி அடைந்தாள். இதே போன்ற அதிர்ச்சியொன்றை சவ்தாவுக்கும் கொடுக்க ஜென்னத் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தாள்.

நாட்கள் வேகமாகச் சுழன்றன. ஏற்ற சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கும் வரை பல நாட்கள் காத்திருந்த ஜென்னத் பல பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் வைத்து சவ்தாவுக்கு ஏற்ற தண்டனையை கொடுத்துவிட்டாள். அது ஏச்சுப் பேச்சு, அடி, உதை, கைகலப்பு என அமைந்தது. அப்போது அங்கிருந்த ஏனைய ஒரு சில பெண்களும் சவ்தாவுடன் சேர்ந்து கொண்டனர். மற்றைய பெண்கள் சவ்தாவைப் பார்த்து எள்ளி நகையாட, ஜென்னத் வெற்றிக் களிப்பில் வீடு வந்து சேர்ந்தாள். அவள், வந்த களைப்பைக் கூடப் பாராது, வீட்டைக் கூட்டிப் பெருக்கி, ஒட்டடை துடைத்து துப்பரவாக்கினாள். முன் விறாந்தையில் இருந்த கட்டிலை மீண்டும் கபூரின் அறைக்குள் கொண்டு வந்து வைத்தாள்.

நடந்து கொண்டிருக்கும் மாற்றங்களை மாரியத்தும்மா அவதானித்துக் கொண்டிருந்தாளே ஒழிய ஜென்னத்திடம் எதுவும் கேட்கவில்லை.

"மாமி, கூட்டுல அடச்சி வச்சீக்குற சேவல, மோதீன் மாமாட்டச் செல்லி அறுத்து, உரிச்சி எடுத்துக்கொண்டு வாங்கோ."

"என்ன மறுமகள் ஊட்டுல இண்டெய்க்கு என்ன சரி விஷேசம் நடக்கப் போகுதா?"

"மாமி நடக்கிறதுகளப் பாத்துக்கொண்டு நீங்க சும்மா ஈந்தாப் போதும்."

அன்றைய நாள் வேகமாகச் சுழன்றது. அன்று, மற்றைய வீடுகளில் இல்லாத விசேஷமொன்றுக்கு ஜென்னத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

அந்தி வந்தது. வானம் இருண்டது. ஜென்னத் வீட்டில் விளக்குகள் எல்லாம் எரிந்தன. சாம்பிராணி புகைந்தது. ஊதுபத்தி மணத்தது. திருக்குர்ஆன் ஓதப்பட்டது.

இஷா நேரத்தொழுகையை முடித்துவிட்டு கபூர் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்போது சவ்தாவுக்கு ஏற்பட்ட விபரீதங்களைப் பற்றி, அவனின் காதுகளில் பட்டும் படாமலும் இருக்க பலர் கதைத்தனர். அதனால் பயமொன்று அவனுக்குள் குடிகொள்ளவே செய்தது. ஆனால் வீட்டை நெருங்கியதும் வீட்டுக்குள் நடக்கும் அமர்க்களங்களைக் காண அவனுக்குள் ஒரு திகைப்பு ஏற்பட்டு விட்டது. வீட்டில் ஒரு விருந்துபசாரம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதை சமையல் வாசனை அவனுக்கு உணர்த்தி நின்றது. வெளி விறாந்தையில் இருந்த அவனது கட்டிலைக் கூடக் காணாதது அவனுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதனால் வீட்டை விட்டுத் திரும்பிப் போய் விடுவோமா என்று கூட ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது. அப்போது புத்தாடை உடுத்து, புதுமணம் பூசி, புதுக் கோலம் பூண்ட ஜென்னத், வாசலில் வந்து நின்று கொண்டாள்.

"என்ன ஜென்னத் இது? தாராவது விருந்தாளிகள் இப்ப இங்க வாராங்களா? இல்ல, வேற ஏதாவது விஷேசங்களா?

"இல்ல, இல்ல அதொன்டும் இல்ல. நீங்கதான் ஏன்ட விருந்தாளி."

"ஜென்னத், எனக்கென்னத்துக்கு விருந்தொண்டு?"

"நான் எல்லா விஷயங்களயும் விபரமாச் செல்லுறேன். மொதல்ல உக்காருங்க."

அப்போது, கபூர் அங்கிருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டான்.

"ஆம்புளகள் சேத்தக் கண்டா சேத்த மிதிச்சிட்டு, தண்ணியக் கண்டா காலக் கழுவுற ஜாதி. அதனால நான் ஒங்களக் கொர செல்ல இல்ல. மல போல ஈந்த புருஷன, சவ்தா வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு ஒழுக்கம் கெட்டு நடந்திட்டாள். அவளால எத்தனையோ குடும்பங்கள் கலஞ்சி போக ஈந்திச்சிது, இப்பிடி ஒழுக்கமில்லாம நடக்குர மனிஷர கலுத்து வரக்கிம் நெலத்துல நாட்டி கல்லடிச்சிக் கொல்ல இஸ்லாம் செல்லுது. ஆனா, அவளுக்கெதிரா ஒரு வாத்த பேச இந்த ஊருல ஒரு ஆம்புள முன்வர இல்ல. ஒங்களப் போல இந்த ஊருல அதிகமான ஆம்புளகள் அவள்ட ஊட்டுக்குப் பெய்த்து வந்ததுதான் அதற்கான காரணம். அதனால அவளுக்கு அதுக்கேத்த தண்டனய நாலு பேர் அறிய நான் குடுத்திட்டேன். நீங்க எனக்கும் ஏண்ட மகனுக்கும் தேவ எண்டத்தப் போல, இந்த ஊருல உள்ள பொம்புளகளுக்கும் அவங்கட புருஷன்மார் தேவ. புள்ளகளுக்கும் அவங்கட வாப்பமார் தேவ. அந்தக் காரணத்த வச்சித்தான் நான் அப்பிடி நடந்து கொண்டேன். நான் பிழ எண்டா அல்லா எனக்குத் தண்டன தரட்டும். நாங்க எங்கட மகனுக்காக வேண்டி பழசெல்லாத்தயும் மறந்துடுவோம். இண்டெயில ஈந்து நீங்க ஊட்டுள்ளுக்குத்தான் படுக்க வேணும்."

கபூரின் முகத்தில் இருந்த புன்முறுவல், ஜென்னத்துக்கு நம்பிக்கை அளிக்க, அங்கே விருந்துபசாரம் மிக விமரிசையாக நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. சுவர்க்கமும் நரகமும்

ஆப்தீன் ஹாஜியார் படுத்த படுக்கையாக இருந்தார். பல நோய் நொடிகளுடன் வயது முதிர்ச்சியும் உடல் தளர்ச்சியும் அவரை வாட்டிக் கொண்டிருந்தன. அத்துடன் அவரது புத்தியும் பேதலித்து இருந்தது. அது சைத்தானின் ஒரு செயற்பாடாக இருக்குமென சந்தேகிக்கப்பட்டதனால் பல இஸ்மஸ்மாக்களும் துஆப் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன.

ஆப்தின் ஹாஜியாருடன் அவரது மனைவி ஹாஜா மர்லியாவும் பதினைந்து வயது மதிக்கத்தக்க ஒட்டிசம் பிள்ளையொன்றும் பணியாள் செய்யதுவும் இருந்தனர். அவர்களது மகன் ரம்சி சவூதி அரேபியாவில் வேலை வாய்ப்பொன்றைப் பெற்று தனது மனைவியுடன் அந்நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தான். மகள் ரம்சியா கொழும்பில் உள்ள பிரபல நிறுவனமொன்றில் ஒரு நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாள். அன்றொரு நாள் அவள் விடுமுறையொன்றுக்காக வந்து, சில தினங்கள் தங்கி, தனது தந்தையின் சுக நலங்களை விசாரித்து விட்டு விடை பெற்றுச் செல்ல, அவரது கட்டில் அருகே வந்து நின்றாள். அப்போது தனது தந்தையின் இயலாத நிலையைப் பார்த்த அவளுக்கு திடீரேன ஒரு கவலை ஏற்பட்டு விட்டது.

"வாப்பா, நீங்க ஒண்டுக்கும் யோசிக்க வாணாம். கொஞ்ச நாளைக்கு நான் ஒங்கள கொழும்புல கொண்டு போய் வச்சிப் பாக்கிறேன். அது ஒங்களுக்கு ஒரு சேஞ்ச்சாகவும் ஈக்கும்".

"நான் எப்பிடி உம்மா கொழும்புக்கு வருவேன்? இங்க ஏண்ட உம்மா, வாப்பா, கூட்டம் குடும்பம் எல்லாரும் வந்து நிக்குறாங்க. அவங்க எல்லாரும் இப்ப சொர்க்கலோக வாசிகளாம். நான் ஈக்கிற இந்த நரகத்தில ஈந்து என்னயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கலோகத்துக்கு அழச்சிட்டுப் போக அவங்க இங்க காத்துக் கொண்டிருக்கிறாங்க. இண்டயோ நாளயோ நான் அவங்களோட பெய்த்திடுவேன். அதனால நான் ஒன்னோட வர இல்ல. உம்மாவப் போலயல்ல, நீ நல்ல புள்ள. அல்லா ஒனக்கு பறக்கத்துச் செய்வான்."

அப்போது அவரது மனைவி ஹாஜா மர்லியா அங்கே குறுக்கிட்டாள்.

"பாத்தியா மகள், வாப்பா கதச்சிற கதகள ? நாங்க, அவர சொர்கலோகத்துக்கல்ல, அங்கொடக்கித்தான் இப்ப அனுப்பி வச்ச ஈக்கும்."

"உம்மா, வயசு காலத்துல மனிஷர்ட புத்தி தழம்புறத்தக் கணக்கெடுக்க ஏலா. அதுக்கெல்லாம் இண்டெய்க்கு மருந்து மாத்துகள் ஏராளமா ஈக்கு. ஒங்களுக்கு இப்பிடி ஒரு நோய் வந்து ஒங்கள அங்கொடைக்கு அனுப்பி வச்சா நீங்க விருப்பப் படுவீங்களா?"

"அல்லா காக்கட்டும். அப்பிடி ஒரு இக்கட்டு வர நான் எந்தப் பாவமும் செய்ய இல்ல."

"அப்ப, வாப்பா பாவம் செஞ்சீக்குறாரு எண்டு செல்ல வந்தீங்க?"

"வாப்பா, பாவம் செஞ்சீக்குறாரா? மறுமகன் அங்கால இல்லாட்டி வாப்பா செஞ்ச பாவமெல்லாத்தயும் நான் ஒனக்கு லிஸ்ட் போட்டுச் செல்லிக் காட்டுவேன்."

"உம்மா, சரி, சரி. அஸீம் அங்கால ஈந்ததுக்குப் பரவாயில்ல. வாப்பா செஞ்ச பாவங்களுல ஒண்டயாவது மெதுவாச் செல்லுங்களே. நீங்க செல்றது நியாயமா எண்டு செல்லிப் பாப்போம்.?"

"என்ன விட பதினஞ்சி வருஷம் வயசில மூத்த ஒங்கட வாப்பா என்னக் கலியாணம் கட்டினதே பெரியதொரு பாவம். அந்தப் பாவத்தாலதான் அந்தா....அங்க...அந்த மூலயில ஈக்குதே ஒரு ஒட்டிசம், அதுக்கு நான் உம்மாவானேன். அந்த ஒட்டிசத்தோட நான் நரக வேதனப்பட ஒங்கட வாப்பா சொர்கலோகம் போகப் பாக்கிறாரு."

இதைக்கேட்ட ரம்சியா, ஒட்டிசம் நோயால் பீடிக்கப்பட்டு ஒரு மூலையில் சுருண்டு கிடக்கும் தனது தங்கையைப் பற்றிப் பரிதாபப் பட்டு விட்டு தனது தாயைக் கடிந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உம்மா, அல்லா, பல மாதிரி மனிஷனச் சோதிச்சிறான். புள்ளகள தந்தும் சோதிச்சிறான். தராமலும் சோதிச்சிறான். காசி பணத்த தந்தும் சோதிச்சிறான். தராமலும் சோதிச்சிறான். பட்டம் பதவிய தந்தும் சோதிச்சிறான் தராமலும் சோதிச்சிறான். அதனால நாங்க இதெல்லாத்துக்கும் மனம் தளரப் படாது. அது ஈக்கட்டும். வாப்பா ஒங்கள விட பதினஞ்சி வருஷம் வயசுல மூத்தவரு எண்டு கவலப்படுரீங்க. ஆனா நீங்க ஓம்படப் பெய்துத்தானே வாப்பா ஓங்களக் கலியாணம் கட்டி ஈப்பாரு.”

“அந்தக் காலத்துல கலியாணம் காப்புகள் செஞ்சது பொம்புளகளிட்ட கேட்டுட்டு அல்ல. ஏண்ட பாழாப் போன நானாக்காரன்தான் என்ன இந்தக் கெழவண்ட கழுத்துல கட்டி வச்சான். அது மூலமா இவருக்கீந்த சொத்து சொகங்கள அபகரிச்சிக் கொள்ள அவன் செல திட்டங்கள வகுத்தீந்தான் போல. ஆனா இந்தக் கெழவனிட்ட அதுகள் ஒண்டும் பழிச்செல்ல.”

“உம்மா, பழசெல்லாத்தயும் பேசுறத்தால எந்த நன்மயும் கெடச்சிறது இல்ல. நாங்க ஆணாதிக்கம் உள்ள சமூகம் ஒண்டுல வாழப் பழகிட்டோம். அந்தக் காலத்துல மட்டுமல்ல, இந்தக் காலத்துலயும் அதிகமான கலியாணங்கள் நடக்கிறது பொம்புளகளுட்ட கேட்டுட்டு அல்ல, அதனால இப்ப நடக்க வேண்டிய விஷயங்களப் பத்திப் பேசுங்கோ.”

அப்போது ஆப்தின் ஹாஜியாருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த செய்யது அங்கே வந்தான்.

“செய்யது மாமா, நான் வாப்பாவ கொழும்புக்குக் கூட்டிட்டுப் போகப் போறேன். அவர, அதுக்கு ரெடிபண்ணிப் போட்டு, நீங்களும் ரெடியாகுங்கோ கொழும்புக்குப் போறத்துக்கு.”

அப்போது அவ்விடத்துக்கு ரம்ஸியாவின் கணவர் அஸீம் வந்தார்.

“அஸீம், நாங்க வாப்பாவ கொழும்புக்குக் கூட்டிட்டுப் போவோம். அங்க ஈக்கிற நல்லதொரு டொக்டருட்ட காட்டி அவருக்கு மருந்து எடுத்துக் குடுப்போம்.”

உடனே அஸீம், ரம்சியாவை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று அவளிடம் மெல்லிய குரலில் கதைத்தார்.

“அதெப்பிடி ரம்சியா? நாங்களே ஆயிரம் பிரச்சினகளில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டித் தவிச்சிக்கொண்டு ஈக்க. புத்தி தழம்பிப் போன வாப்பாவையும் எங்களோட வச்சி எப்பிடி பராமரிச்சிவோம்.?"

அதனால் ரம்சியா மிகவும் கவலையோடு தனது தந்தையிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு சற்று நேரம் பொறுத்திருந்த ஆப்தின் ஹாஜியார், செய்யதுக்குக் குரல் கொடுத்தார்.

"செய்யது, அந்த அலவாங்கு, மண்வெட்டி, ஷவல் எல்லாத்தயும் எடுத்திட்டு இங்க ஓடி வா."

இதைக் கேட்ட செய்யதுக்குத் தலை கால் விளங்கவில்லை.

"ஆ... இதென்ன இது ? ஹாஜியார் இந்த மால மஹ்ரிபு நேரத்தில அலவாங்கு, மண்வெட்டி, ஷவல் எல்லாத்தயும் கொண்டு வரச் செல்லுறாரே. அவர் ஊட்டுள்ளுக்கே கபுறயும் வெட்டிக் கொள்ளப் பாக்கிறாரோ ?"

செய்யது தனக்குள் அவ்வாறு சொல்லிக் கொள்ள, ஆப்தின் ஹாஜியார் மீண்டும் செய்யதுக்குக் குரல் கொடுத்தார்.

"செய்யது, ஒண்ட காது செவிடா? நான் சென்னது ஒனக்குக் கேக்க இல்லயா? நான் சென்ன ஆயுதங்கள் எல்லாத்தயும் எடுத்திட்டு இங்க ஓடி வா. அவசரமாகச் செய்யிறத்துக்கு ஒனக்கொரு வேல ஈக்கு."

"ஹாஜியார், அந்த ஆயுதங்கள் எல்லாம் இப்ப என்னத்துக்கு ? நீங்க இன்னும் ஹயாத்தோடதானே ஈக்குரீங்க."

"நான் ஹயாத்தோடதான் ஈக்குறேன். அதனாலதான் செல்லுறேன், அலவாங்கு, மண்வெட்டி, ஷவல் எல்லாத்தயும் கோந்து இந்தக் காமராட முன் சுவர ஒடச்சித் தள்ளு எண்டு."

"ஹாஜியார், இதென்ன கத கதச்சிரீங்க? இந்த ஊட்டுச் சுவர்கள ஒடச்சப் புடிச்சப் போனா, ஹாஜா ஏண்ட டிக்கற்ற கிழிச்சி என்ன ஏண்ட ஊட்டுக்கே அனுப்பி வச்சிடுவா. அப்ப நான் எப்பிடி ஏண்ட புள்ள குட்டிக்குத் தின்னப் போடுவேன்."

"செய்யது, மாண்டு போன ஏண்ட கூட்டம் குடும்பமெல்லாம் இங்க வந்து என்னச் சுத்தி நிண்டு கொண்டு நிக்குறது ஒனக்கு தெரியாதா? அவங்க எல்லாரும் என்னச் சொர்க்கலோகத்துக்கு அழச்சிட்டுப் போக வந்தவங்க. ஏண்ட ரூஹு எப்ப பிரியும் எண்டு தாராலயும் செல்ல ஏழா. அதனால அவங்க எல்லாருக்கும் உக்கார எட வசதி செஞ்சி குடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும். அதுக்காகத்தான் இந்தக் காமராட முன் சுவர இடிச்சி தள்ளிப் போடு எண்டு செல்லுறேன்."

"ஹாஜியார், அந்த வேலய நாங்க நாளெய்கு வச்சிக் கொள்வோம். இப்ப நான் ஒங்களுக்கு நல்லதொரு வெத்திலவாய் இடிச்சித் தாரேன். அத மெண்டு மெண்டு, அல்லா ரசூல ஞாபகப்படுத்திக் கொண்டு, தஸ்பீக் கோர்வய கையில எடுத்து திக்ரு வையுங்கோ. அப்ப, ஒங்கட மனச வழி கேடாக்குற சைத்தான் ஒங்கள உட்டு வெளகிப் போவான்."

"அப்ப சுவர இடிச்சத் தேவ இல்ல, வெத்திலவாய இடி. ஏண்ட இனசனங்கள் ஈக்கிற மாதிறி ஈந்திட்டு போகட்டும்."

ஹாஜியார் வெற்றிலை போடும் பழக்கத்திற்கு அடிமையாக இருந்ததனால் தப்பினோம் பிழைத்தோம் என நினைத்துக் கொண்ட செய்யது, அங்கிருந்த வெற்றிலைச் செப்பில் இருந்து ஒரு பாக்கைத் தெரிந்து, அதை சீவத் தொடங்கினான். அப்போது ஆப்தீன் ஹாஜியார் மீண்டும் குரல் கொடுத்தார்.

"செய்யது, நீ வெத்தில இடிச்சிறத்தோட இப்ப கொஞ்சத்துக்கு முந்தி நடந்த இந்தக் கதயேயும் கேளு. ஏண்ட ரஷீது மாமா கொஞ்ச நேரத்துக்கு முந்தி இங்க வந்தாரு. அவர் ஏண்ட தாடியப் பாத்திட்டு · என்னப்பத்தி பொறாமப் படுறதாச் சென்னாரு."

"மறுபடி பழய எடத்துக்கே வந்திட்டாரு போல. யா அல்லா, இந்தக் கெழவனோட தலயடிச்சிறது ஏண்ட தலே நசீபாப் பெய்த்திட்டுது. மவ்தாப் போன ரஷீது மாமா திரும்ப எங்க வரப் போறாரு. ஒறத்த சைத்தானொன்டு இவர வழிகேடாக்குறான் போல."

செய்யது இவ்வாறு தனக்குள் சொல்லிக் கொள்ள, ஆப்தின் ஹாஜியார் மீண்டும் குரல் கொடுத்தார்.

"செய்யது, நான் செல்லுற விஷயத்துக்கு நீ காது குடுக்க இல்ல போல."

"சரி சரி, ஹாஜியார் செல்லுங்கோ. நான் பாக்கச் சீவிட்டேன். வெத்திலய இடிக்கும் வர கொஞ்சம் பொருங்கோ. அது சரி, அவர் என்னத்துக்கு ஒங்கட தாடியப் பாத்திட்டு பொறாமப் படவேணும்."

"செய்யது, ஒனக்கு விஷயம் தெரியாமப் பேசுறாய். தாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிறது முஸ்லிம் ஆம்புளகள் ஒவ்வொத்தருக்கும் சுன்னத்து. அதனால அந்த சுன்னத்தான தாடிய வச்சீக்குற ஒவ்வொருத்தருக்கும் அவர்ட தாடியில ஈக்குற ரோமங்கள்ட எண்ணிக்கைக்கு அல்லா அவனுக்கு சொர்கலோகத்துல ஹூர்லீன்கள ஹலாலாக்கித் குடுக்குறான். ரஷீது மாமா என்னத்துக்கு என்னப் பத்தி பொறாமப்பட்டார் எண்டது, இப்ப ஒனக்கு வெளங்குதா?"

"வெளங்குது, வெளங்குது, நான் நெனெச்சிறேன், அவர விட ஒங்களுக்குக் கூடுதலாக ஹூர்லீன்கள் கெடைப்பாங்க எண்ட நெனப்பிலாக ஈக்க வேணும்."

"சரியாய் சென்னாய், சரியாய் சென்னாய். அதனால இடிச்சிற வெத்திலக் கலவையில அரவாசி ஒனக்கு. அரவாசி எனக்கு. அவசரமா வெத்திலய இடிச்சி இங்கால எடு."

"இந்த உலகத்துல ஒரு பொம்புலய அடக்கியாளக் கஷ்றப்படுகிற மனிஷன் அங்க பெய்த்து அத்தன ஹூர்லீன்களயும் அடக்கியாள என்ன கஷ்றப்படுவாரோ தெரியாது?"

"செய்யது என்ன சென்னாய்? என்ன சென்னாய்? நீ வெத்தில இடிச்சிற ஓசேக்கி ஏண்ட கண்ணும் அசந்த கொண்டு வருகுது. நல்லா இடி, நல்லா இடி."

"ஹாஜியார் இந்த உலகத்துள நீங்க செஞ்ச நன்மகளுக்கு அல்லா, சொர்கலோகத்துல ஒங்களுக்கு எத்தனையோ மாளிககள உருவாக்கி, அதுல ஒங்களுக்கு ஆயிரம்... இல்ல, பத்தாயிரம்....இல்ல, ஒரு லட்சம் ஹூர்லீன்கள ஹலாலாக்கி தருவான் எண்டு செல்லி வச்சேன். அந்த அளவுக்கு ஒங்கட தாடி அடர்த்தியா ஈக்கு."

"செய்யது நீ சென்னாலும் செல்லாட்டியும் நான் நல்ல வழியில சரி, கெட்ட வழியில சரி கை நிறையக் காசு பணம் சம்பாரிச்சவன். அதனால நன்ம செய்யிரத்துக்கு அது எனக்குப் பக்க பலமா ஈந்திச்சிது. நான் மூனு மொற ஹஜ்ஜி செஞ்சீக்குறேன். பத்து பள்ளிவாசல்களக் கட்ட ஒதவி செஞ்சீச்சிக்குறேன். ஏழக் கொமரு காரியங்கள நெறவேத்தி வச்சீக்குறேன். கந்தூரி, கத்தம், பாத்திஹா குடுத்தீக்குறேன். செய்யது, இதெல்லாம் போதாதா நான் சொர்க்கலோகம் போறத்துக்கு."

"ஹாஜியார், நல்ல வழியில் சரி, கெட்ட வழியில சரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு பணம் சம்பாரிச்சதாக இப்ப நீங்க சென்னீங்க. நல்ல வழியில காசு பணம் சம்பாரிச்சி நண்ம செஞ்சத்த அல்லா ஏத்துக் கொண்டீப்பான். கெட்ட வழியில காசு சம்பாரிச்சி செஞ்ச நன்மகள அல்லா ஏத்துக் கொண்டீப்பானா?''

''அந்த விஷயம் இப்பதான் எனக்கும் படுது. அமானிதமாக எனக்கிட்ட தந்த சொத்துகளுக்கு நான் மாறு செஞ்சீக்கிறேன். பொய் சாட்சி செல்ல வச்சி வழக்குகளுல வெத்தி எடுத்தீக்குறேன். லஞ்சம் குடுத்தீக்குறேன். வட்டி எடுத்தும் ஈக்குறேன். குடுத்தும் ஈக்குறேன். நீதி நியாயங்களுக்கு மாறா நான் எவ்வளவோ காசி பணம் சம்பாரிச்சி ஈக்குறேன். செய்யது, அப்பிடியெல்லாம் நான் சம்பாரிச்ச காசி பணத்துல ஒரு பகுதியைத்தான், நன்மையான காரியங்களுக்கு பயன் படுத்தி ஈக்குறேன். அதனால செய்யது, அல்லா என்ன நரகத்துல தூக்கி வீசுவானோ?

அப்போது அந்த இடத்துக்க ஹாஜா மர்லியா வந்து சேர்ந்தார்.

''சொர்கலோகத்துக்குப் போகப் போன மனிஷன் இப்ப நரகலோகத்துக்குப் போகப் போறாரோ? போங்கோ, போங்கோ. நீங்க எனக்குச் செஞ்ச பாவத்துக்கு அல்லா ஒங்கள நரகத்துலதான் போடுவான்.''

''அல்லா என்ன நரகத்துல போட மாட்டான். நீதான் எனக்கு நரகம். இந்த ஊடுதான் எனக்கு நரகம்.''

''அப்ப, நீங்க என்னத்துக்கு இங்க ஈக்க வேணும். ஒங்கட கூட்டம் குடும்பத்தோட, நீங்க சொர்கலோகத்துக்குப் போக வேண்டியதுதானே.''

''சரி நான் இப்பவே ஏண்ட கூட்டம் குடும்பத்தோட சொர்க்கலோகத்துக்குப் போகப் போறேன்.''

''போங்கோ, போங்கோ ஒங்கள தார் தடுத்தாங்க?''

ஆப்தின் ஹாஜியார் கட்டிலில் இருந்து எழுந்து நின்றார். முன்வாயில் வரை வந்தார். வெளியே எட்டிப் பார்த்தார். நிலவு உதித்திருந்தது. மெல்லிய பனி பொழிந்து கொண்டிருந்தது. மரங்கள் பூப்பூத்திருந்தன. அப்பூக்கள் மணம் பரப்பிக் கொண்டிருந்தன. இளம் காற்று உடலைத் தழுவிச் சென்றது.தான் காண்பது சுவர்க்கலோகமோ என அவருக்குள் ஒரு பிரமிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு விட்டது. உடனே அவர் வீட்டை விட்டு வெளியே வந்தார்.

"பாலாறு, தேனாறு, மதுவாறு எல்லாம் எங்க? ஹுூர்லீன்கள் எங்க? சரி சரி போகப் போக அதெல்லாம் தெரிபடு-மாயீக்கும்."

அவர் நடக்கத் தொடங்கினார். சுவர்க்கத்தை அடைவதே அவரின் குறிக்கோளாக இருந்தது. ஆனால் அவர் கண்ட அழகான காட்சிகள், சூரியன் உதிக்கத் தொடங்கியதும் குறைய ஆரம்பித்துவிட்டன. சற்று நேரத்தில் அவர் சேரிப்பகுதி-யொன்றுக்குள் வந்து விட்டார். எங்கும் துர் நாற்றம் வீச ஆரம்பித்து விட்டது. அங்கே பாதையோரங்களில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒழுங்கான ஆடைகள் இன்றி அரை நிர்வான கோலத்திலேயே காணப்பட்ட அவர்கள் ஹாஜியாரைக் கண்டதும் அவரைப் பின் தொடர ஆரம்பித்து விட்டனர். அவர் பயந்து போய் விட்டார்.

"நான் செஞ்ச பாவங்களுக்கு அல்லா என்ன நரகத்துக்கு அனுப்பி வச்சிட்டானா?"

அவர் ஓடத் தொடங்கினார். சிறுவர்கள் துறத்தத் தொடங்கி விட்டனர். அதில் ஒருவன் ஒரு கல்லை எடுத்து எறிய, அது அவரின் காலில் பட்டு வேதனையளித்தது. அவர் திரும்பிப் பார்க்காமல் ஓடினார். மீண்டும் மீண்டும் கல்லெறிகள் அவரைத் தாக்கத் தொடங்கின. பக்கத்தில் ஒரு கால்வாய் ஓடிக் கொண்டி-ருந்தது. சிறுவர்களிடம் இருந்து தப்புவதற்கு அதில் பாய்வதுதான் ஒரே வழி என அவருக்குத் தோன்றியது. அதனால் அதற்குள் அவர் பாய்ந்து விட்டார். உடலெங்கும் சகதியும் துர்நாற்றமும் வீச அவர் இறைவனுக்குக் குரல் கொடுத்தார்.

"யா அல்லா, நீ என்ன நரகத்தில போட்டிட்டாயா? நான் செஞ்ச பாவங்கள மன்னிச்சி, நண்மகள ஏத்து என்ன சொர்கலோகத்துக்கு அனுப்பி வை நாயனே. பாலாற, தேனாற, மதுவாற எனக்குக் காட்டி வை நாயனே. ஹுூர்லீன்கள எனக்கு ஹலாளாக்கித் தா நாயனே."

"ஹாஜியார், என்ன இது சத்தம் வச்சிறீங்க? தூக்கத்திலும் ஹுூர்லீன்களைப் பத்தித்தான் கதச்சிறீங்க. வெத்திலய நான் இடிச்சிட்டேன். அத உரலில ஈந்து எறக்கி ஒங்களுக்கு தரும் வரக்கிம் கொஞ்சம் பொருங்கோ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்யது, நான் அப்ப கண்டது கனவொண்டா?"

"ஹாஜியார், இந்த வெத்திலக் கலவைக்கு நல்லதொரு ஜால்பானத்துப் போயிலத் துண்டும் சேத்திருக்கிறேன். இத வாயில போட்டுக் கொண்டு படுங்கோ. நான் ஆயத்துக்குரிஷிய ஓதி ஊதிவிடுகிறேன்."

ஹாஜியார் வெற்றிலைக் கலவையை வாங்கி வாயிலே போட்டுக்கொள்ள, செய்யது ஆயத்துக் குர்ஷியை ஓத ஆயத்தமானான்.

**நன்றி:- படிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
12 DEC 2019
LIBRARY
700745
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்தவித மேல்பூச்சும் இல்லாமல், தனிமனிதர்களதும், சமுதாயத்தினதும் இயல்பான அசைவியக்கத்தை உ.நிசாரின் சிறுகதைகள் காட்டுகின்றன. சிறுகதைத் துறையில் அவர் தமக்கென ஒரு நிலையைச் தக்கவைத்து வருகிறார். நிசார் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் கால்பதித்துத் தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். அது பாராட்டத்தக்கது. எனினும் என்னைப் பொறுத்தவரையில், சிறுகதைத் துறையில் நிசார் ஆழமாகவும், அகலமாகவும் கால்பரப்பி வருகின்றார் என்றே தோன்றுகிறது. எதிர்காலத்தில் இலங்கைச் சிறுகதைகள் பற்றி நோக்கும் எவரும் நிசாரைத் தவிர்த்து, அதனை நிறைவு செய்ய முடியாத நிலையை அவர் ஏற்படுத்தி வருகின்றார். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மனச்சாட்சியின் குரலாக அவர் விளங்குகிறார்.

இலக்கியவாதி சமுதாயத்தின் குரலாக விளங்க வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக நிசாரின் சிறுகதைப் படைப்புகள் விளங்குகின்றன. அதனை நிரூபிக்கும் முறையில் இத்தொகுதியும் விளங்குவது பாராட்டத்தக்கது.

**பேராசிரியர் துரை மனோகரன்,**
முன்னால் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
இலங்கை

ISBN 978-955-0503-10-0

விலை ரூபா: 350/=

Printed@M.J.M.Printers-Mawanella 077-3706371,035-5678454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org